விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 23 வியாழக்கிழமை (06.06.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 169

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வித சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அதிகாரங்களை பறிக்க அரசு புதிய திட்டம்

## அமைச்சரவையில் இன்று சமர்ப்பிக்கவுள்ளது

(கொழும்பு)

**13ஆம் திருத்தத்தை திருத்துவதற்கு இனிமேல் மாகாண சபைகளின் அனுமதி தேவையில்லை அல்லது பெரும்பான்மை மாகாண சபைகளின் ஒப்புதல்கள் இருந்தால் போதும் என்ற புதிய திருத்தச் சட்ட மூல யோசனையை அமைச்சரவையில் அரசாங்கம் இன்று சமர்ப்பிக்க உள்ளது.**

இது காணி, பொலிஸ் அதிகாரங்களை மீளப்பெறுவது என்ற திட்டத்தைவிட மிகவும் மோசமானது. ஏனென்றால் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மட்டும் அல்ல, அவற்றைவிட இனிமேல் எஞ்சியுள்ள எந்த ஒரு அதிகாரத்தையும் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில் உள்ள எந்த ஒரு மாகாணசபைகளிடம் இருந்தும் வெறும் நாடாளுமன்ற பெரும்பான்மை மூலம் மீளப்பெறுவதற்கான அதிகாரத்தை இந்த புதிய யோசனை மத்திய அரசாங்கத்துக்கு வழங்குகின்றது.

எனவே 13-ம் திருத்தத்தை பாதுகாப்போம் என்று அரசாங்கத்துக்குள் இருந்தவாறு கூறிவந்த ஈபிடிபி, முஸ்லிம் காங்கிரஸ், இதொகா கட்சிகளை சார்ந்த அமைச்சர்களான டக்ளஸ்தேவானந்தா, ரவூப் ஹக்கீம், தொண்டமான் இடதுசாரி அமைச்சர்கள் வாசுதேவ நாணயக்கார, டியூ குணசேகர, திஸ்ஸ விதாரண மற்றும் அமைச்சர்கள் ராஜித சேனாரத்ன, டிலான் பெரேரா ஆகியோர் தம் நிலைப்பாடுகளை அரசாங்கத்துக்குள்ளே அமைச்சரவையல் பகிரங்கப்படுத்தும் நேரம வந்துவிட்டது என அரசியல் அவதானிகள் பலரும் கருதது வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப் படும்இயக்கம் நேற்று கொழும்பில் நடத்திய ஊடக மாநாட்டில

*(19ஆம் பக்கம் பார்க்க)*

# சர்வதேச சமூகம் எப்போதும் தமிழர் பக்கமே நிற்கும்

## ஐக்கிய சோசலிச கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சியின் கீழ் இந்த நாட்டில்இனவாதத் தீ கொழுந்து விட்டு எரிகின்றது.

13 ஒழிப்புக் கோஷம் இதற்குச் சிறந்த சான்றாகும். தமிழர் பிரச்சினைக்கு அடிப்படைத் தீர்வாக அமையும் 13-வது திருத்தச் சட்டத்தை அரசாங்கம் நீக்குமானால், இந்த நாடு இரண்டாகப் பிளவுபடுவதை எவராலும் தடுக்க முடியாது என்பதுடன், அன்று உலகம்கூட தமிழர்களுக்குச் சார்பாகவே நிற்கும் என ஐக்கிய சோசலிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய விடயமாக உருவெடுத்துள்ள அரசமைபபின் 13-வது திருத்தச் சட்டம்



தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அவர், மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணசபைத் தேர்தலுக்கு நீதிமன்ற தடையுத்தரவொன்றைப் பெற்றுக் கொள்ளும்நடவடிக்கையில்அதி தீவிரமாக ஈடுபட்டுள்ள மகிந்த அரசு, சட்டத்தைப்பகடையாகப் பயன்படுத்தி ஜனநாயகத்தைப் படுகொலை செய்யப்பார்க்கின்றது.

வடக்குத் தேர்தலுக்கு நீதிமன்றத் தடையுத்தரவைப

*(19ஆம் பக்கம் பார்க்க)*

**காணாமல் போன**

# பிரகீத் பிரான்சில்!

(கொழும்பு)

காணாமல் போனதாகத் தெரிவிக்கப்படும் லங்கா ஈ நியூஸ் இணையத் தளத்தின ஊடகவியலாளர் பிரகீத எக்னெலிகொட பிரான்ஸில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கார்ட்டூன் மற்றும் பத்தி எழுத்தாளர்ாக கடமையாற்றிய ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடந்த 2010ம் ஆண்டில் காணா

*(20ஆம் பக்கம் பார்க்க)*

# வடக்குத் தேர்தல் நிச்சயம் முதலமைச்சர் நான்தான்

## அமைச்சர் டக்ளஸ் திட்டவட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்குமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிலோ அல்லது ஈழ மக்கள் ஜனநாயககட்சியில் தனித்தோ போட்டியிடலாம். ஆனால் முதலமைச்சர் நான்தான் என பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில்கள் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

அத்தோடு வடக்கு மாகாண சபைத்தேர்தலை எதிர்த்து தீக்குளித்தவர் ஒரு கள்ள பக்கு எனவும்அவர் பலமுறை கேடுகளில் ஈடுபட்டவர் என்பது அரசாங்கத்திற்கு தெரியும எனவே தேர்தலை நடத்த விடாது எடுக்கப்படும் இவ்வாறான முயற்சிகள் ஒரு போதும் பயனளிக்காது எனவும் தெரிவித்தார்.

யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளா சந்திப

*(19ஆம் பக்கம் பார்க்க)*

# நியூசிலாந்து ஆதரவு



(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும நவம்பர் மாதம் இடம் பெறவுள்ள பொதுநலவாய நாடுகள் மாநாட்டிற்கு நியூஸிலாந்து பூரணமாக ஆதரவளிக்கும் என்று நியூஸிலாந்து வெளிவிவகார அமைச்சர் மறே மக்கேலி தெரிவித்

*(19ஆம் பக்கம் பார்க்க)*

# உகண்டா ஜனாதிபதிக்கு மகிந்த முக்கியத்துவம்?

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக பயணம் மேற்கொண்ட உகண்டா ஜனாதிபதி யொவேரி முசெவேனியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விமான நிலையத்தில் வைத்து சந்



தித்து மதிய விருந்து அளித்துள்ளார்.

உகண்டா ஜனாதிபதி யொவேரி முசெவேனி கிழக்காசியாவுக்கான பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் வழியில், அவா பயணம் செய்த விமானம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கிய போது அவர் சுமார் ஒரு மணித்தியாலம் விமான நிலையத்தில் தங்கியிருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ தனது அமைச்சர்களுடன் விமான நிலையம் சென்று அவரை வரவேற்று பேச்சு வார்த்தை நடத்தியதுடன், அவருக்கு மதிய விருந்தும் அளித்துக் கௌரவித்தார்.

அமைச்சர் களான ஜி.எல். பீரிஸ,

*(20ஆம் பக்கம் பார்க்க)*

# தேர்தலுக்கு எதிராக கையெழுத்து சேகரிப்பு

(கொழும்பு)

வடமாகாண சபை தேர்தலுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் மக்கள், அரச பணியாளர்களிடம் கையெழுத் துக்கள் பெறப் பட்டுள்ளன.


தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்சவினால் கடந்த மூன்றாம் திகதி வடமாகாண சபை தேர்தலுக்கு

*(19ஆம் பக்கம் பார்க்க)*

# இந்திய நாடாளுமன்ற குழுவினருடன் யாழ்.சிவில் சமூக பிரதிநிதிகள் சந்திப்பு!

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியிலும் பல்வேறு



பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இராணுவத்தினரால்தமிழ் மக்களுக்கு [illegible] தமான காணிகள் சுவீகரிக்கப்படுவதும், இனம்தெரியாத நபர்களினால் இந்து ஆலயங்கள் திட்டமிட்டு சேதமாக்கப் படுவதும் தொடாந்த வணணமேயுள்ளது என யாழ்ப்பாணத திற்கு நேற்று வருகைதந்த இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு யாழ்.சிவில் சமூகப்பிரதிநிதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இலங்கைக்கு நேற்று முன்தினம் வருகைதந்த இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் மத்திய அமைச்சரும் நாடாளுமன்ற

*(20ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# இலங்கை - சீனா பாதுகாப்பு உடன்படிக்கை;

## கடும் அதிர்ச்சியில் இந்தியா

சீனாவுக்கு அண்மையில் உத்தியோக பூர்வ விஜயம் செய்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான உயர்மட்டக் குழு அந்நாட்டுடன் பாதுகாப்பு விவகாரம் சம்பந்தமாக இரகசிய உடன்பாட்டை ஏற்படுத்தியிருப்பதானது இந்தியாவுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான உயர்மட்டக் குழு தமது சீன விஜயத்தின் போது வர்த்தக ஒத்துழைப்பு, நீரியல் பாதுகாப்பு, தொழில்நுட்பம், வீதி அபிவிருத்தி என பல உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்தாலும், இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு தொடர்பிலான புரிந்துணர்வு ஒப்பந்த விவகாரமே தற்போது சர்ச்சைக்குரிய விடயமாக உருவெடுத்துள்ளது.

குறிப்பாக கடற்படைப் பயிற்சி, படையினருக்கான தொழில்நுட்ப பயிற்சி, படைத்துறைக்கான தளபாட உதவி ஆகிய விடயங்கள் பாதுகாப்பு சம்பந்தமான உடன்படிக்கையில் வெளிப்படையாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதற்கு புறம்பாகவும் சில விடயங்கள் குறித்து இலங்கை சீனாவுடன் இரசியமான முறையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பு, வான்பரப்பு ஆகியவற்றில் சீன படைத்தரப்பின் பிரசன்னம், இரு நாடுகளுக்கும் இடையிலான படைத்துறை சார்ந்த கருத்துப் பரிமாற்றல்கள், புலனாய்வுத் தகவல்கள், செய்தி தொடர்பாடல்கள் உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பிலேயே இவ்வாறு இரகசியமாக இணக்கம் காணப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.

இராஜதந்திரமட்டத்தில் கசிந்துள்ள இத்தகவலானது புதுடில்லிக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று. சீனப் பிரதமர் டில்லிக்கு விஜயம் செய்து நாடு திரும்பிய நிலையில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அழைத்து சீனா முக்கிய சில உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளமை குறித்து புதுடில்லி கவனம் செலுத்தியுள்ளது என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, வடக்கில் புகையிரதப் பாதை புனரமைப்புப் பணிகளை இந்தியா மேற்கொண்டு வரும் நிலையில் அதற்குப் போட்டியாக அப்பிரதேசத்துக்கான அதிவேக நெடுஞ்சாலை அமைப்பது தொடர்பிலான உடன்படிக்கை சீனாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ளமையும் புதுடில்லிக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரியவருகின்றது.

நான்கு நாட்கள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அண்மையில் சீனாவுக்கு சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான உயர்மட்டக் குழு அந்நாட்டின் ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் தலைவர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்து முக்கிய பேச்சுகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## வட,கிழக்கை இணைக்காத சட்ட மூலம் பாராளுமன்றில்

### கண்டனம் வெளியிடுகிறது த.தே.கூ

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்து இருக்கும் மாகாணங்கள் தாம் விரும்பினாலும்ஒன்றிணைய முடியாது என்ற வகையில் அரசாங்கம் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தத்தை கொண்டு வந்து அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பு பான்ஸ் பிளேஸில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த சட்டமூலத்தின்படி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் எதிர்காலத்தில் தாங்கள் விரும்பினாலும் கூட அல்லது அதற்கான பிரேரணை நிறைவேற்றினாலும் கூட ஒரு போதும் இணைய முடியாத நிலையை உருவாகும்.

மாகாண சபைகள் சட்டமூலம் ஒன்று கொண்டு வரப்பட வேண்டுமானால் அதற்கு சகல மாகாண சபைகளினதும் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

ஆனால்தற்போது கொண்டுவரப்படவுள்ள சட்டமூலத்தின் படி பெரும்பான்மையான மாகாணங்கள் ஒப்புதல் அளித்தால் குறித்த சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களுடன் தற்போது வட மாகாணசபைத் தேர்தலை நடத்தினாலும் தேர்தல் முடிபடைந்தவுடன் மாகாண சபைகளின் பெரும்பான்மையை வைத்து அதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி அவ்வதிகாரங்களை இல்லாமல் செய்வதற்கு அரசு தீர்மானித்தே அதனை மேற்கொள்கின்றது.

இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக எதிர்ப்பதுடன் கண்டனத்தையும் தெரிவிக்கின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டதன்படி வடக்கு, கிழக்கு என்பது தமிழ் மக்களின் இணைந்த வரலாற்று பூர்வமான நிலம் என்றடிப்படையில் அது 18 வருடங்கள் இணைந்து இருந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## வன்முறை நாடாகவே இலங்கையை பொதுநலவாயம் கருத வேண்டும்

### அணுகுமுறையை மாற்றுமாறு கனடா கோரிக்கை

இலங்கை விடயத்தில் பொதுநலவாய நாடுகளின் பெறுமதிகள் இழக்கப்பட்டு வருவதாக கனடா மீண்டும் குற்றம் சுமத்தியுள்ளது. எனவே இவ்வாறான வன்முறைகள் இடம்பெற்ற நாடுகளை இதற்கு முன்னர் பொதுநலவாய நாடுகள் எவ்வாறு அணுகியதோ அதேபோல, இலங்கையையும் அணுக வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

கனடாவின் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தூதுவர் ஹூஜ் சேகல் இதனை பி.பி.சி செய்தி சேவைக்கு தெரிவித்துள்ளார்.

இலங்கை தமது பொறுப்புக்கூறும் தன்மையை நிலைநிறுத்தும் வகையில் எந்த விதமான முன்னெடுப்புகளையும் மேற்கொள்வதற்கான சமிக்ஞைகள் தென்படவில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை கொழும்பில் இந்த வருடம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கனடாவின் எந்த அளவான குழு பிரசன்னமாகும் என்பது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## "இணையத்தளம் 2012" பரிசளிப்பு வைபவம்

யாழ்.பல்கலைக்கழக கணினிச்சங்கத்தினர் வடமாகாண கல்வித்திணைக்களத்துடன் இணைந்து யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் "இணையத்தளம் 2012" என்ற தலைப்பில் இணையத்தள வடிவமைப்பு போட்டி ஒன்றினை நடத்தியிருந்தனர். அப்போட்டி வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவிருக்கிறது. கல்வி அமைச்சின் தகவல் தொழில்நுட்பத்திற்கான நிறைவேற்று அதிகாரி தலைமை ஏற்கும் இந்நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

கடந்த வருடம் இப்போட்டி யாழ்.மாவட்ட மட்டத்தில் இடம்பெற்றாலும் இவ்வருடம் முதல் இப்போட்டியினை வடமாகாண மட்டத்தில் நடத்த கணினிச்சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)


**தேவை**

சிறிய Full Body AC வான் ஒன்று மாத வாடகைக்கு அல்லது விற்பனைக்கு தேவை.

தொடர்பு: 0750442099

(2943)

**பிள்ளையார் இன்**

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 120/-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 120/-

(பி-3409) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா (Prima), கிறீன் வலி (Green Vally) & சந்தலங்கா(Sandalanka) 'A' தரமான புறொயிலர் கோழிக் குஞ்சுகள் நியாயமான விலையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். தொகையான கொள்வனவாளர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும். முன் பதிவு செய்யவும்.



1.நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 2226944

2.சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை.
தொ.பே. இல. 077 8996085

(2938)


## மரண அறிவித்தல்

### M.S.விஸ்வலிங்கம்

(ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ்.பல்கலைக் கழகம், விஸ்வா திருமண சேவை - கோண்டாவில்.)



M.S.விஸ்வலிங்கம் 03.06.2013 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி வி.யோகேஸ்வரி - ஆசிரியர் (நெசவு) தொழில் துறை திணைக்களம் கந்தர்மடம் - அவர்களின் அன்புக் கணவரும், அனந்தன் (பாதுகாப்பு உத்தியோகத்தர் - யாழ்.பல்கலைக் கழகம்), அகிலன் (பழைய மாணவன்- கொக்குவில் இந்துக் கல்லூரி- 2008 A/L, கலை), திருமதி ஜஸ்ரின் ஜோய் நளாயினி (ஜேர்மன்), திருமதி ஜேந்திரன் ராஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னார் அ.ஜஸ்ரின் ஜோய் (போதகர்-ஜேர்மனி) து.ஜேந்திரன் (மாணவன் M.S.C நோர்தேன் பிறியா பல்கலைக்கழகம் லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும்

கபிரியேல், வலன்ரீனா, விக்ரோரியா ஆகியோரின் பேரனும், ப.கனகலிங்கம் (இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் கே.கே.எஸ்) ப.குகராஜா (லிகிதர், யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அ.கனகம்மா, ஐ.சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (07.06.2013) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்று 11.00 மணிக்கு அஞ்சலி உரை நிகழ்வு நடைபெற்று பி.ப 1.00 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

சென் செபஸ்தியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு. (2948) 0784952798, 0215680498


யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் (தலைமையகம்)



**அறிவித்தல்**


ஓட்டோ உரிமையாளர், பயணிகள், பொதுமக்களுக்கான

**அன்பான வேண்டுகோள்**

யாழ்.மாவட்டத்தில் வாடகைச் சேவையிலீடுபடும் ஓட்டோக்கள் வாடகைக் கட்டண மீற்றர்பொருத்தியும் யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட ஓட்டோக்கள் யாழ்.மாநகரசபை முதல்வரால் அனுமதிக்கப்பட்ட தரிப்பிட ஸ்ரிக்கர், மீற்றர் பொருத்தியும் சங்க விதி முறைக்கமைய சேவையில்ஈடுபடுமாறும்மீறுவோருக்கு தரிப்பிட அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் வாடகை ஓட்டோக்களில் பயணம் செய்யும் பயணிகள் வாடகை கட்டண மீற்றர் ஓட்டோ தரிப்பிட ஸ்ரிக்கர் ஒட்டப்பட்ட ஓட்டோக்களில் தமது பயணத்தை சுகமாக மேற்கொள்ளுமாறும் அவ்வாறில்லாத ஓட்டோக்களில் பயணிக்கும் பயணிகளுக்கு பயணத்தின்போது ஏற்படும் அசௌகரியங்களுக்கு எமது சங்கம் எவ்விதத்திலும் பொறுப்பாளிகளாக இருக்க மாட்டாது எனவும் அறியத் தருகின்றோம்.

யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் (தலைமையகம்)
நிர்வாகம்

(சி-3521)





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அத்வைதம்

ஒரு ஊரிலே முனிவர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு சிஷ்யர் இருந்தார்.

ஒரு சமயம் அந்த முனிவர் வெளியே எங்கேயோ கிளம்பிப் போனார். மீண்டும் ஆயிரம் வருடங்கள் கடந்த நிலையில் திரும்பி வந்தார்.

அது எப்படி ஆயிரம் வருடங்கள் கடந்த நிலை... என்று கேட்கக் கூடாது. முனிவர்களுக்கு எல்லாம் இது சகஜம்.

ஆயிரம் வருடங்கள் கடந்த நிலையில் அவர் திரும்பி வந்ததனால் சிஷ்யருக்கு தனது குருவை அடையாளம் தெரியவில்லை. இருந்தாலும் கண்டுபிடிக்க முடியவில்லை. யாரோ ஒரு பெரிய முனிவர் வந்திருக்கிறார் என்று நினைத்தார்.

"பசிக்கிறது... சாப்பாடு போடு" என்று முனிவர் கூறினார்.

உடனே அந்த சிஷ்யர் மனைவியிடம் பக்குவமாகக் கூறி, சாப்பாடு போட்டார். அவரும் சாப்பிட்டு முடித்தார்.

"என்ன... திருப்தியாக சாப்பிட்டீர்களா?" என்று கேட்டார் சிஷ்யர்.

உடனே முனிவர் நிமிர்ந்து பார்த்து, "நான் எங்கே சாப்பிட்டேன்? எவனுக்குப் பசியோ அவன்தான் சாப்பிடுவான். அவனுக்குத் தானே திருப்தி ஏற்படும்" என்றார்.

சிஷ்யருக்கோ எதுவுமே புரியவில்லை; அமைதியாக நின்றார்.

பரிதாபமாக முனிவரைப் பார்த்தார்; அதன்பின் முனிவர் சொன்னார்; "இப்போது சாப்பிட்டது நான் இல்லை" எனது தேகம்... அதனாலே தேகத்திற்குத்தான் திருப்தியோ அதிருப்தியோ ஏற்படும். நான் ஆன்மா. எனக்கு அதிலே திருப்தியோ அதிருப்தியோ இல்லை" என்றார் முனிவர்.

இதைக்கேட்டதும் அந்த சிஷ்யருக்கு இதுதான் நம்முடைய குரு என்பது ஞாபகத்திற்கு வந்தது. அவரது காலிலே விழுந்து வணங்கினார்.

அதன்பின் அந்த முனிவர் வெளியே சென்று விட்டு ஆயிரம் வருடங்கள் கடந்த நிலையில் மீண்டும் திரும்பி வந்தார்.

அவர் திரும்பி ஊருக்குள் வந்து கொண்டிருக்கையில், அந்தச் சிஷ்யர் ஏதோ ஒரு மூட்டையை தலையிலே வைத்துக் கொண்டு தெருவோரமாக நின்று கொண்டிருந்தார். முனிவர் இதைப் பார்த்து விட்டு, "ஏன் இப்படி தெருவோரமாக ஒதுங்கி நிற்கி றீர்கள்" என்று கேட்டார்.

"ராஜா யானை மேலே அமர்ந்திருந்து பவனி வந்து கொண்டிருக்கிறார். அந்த வேடிக்கையைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் சிஷ்யர்.

இதிலே யார் ராஜா? எது யானை? என்று கேட்டார்.

சீடர் ஆச்சரியத்துடன் முனிவரைப் பார்த்து விளக்கம் கொடுத்தார்.

"அதாவது மேலே இருக்கிறவர்தான் ராஜா... கீழே இருக்கிறது யானை" என்றார்.

"அது சரி... "மேலே" என்று சொல்வது, என்றால் என்ன? "கீழே" என்று சொல்வது என்றால் என்ன? என்று முனிவர் கேட்டார்.

உடனே இவர் என்ன செய்தார் தெரியுமா?

அப்படியே ஒரே தாவாத்தாவி அந்த முனிவரின் தோளின் மேலே அமர்ந்து கொண்டார்.

அமர்ந்து கொண்ட அவர்; "மேலே", "கீழே" என்றால் என்ன என்று தானே கேட்டீர்கள்?" இதோ நான் மேலே இருக்கிறேன். நீங்கள் கீழே இருக்கிறீர்கள்– என்றார்.

முனிவர் அவரை விட்டு வைக்கவில்லை. அடுத்த கேள்வியைத் தொடுத்தார்.

"அது சரி! நான் "மேலே" நீ "கீழே" என்று சொல்லுகிறாய். நான் யார்? நீ யார்?" என்றார்.

அப்போதுதான் இவருக்கு, தன்னுடைய குரு என்பது தெரிந்தது. உடனே காலிலே விழுந்து வணங்கினார்.

அத்வைதம் என்றால் என்ன என்பதை விளக்குவதற்காக ஜகடபாதர் அரசர் ரகுகுணனுக்கு எடுத்துக்கூறிய கதை இது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் முத்தமிழ் விழா இரண்டாம் நிகழ்வு

கோப்பாய் ஆசிரியர் கலா சாலையின் முத்தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழாவின் முதல் நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் நாளை வெள்ளிக்கிழமை இரண்டாம் நாள் நிகழ்வுகள் முற்பகல் 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெறவுள்ளன.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இரண்டாம் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி ராஜராஜேஸ்வரி சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இனிய விருந்தினர்களாக யாழ்ப்பாண தமிழ் சங்கத் தலைவரும், யாழ். பல்கலைக்கழக பீடாதிபதியான பேராசிரியர் தி. வேல்நம்பி, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சந்திரராசா, கோப்பாய் வலி.கிழக்கு பிரதேச செயலர் ம. பிரதீபன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பாரம்பரிய கலைகளைக் கொண்ட பண்பாட்டு ஊர்வலம், மங்கல இசை, கடவுள் வணக்கம், தமிழ் தெய்வ வணக்கம் என்பன இடம் பெறவுள்ளன. தொடர்ந்து தனியிசை, அடக்கம் அமரருள் உய்க்கும் எனும் கருப்பொருளிலான பேச்சு, கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் அ.பௌநந்தி தலைமையிலான விஞ்சுகவி செய்து நெஞ்சின் நிலை சொல்வோம் எனும் தொனிப்பொருளிலான கவியரங்கம் மற்றும் குழுப்பாடல், தனி குழு நடனங்கள், சூடிக் கொடுத்த சுடர்க்கொடி எனும் நாட்டிய நாடகம் என்பன இடம் பெறவுள் ளன.

தொடர்ந்து பேராசிரியர் தி. வேல்நம்பி நடுவராக கலந்து கொள்ளும் இன்றைய கற்பித்தல் செயன்முறையில் பெரிதும் வளப்படுத்தப்பட வேண்டியது மாணவர்களது கற்றலே! ஆசிரியது கற்பித்தலே! என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம் பெறவுள்ளது.

இப்பட்டிமன்றத்தில் இன்றைய கற்றல் கற்பித்தல்செயன்முறையில் பெரிதும் வளப்படுத்த வேண்டியது, மாணவர்களது கற்றலே என்ற கருத்து சார்பாக ஆரம்பக் கல்வி ஏ பிரிவின் திருமதி க. தமிழ்ச்செல்வி, திருமதி க.கஸ்தூரி, க.கஜேந்தினி ஆகியோர்விவாதிக்கவுள்ளனர். வளப்படுத் தப்பட வேண்டியது ஆசிரியர்களது கற்பித்தலே என்ற கருத்துக்கு சார் பாக விஞ்ஞான பிரிவின் திருமதி ய. கயானி திருமதி ஆர்.என் சிந்துஜா, திருமதி ஹெறால்மேரி ரோசா ஆகியோ ரும் விவாதிக்கவுள்ளனர். தொடர் ந்து பாஞ்சாலி சபதம் நாட்டுக்கூத் தும் நடைபெறவுள்ளன. (அ-5)

## பேருந்து மோதியதில் மாணவி காயம்

(மல்லாவி)

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பேருந்து ஒன்று மோதியதில், பேருந்துக்காக காத்திருந்த மாணவியின் தலையிலும் கையிலும் உட்காயம் ஏற்பட்ட நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் மாங்குளத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை 5.30 மணியளவில் இடம் பெற் றுள்ளது.

இவ் விபத்தில் மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் தரம் 12 இல் கல்வி கற்கும் தங்கவேல் ஜமேசா என்பவரே காயமடைந்துள்ளார். மாங்குளம் ஆதர்ர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவி, மேலதிக சிகிச்சைக்காக நோயாளர் காவு வண்டிமூலம் கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-15)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 30 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 70-140 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 80 | 120 |
| தக்காளி | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 60 |
| கோவா | 140 | 100 | 120 |
| கரட் | 160 | 120 | 160 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 200 | 200-240 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 75 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 |
| பயற்றங்காய் | 60 | 50 | 50 |
| லீக்ஸ் | 120 | 140 | 140 |
| பீற்றூட் | 100 | 70 | 100 |
| கறிமிளகாய் | 120 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 30 | 300 | 480 |
| போஞ்சி | 160 | 80 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 200 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 120 | 80 | 120 |

## இராசி பலன்

*06.06.2013*
*(வைகாசி 23, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு*
*திரியோதசி மாலை 6.19 மணிவரை*
*பரணி பிற்பகல் 4.01 மணிவரை*
*இராகுகாலம் 1.22-2.52 மணிவரை*
*சுபநேரம் 7.22-8.52 மணிவரை*
*கார்த்திகை விரதம், பிரதோச விரதம்*

**மேடம்** ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான இலாபம் கிடைக்கலாம், பணியில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**இடபம்** சேமிப்பில் சிறிது கரையாலாம், குடும்பத்தாருடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயல் ஒன்றைச் செய்து காட்டுவீர்கள், எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்** தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள், உங்கள் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டு கிடைக்கும், அந்நியர் உதவியுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**சிங்கம்** உடல்நலம் சீராகும், போட்டியாக இருந்தவர் விலகுவர், வருங்கால நலன் கருதி புதிய திட்டம் ஒன்றைத் தீட்டுவீர்கள், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், கௌரவக் குறைவான நாள், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு பிடிக்கலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் பயணங்களால் பலனுண்டு, தம்பதியினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் நாள்.

**விருச்சிகம்** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலனுண்டு, புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பொதுத் தொண்டுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சொத்துக்கள் தொடர்பில் ஆதாயம் கிடைக்கும்.

**மகரம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பிறருக்காக எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், பயணங்கள் தித்திக்க வைக்கும், அதிர்ஷ்டகரமான நாள், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**கும்பம்** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், உடன் பிறப்புக்கள் உதவிக் கரம் நீட்டுவர், சுவாரஸ்யமான நாள், நீண்ட நாளைய பிணக்குகள் நல்ல முடிவுக்கு வரும்.

**மீனம்** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், இறைவழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனந்தெரியாதோரின் தாக்குதலில் ஒருவர் காயம்

(கரணவாய்)

துவிச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த நபரை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்ற இனந்தெரியாத நபர்கள் தாக்கியதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்தவர் படுகாயமடைந்து மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.




இச்சம்பவம் கடந்த 3 ஆம் திகதி இரவு 9 மணிக்கு கொடிகாமம் வீதியில் இடம்பெற்றுள்ளது.


சம்பவம் தொடர்பில் தெரிய வருவது,

குறித்த நபர் துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்றவர்கள் வழிமறித்து தாக்கியதிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ஸ்ரீநாரதா வீதியைச் சேர்ந்த லச்சுமணன் ராஜேஸ்வரன் வயது 32 என்ற நபரே இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-60)

## உலக சுற்றாடல் தினம் 2013



நன்றி: அததெரண

# நெல்லியடி மைய பகுதியில் மதுபானசாலை அமைப்பு

## மக்கள் விசனம்

(கரணவாய்)

மூன்றாவதாக அமைக்கப்பட்ட மதுபான நிலையத்தால் நெல்லியடியில் மக்கள் மத்தியில் அதிர்ச்சி நிலை ஏற்பட்டுள்ளது.

கொடிகாமம் வீதியில் இருந்த மதுபான நிலையம் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தமையால் 6 மாதங்களுக்கு முன்னர் மூடப்பட்டது.

தற்பொழுது இது நெல்லியடி பொதுச்சந்தை, நெல்லியடி பொலிஸ் நிலையம், தனியார் வங்கிகள் ஆகியவை உள்ள யாழ்ப்பாண பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை செல்வோர் சந்தைக்கு பல இடங்களிலும் இருந்து வருவோர் பெரும் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

அத்துடன் இம் மதுபானசாலை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது.

ஆகவே, நெல்லியடி பகுதியில் உள்ள மதுபான சாலையை நெல்லியடி மக்களின் நலன் கருதி அகற்றி மக்கள் செறிவு குறைந்த இடத்தில் அமைக்குமாறு கேட்டுக் கொள்கின்றனர். (அ-3-60)

# முகாமைத்துவ உதவியாளர் பரீட்சை 16 ஆம் திகதி நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக விண்ணப்பித்தவர்களுக்கான முகாமைத்துவ உதவியாளர் பரீட்சை எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களிலும் மொத்தமாக 37 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் இப் பரீட்சையில் 5 ஆயிரத்து 300 பரீட்சார்த்திகள் பங்கேற்கவுள்ளனர்.

இவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (அ-5)

# கவிதை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

த.ஜெயசீலனின் **எழுதாத ஒரு கவிதை** எனும் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வின் வாழ்த்துரைகளை யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், கலாநிதி ஆறு.திருமுருகனும் நூல் அறிமுக உரையை கம்பவாரிதி இ.ஜெயராஜ் ஆகியோரும் ஆற்றவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியினை வடமாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் கல்வி பண்பாட்டலுவல்கள் செயலாளர் எஸ்.சத்தியசீலன் பெற்றுக் கொள்ள நயப்புரையை கலாநிதி த.கலாமணி, கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ)

# ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் வைகாசி மாதத்துக்கான ஞானச்சுடர் இதழ் வெளிவந்துள்ளது.

இவ்விதழானது கவிதைகள், சிறுவர் கதைகள், சைவ சமய வினா விடைகள், தமிழ் சைவ வரலாற்று கட்டுரைகள் என்பவற்றை உள்ளடக்கி வெளிவந்துள்ளது. (அ-2-5)

# பிள்ளையார் ஆலயத்தில் திருட்டு

(கரணவாய்)

நவிண்டில் மத்தி கரணவாய் பகுதியில் உள்ள கோலனாய் பிள்ளையார் ஆலயத்தின் கூரை ஓட்டினூடாக கீழிறங்கி அங்கிருந்த பஞ்சாட்சரத் தட்டுக்கள் மற்றும் மூன்று விளக்குகள் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

நெல்லியடி பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-60)

# சிரமதானப் பணி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினரால் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மன்ற வளாகத்தை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் பணி நேற்று காலை மேற்கொள்ளப்பட்டது.

இதில் தவிசாளர், உப தவிசாளர் உட்பட சகல உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இச்சிரமதானத்தின் போது விஷப் பாம்பு ஒன்றும் அடித்துக் கொல்லப் பட்டது. (அ-3-29)

# பேருந்து தரிப்பிடம் உடைப்பு; உரிமையாளர் முறைப்பாடு

(கரவெட்டி)

பருத்தித்துறை நகரசபையின் அனுமதியின்றியும் கட்டட உரிமையாளருக்கு தெரியாமலும் பருத்தித்துறை மருதடி பேருந்து தரிப்பிடத்தை உடைத்து சேதப்படுத்தி அகற்றிய நபருக்கு எதிராக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கட்டட உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மருதடி வைரவர் ஆலயத்திற்கு அண்மித்த பகுதியில் பருத்தித்துறை நகர சபைக்கு சொந்தமான நிலத்தில் நீண்ட காலத்திற்கு முன்னர் பருத்தித்துறை கலட்டியை சேர்ந்த நபர் ஒருவரால் அவரது உறவினரின் நினைவாக அந்த தரிப்பிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அப்பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் அந்நிலையத்தை சட்டவிரோதமான முறையில் உடைத்து அகற்றியதுடன் மருதடி வைரவர் ஆலயத்திற்கு அருகில் உள்ள இடத்தில் புதிதாக பேருந்து தரிப்பிடத்தை நிர்மாணிக்கும் பணியிலும் ஈடுபட்டு வந்துள்ளார்.

தற்பொழுது நிர்மாணிக்கும் இக்கட்டடத்தின் (பேருந்து தரிப்பிடத்தின்) இடம் பருத்தித்துறை நகர சபைக்கு சொந்தமானதுடன் ஆலயத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும் அப்பகுதியில் உள்ள கிராமத்திற்கு செல்லும பிரதான வாயிலும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

நகர சபையின் அனுமதியின்றி உடைக்கப்பட்டதாலும் பேருந்து நிலையத்தை அதன் உரிமையாளருக்கு தெரியாமல் உடைத்து அகற்றப்பட்டமையாலும் ஆலயத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டு வருவதாலும் அக்கிராமத்திற்கு செல்லும் பிரதான வாயிலை மறைத்து கட்டப்படுவதனாலும் குறித்த நபருக்கு எதிராக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. (அ-3-24)

# பொன்னம்பலம் சந்தியில் நேற்று வாகன விபத்து

(யாழ்ப்பாணம்)

டிப்பர் வாகனமும் இராணுவ பிக்கப் வாகனமும் விபத்திற்குள்ளானதில் அதில் பயணித்தவர்கள் சிறு காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

இவ்விபத்து சம்பவம் நேற்று மதியம் 1.45 மணியளவில் ஏ-9 வீதியில் அமைந்துள்ள பொன்னம்பலம் சந்திக்கு அருகாமையில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

மணல் ஏற்றிக் கொண்டு வந்த டிப்பர் வாகனம் ஒன்று ஏ-9 வீதியில் அமைந்துள்ள பொன்னம்பலம் சந்திக்கு அண்மையில் உள்ள புதி



தாக நிர்மாணிக்கப்பட்டு வரும் TATA கம்பனியினுள் நுழைய முற்படுகையில் அதனை பின்னால் பயணித்த இராணுவ டிரக் வாகனம் மோதியதில் டிப்பர் வாகனம் விபத்திற்குள்ளானது.

இதில் டிரக் வாகனத்தில் பயணித்த சாரதியும் படைச்சிப்பாயும் சிறு காயங்களுக்குள்ளாகினர். (அ-2)







யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் 18 வயதுக்குட்பட்ட புற்று நோயால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு செரண்டிப் சிறுவர் இல்லம் என்ற நிறுவனம் தலா 5 ஆயிரம் ரூபா வைப்புக் கொண்ட வங்கிப் புத்தகமும் எச்.என்.பி. வங்கி குறித்த சிறுவர்களுக்கு பரிசுப் பொருட்கள், பயன்தரு மரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் திருமதி கிருஷாந்தி ஜெயசூரியன் மாணவர் ஒருவருக்கு வங்கிப் புத்தகம், மரக்கன்று என்பவற்றை வழங்கி வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சபைகளின் பிரச்சினைகளை ஆராய ஐவர் கொண்ட விசாரணைக் குழுக்கள் நியமனம்

**" யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆளு கையின் கீழுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகச் சிக்கல் சம்பந்தமாக கடந்த பெப்ரவரி மாதமும் இம்மாதம் முதலாம் திகதியும் நடைபெற்ற மத்திய செயலர் குழுக்கூட்டத்தில் ஆராயப்பட்டதாக தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் மாவை. சேனாதிராசா அறிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,**

வலிகாமம் தெற்குமேற்கு பிரதேசசபை மற்றும் வல்வெட்டித்துறை நகரசபை ஆகிய வற்றின் நிலமை குறித்து பரிசீலனை செய்த பின்பு கூட்டமைப்பு கட்சிகளின் சார்பில் ஐவர் கொண்ட ஒழுக்காற்று விசாரணைக்குழுக் களை தனித்தனியாக நியமிப்பதென தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒழுக்காற்று விசாரணைக்குழுக்கள் சம்பந்தப்பட்ட சபைகளில்எழுந்துள்ளபிரச்சினை களுக்கு சுமுகமான தீர்வை காண முடியுமா வென ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்.

அவ்வாறு செய்வது சாத்தியம் இல்லை யெனின் தொடர்ந்து ஒழுக்காற்று விசார ணையை நடத்தி கட்சியால் எடுக்கப்பட வேண் டிய நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையை பொதுச் செயலாளருக்கு சமர்ப்பிக்கும்.

அவ்வறிக்கைகள் பொதுச் செயலாளரி னால்மத்திய செயற்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு உரிய மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## வேளாண் ஒன்றிய திறப்பு விழா இன்று

முல்லைத்தீவு மாவட்ட வணிக கைத்தொ ழில்வேளாண் ஒன்றியம் இதுவரை காலமும் மல்லாவி அனிஞ்சியன் குளத்தில் இயங்கி வந்தது. தற்போது இவ் ஒன்றியமானது சர்வ தேச தொழிலாளர் அமைப்புநிறுவனத்தின்அனு சரணையுடன் ஏ9 வீதி (பாடசாலை முன்பாக) மாங்குளம் என்னுமிடத்தில் இன்று காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு பல அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள் வருகை தரவுள்ளனர். இதில் மாவட்ட வர்த்த கர்கள், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் வருகை-தந்து சிறப்பிக் குமாறு முல்லைத்தீவு மாவட்ட வணிக கைத் தொழில் வேளாண் ஒன்றிய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (அ-15)

# மீன் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது

கிளிநொச்சி மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் நலன்கருதி மாவட்ட செயலக வளாகத்தில் மீன் விற்பனை நிலையம் ஒன்று கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் நலன்கருதி கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினரால் மாவட்ட செயலக வளாகத்தில் மீன் விற்பனை நிலையம் திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டு மீன் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இவ்விற்பனை நிலையத்தை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்ட உதவித் திட்டப் பணிப்பாளர், கரைச்சி பிரதேச செயலர், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் மாவட்ட இணைப்பாளர் ஆகியோர் ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (அ-3-264)

# வாக்குரிமை வழங்கும் சட்டமூலம் சபாநாயகருக்கு அனுப்பி வைப்பு

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீண் டும் பதிவு செய்து அவர்களுக்கு வாக்குரிமை வழங்குவது தொடர்பில் தாக்கல் செய்யப் பட்டிருந்த விசேட சட்டமூலம் அரசியல் அமைப் பிற்கு ஏற்றதா? இல்லையா? என்பது தொடர் பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாய கருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் குறி த்த சட்டமூலம் தொடர்பான நீதிமன்றத்தின் நிலைப்பாடு குறித்து அறிய கடந்த தினத்தில் உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பிரதம நீதியரசர் உள்ளிட்டமூவரடங்கிய நீதிபதிகள் குழு இதனை விசாரணை செய்தது.

இதனைத் தொடர்ந்தே நீதிமன்றத்தின் நிலைப்பாடு சபாநாயகருக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி யுத்தம் நிறைவடைவதற்கு முன்னர் இவர்கள் இடம்பெயர்ந்ததாக ஜனாதிபதி தாக் கல் செய்திருந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந் தது. (அ-2)

# அரச நிர்வாக கட்டமைப்பு அரசியல்மயப்பட்டுவிட்டது

## *விஜயதாச எம்.பி தெரிவிப்பு*

(கொழும்பு)

அமைச்சர்களை விட அமைச்சுச் செயலா ளர்கள் கூடுதலாக அரசியலில் ஈடுபட்டு வரு வதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ச தெரி வித்துள்ளார்.

அமைச்சுச் செயலாளர்கள், துணைச் செய லாளர்கள் மற்றும் அரச நிர்வாக சேவைக ளில் ஈடுபட்டுள்ளவர்கள் இவ்வாறு கூடுத லாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் பேசிய மைக்காகவே முன்னாள் இராணு வத் தளபதி சரத் பொன்சேகாவி ற்கு இராணுவ நீதி மன்றத்தின் ஊடாக விசாரணையும் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

சரத் பொன்சேகா மீது குற்றம் சுமத்திய அரச அதிகாரிகள் இன்று அரசியல் பேசி வருகின்றனர்.

கடந்த கால ங்களில் பயிற்றப் பட்ட தகுதியுடையவ ர்கள் முக்கிய அரச பதவிகளுக்கு அமர்த்தப்பட்டனர். தற்போது அரசியல் பின்னணியுடை யவர்களே பதவி களில் அமர்த்தப் படுகின்றனர்.

அரச நிர்வாகக் கட்டமைப்பு முற்று முழுதாக அரசியல் படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரி வித்துள்ளார். (அ-2)


**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

(C-3199)

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER



**அடகுப் பொருட்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்**

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், முல்லைத்தீவு, சாவகச்சேரி, கைதடி, வேலணை, சங்கானை, கிளிநொச்சி தெற்கு, அச்சுவேலி, யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, பருத்தித்துறை, கொடிகாமம், மானிப்பாய், நெல்லி யடி. திருநெல்வேலி ஆகிய கிளைகளில் 31.03.2012 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத காலா வதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 08.06.2013 - 13.06.2013 (சனி - வியாழன்) வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 7 மணிவரை இல.212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்.கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

**உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்...**
கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூ 500) செலுத்தி காலாவதி திகதியை நீடித்துக்கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத் தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

**ஹற்றன் நஷனல் வங்கி**

HATTON NATIONAL BANK LIMITED HNB

(சி-3513)



கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1980 இந்து (V)
நட்சத்திரம்: அத்தம்
உயரம்: 5'9"
கி.பா: 70 1இல் செவ்
தகைமை/தொழில்: A/L,CTB நடத்துநர்
தொ.இ:B1913

பிறப்பு: 1978 இந்து(V)
நட்சத்திரம்: அனுசம் 2
உயரம்: 5'5"
கி.பா : 9
தகைமை/தொழில்:A/L, கனடா PR
தொ.இ:B1915

பிறப்பு: 1977 இந்து(V)
நட்சத்திரம்: கேட்டை 1
உயரம்: 5' 7"
தகைமை/தொழில்: BSc Engineering (Civil)
தொ.இ:B1916

பிறப்பு: 1975 இந்து(V)
நட்சத்திரம்: அவிட்டம் 2
கி.பா: 22
தகைமை/தொழில்:O/Lதையல்
தொ.இ:B1917

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1972 இந்து(KO)
நட்சத்திரம்: புனர்பூசம் 1
கி.பா :18.75
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:ஆசிரியர்
தொ.இ:G1940

பிறப்பு: 1979 இந்து(V)
நட்சத்திரம்: அனுசம்
உயரம்: 5'3"
கி.பா :10
தகைமை/தொழில்:A/L
தொ.இ:G1945

பிறப்பு: 1975 இந்து (Pa)
நட்சத்திரம்: கேட்டை 3
உயரம்: 5'2"
கி.பா :52
தகைமை/தொழில்: A/L தையல்
தொ.இ:G1946

பிறப்பு: 1995 இந்து(KO)
நட்சத்திரம்: பரணி 1
உயரம்: 5' 2"
கி.பா: 30
தகைமை/தொழில்: A/L
தொ.இ:G1950

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோசடியில் ஈடுபட்ட அதிகாரிக்கு 15 நாட்கள் விளக்கமறியல்

15 வழக்குகளில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள பயங்கரவாத புலனாய்வு பிரிவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய வங்கியில் கையிருப்பிலுள்ள தங்கத்தில் 100 கிலோகிராம் தங்கத்தை பெற்றுத் தருவதாகக் கூறி பலரை ஏமாற்றிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 11 நபர்களில் குறித்த நபர் 6 ஆவது சந்தேக நபராவார்.

கனடாவில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறியே குறித்த சந்தேக நபரான ஆனந்த ரணசிங்க 2.6 மில்லியன் ரூபாவை பெற்று பலரை ஏமாற்றியுள்ளதாக கோட்டை மற்றும் கம்பனி வீதி பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குறித்த சந்தேக நபர் வெளிநாட்டில் வேலைவாய்ப்புத் தேடி வந்தவர்களில் எட்டுப் பேரை ஏமாற்றி பணம் பெற்றதாக கோட்டை பொலிஸாரும் மேலும் 7 பேரை ஏமாற்றியதாக கம்பனி வீதி பொலிஸாரும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அத்துடன் 15 வழக்குகளில் முக்கிய சந்தேக நபராக உள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது. (அ-2)

## கணனிப் பயிற்சிக்கு பதிவு செய்க

(யாழ்ப்பாணம்)

கரவெட்டிப் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் Web Designing techneques இலவச கணனிப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப் படவுள்ளது.

அப்பயிற்சிநெறியில்பங்கு கொள்ள விரும்பும் பயனாளிகள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பாக தங்கள் பெயர் விபரங்களை கரவெட்டிப் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் பதிவு செய்யுமாறு பிரதேச செயலாளர் சிவஸ்ரீ கேட்டுள்ளார். (அ)

# வங்கி ஊழியர் என்ற பெயரில் மோசடி இடம்பெறுகின்றது

## மக்களே விழிப்புடன் இருங்கள்

(மல்லாவி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கடந்த வருடம் பரீட்சை எழுதிமாணவர்களையும் மற்றும் படித்துவிட்டு வேலை வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர் யுவதிகளையும் இலக்குவைத்து வங்கியில் வைப்பு செய்தால் பணமும் வேலைவாய்ப்பும் தருவதாக கூறி மோசடியில் ஈடுபடும் நபர்கள் தொடர்பாக விழிப்புடன்இருக்குமாறு வன்னி மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்களைக் கோரியு ள்ளனர்.

இது இவ்விடயம் தொடர்பில் தெரியவருவது, அண்மைக்காலமாக மீள்குடியேறிய மக்கள் வசிக்கும் பின்தங்கிய கிராமங்களை இலக்கு வைத்து ஒரு மோசடிக் கும்பல் செயற்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

முல்லைமாவட்டத்தில் உள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அம்பகாமம், புலுமச்சி நாத குளம், ஒலுமடு, கரிப்பட்டமுறிப்பு மற்றும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் தேராங்கண்டல், மங்கைநகர், அனிஞ்சியன் குளம் என பல தரப்பட்ட கிராமங்களுக்கு சென்ற நபர்கள் தாங்கள் வங்கி ஒன்றில் இருந்து வருவதாகவும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் கடந்த வருடம் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு வங்கியில் குறிப்பிட்ட தொகையை வைப்பு செய்யும் போது நாளொன்று 150 ரூபா வைப்பு செய்யப்படும் என கூறுவதுடன் ஆடு, மாடுகள் கொள்வனவுக்காகவும் கடன் பெற்று தருவதாகவும் குறைந்த விலையில் சூரிய மின்கலம் பெற்று தருவதாகவும் வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலை பெற்றுதருவதாகவும் கூறி 500 ரூபா தொடக்கம் பல ஆயிரங்களைபெற்றுக்கொண்டு பற்றுச்சீட்டோ அல்லது வங்கி தொடர்பான ஆவணங்களோ வழங்காது ஏமாற்றிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் மாங்குளம் மக்கள் வங்கி முகாமையாளர் சோமசுந்தரம் சுரேஸ் குமாரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, அரச வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள் அரச அனுமதியுடன் செயற்படுகின்றபோது மக்கள் வசிக்கின்ற பகுதிகளிலே தமக்குரிய கிளைகளை அமைத்துள்ளனர்.

அவர்கள் வெளிக்கள நடவடிக்கைகளுக்காக செல்லும் போது அக்கிராமங்களில் பொது அமைக்களின் பிரதிநிதிகள் மற்றும் கிராமசேவையாளர்களின் ஒத்துழைப்புடன் செயற்படுகின்றன.

வெளிக்கள நடவடிக்கையின் போது வாடிக்கையாளர்களிடம் பெறப்படும் பணத்திற்கு உடனடியாக பற்றுச்சீட்டு வழங்கப்படுகின்றது. இது தவிர வெளியில் கடமைக்கு செல்லும் உத்தியோகத்தர்கள் வங்கிகளால் வழங்கப்படும் ஆள் அடையாள அட்டைகளுடன் செல்கின்றனர்.

எனவே இவ்விடயத்தில் மக்கள் விழிப்புடன் இருப்பதுடன் சந்தேகப்படும்படியான நடவடிக்கைகளில் ஈடுபடுவர்கள் தொடர்பாக உடன் அண்மையிலு ள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது அவசர பொலிஸ் தொடர்பு இலக்கமான 119 இற்கு தகவலை வழங்குவதன் மூலம் உடனடி தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-15)

## முறிந்தது கம்பம்; நொறுங்கியது பிக்கப்!

ஏ-9 வீதியின் அரியாலைப் பகுதியில் சென்று கொண்டிருந்த தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அதிகாரசபைக்கு சொந்தமான பிக்கப் ரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோர மின்கம்பம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. நேற்று முன்தினம் பிற்பகல் 3.15 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றிருந்தது.



# விக்கிரகங்களை உடைத்தமைக்கு இந்துமாமன்றம் கடும் கண்டனம்

கிழக்கு மாகாணத்தில் சில ஆலயங்களில் திருவுருவங்கள் சேதப்படுத்தப்பட்டமையை அறிந்து வேதனையும் துயரமும் அடைந்துள்ள இந்தநாட்டு இந்துமக்களின் சார்பில் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் நாட்டில் பாதுகாப்புக்கு பொறுப்பான அனைவருக்கும் இப்பகிரங்க வேண்டுகோளை அவசரமாக விடுக்கிறோம் என அகில இலங்கை இந்துமாமன்றம் கோரிக்கை விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்த நாட்டில் மத சுதந்திரம் அரசியல் அமைப்பால் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் சரத் துக் கள் 9,10 மற்றும் 14 (2) ஆகியவை எமது மதத்தினருக்கும் தந்துள்ள சட்ட உத்தரவாதத்தையும் பாதுகாக்குமாறு வலியுறுத்தக்கடமைப்பட்டிருக்கிறோம். இந்நாட்டின் வடகீழ் மாகாணப் பகுதிகளில் இந்து ஆலயங்களில் இப்படியான அனர்த்தங்கள் நடப்பது இது முதல் முதற் தடவையல்ல. இத்தகைய நிகழ்வுகளுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும் என நாங்கள் பலதடவை வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். அதனை மீண்டும் வலியுறுத் துகிறோம்.

பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பல இந்து ஆலயங்களில் பூசைகள் தடைப்பட்டிருப்பதையும் எடுத்துக் காட்டி அதனால் ஏற்படக் கூடிய விபரீதங்களையும் சுட்டிக் காட்டியிருக்கின்றோம். பாதுகாப்புப் படையினர் கடமையில் இருக்கிறார்கள் என்று சொல்லப்படும் பகுதிகளில் இப்படியான குற்ற நிகழ்வுகள் நடப்பது புரியாதபுதிர். தண்டனைக் கோவையின் 290, 290 ஏ, 291 ஏ முதலிய சரத்துக்களின் படி இவைதண்டிக்கப்பட வேண்டிய குற்றங்கள். இதனைப்பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கும் கொண்டுவந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாமன்றம் கோரியிருக்கின்றது.

ஒரு நாட்டில் ஒரு ஆலயத்திலாவது பூசை நடக்காதிருப்பது அல்லது பூசைக்கு இடையூறு ஏற்படுத்துவது தெய்வீகத் துரோகம் என்பதனை இக்கட்டத்தில் யாவரும் உணர்ந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நாட்டில் இந்து மக்கள் சார்பில் மீண்டும் பகிரங்க வேண்டுகோள் விடுக் கின் றோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தேசிய கல்விக்கொள்கை இவ்வாண்டில் மீளாய்வு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய கல்விக் கொள்கை இவ்வரு டம் மீளாய்வு செய்யப்படவுள் ளது. நடைமுறையிலுள்ள கல்விக் கொள்கையை மேலும் முன்னேற்றும் வகையில் பல புதிய மாற்றங்களை இதில் இணைத்துக் கொள்ள விரு ம்புதாக தேசிய கல்வி ஆணை க்குழுவின் தலைவர் பேரா சிரியர் லக்ஸ்மன் ஜயதிலக கூறி னார்.

இது தொடர்பிலான ஆக்கபூர்வமான சிந்தனைகள் வரவேற்கப்படுவதனால் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை ஆணைக் குழுவிற்கு பெற்றுத் தருமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இவ்வருடம் பொதுக் கல்வி, தொழில்சார் கல்வி, பல்க லைக் கழக கல்வி பாடசாலை நிர்வாகம், ஆசிரிய நிய மனங்கள் கல்வித்திட்டமிடல், தேசிய மற்றும் மாகாண மட்டத்திலான பாடசாலை முகாமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து தேசியக் கல்விக் கொள்கை மீளாய்வு செய்யப்படவுள் ளது.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே தலைவர் பேராசிரியர் லக்ஸ்மன் ஜயதிலக மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையின் பொதுக் கல்வி நடைமுறையில் மாற்றத்தை கொண்டு வருவதற்கான புதிய யோசனைகள், திருத்தங்கள் ஆகியவற்றை பொது மக்கள், நிபுணர்கள், கல்விமான்கள், கல்வி நிறுவனங்கள், இயக்கங்களிடமிருந்து இந்த ஆணைக் குழு எதிர்பார்க்கின்றது.

முன்வைக்கவிரும்பும்கருத்துக்கள் யாவும் தபால் மூலமாயின் தலைவர், தேசியகல்வி ஆணைக் குழு, இலக்கம் 126, நாவல வீதி நுகேகொடை என்ற விலா சத்திற்கு அல்லது chnec@slt.lk, vcpl nec @ slt.lk, secnec@slt.lk, sponec@slt.lk என்ற மின்னஞ்சல் முகவரிகளுடாகவோ அல்லது. 0112816177 என்ற தொலைநகல் இலக் கத்திற் கூடாகவே எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதன் மூலம் தெரிந் தெடுக்கப்பட்ட பிரிவினரை அல்லது தனிநபரை ஆணைக் குழு வாக்குமூல சமர்ப்பணங் களுக்காக நேரில் அழைக் கும். ஒவ்வொரு பத்து வரு டங்களுக்குஒருதடவைதேசிய கல்வி கொள்ளை மீளாய்வு செய்யப்படுவது வழமையானதாகும்.

அந்த வகையில் கடந்த 2003 ஆம் ஆண்டு கல்விக் கொள்கை மீளாய்வினைத் தொடர்ந்து இவ்வருடம் கொள்கை மறு சீரமைக்க திட்டமிடப் படுள்ளது.

பாலர் பாடசாலை செல்லும் மாணவர் முதல் பல்கலைக்கழகம் வரையிலான கல்வி நடவடிக்கைகள் காலத்தின் தேவைக்கேற்ப மறு சீரமைக்கப்படுமெனக்கூறிய ஆணைக்குழுவின் தலை வர் இம்முறை மீளாய்வின் போது தமிழ் மற் றும் சிங்கள மொழியின் தேர்ச்சி குறித்து அதிக கவனம் செலுத்தப்படு மெனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## முற்கொடுப்பனவு அட்டை நடைமுறைக்கு

(கொழும்பு)

மேல் மாகாண சபை க்குச் சொந்தமான பேருந்துகளில் பயணம் செய்வோருக்கு முற்கொடுப்பனவு அட்டை மூலம் பயணிக்கும்புதியமுறைஇன்று முதல் அமுலாகிறது.

மேல் மாகாண பிரயா ணிகள் போக்குவரத்து அதிகார சபை இதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

200 ரூபா முதல் 5 ஆயிரம் ரூபா வரை இக்கடன் அட்டையில்மீள்நிரப்புச்செய்யலாம்.

மீண்டும்மீண்டும்தேவைக் கேற்ப பணத்தை மீள் நிரப்பு செய்யலாம் என பிரயாணிகள்போக்குவரத்துஅதிகாரசபையின் தலைவர் அமில ரன் மண்டல தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண மட்ட சதுரங்க போட்டி முடிவுகள்

(குருமன்காடு)

வட மாகாண பாடசாலைகளுக்கிடையில் வட மாகாண கல்வி திணைக்களத்தினால் நடத்தப்பட்ட சதுரங்க போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரங்களை வட மாகாண கல்வி திணைக்களத்தின் பிரதி கல்விப்பணிப்பாளர் கே. சத்தியபாலன் வெளியிட்டுள்ளார்.

இவ் வகையில் 15 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை யாழ்ப்பாணம் இந்து கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியும் பெற் றுக்கொண்டதுடன் 15 வயது பெண்கள் பிரிவில் முதலாமி டத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும், இரண்டா மிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், மூன்றாமிடத்தை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியும்பெற்றுக்கொண்டன.

19 வயது ஆண்கள் பிரிவில் முதலிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை யாழ்ப்பாணம் இந்து கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியும் பெற்றுக்கொண்டதுடன் 19 வயது பெண்கள் பிரிவில் முதலிடத்தை பருத்தித் துறை பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், இரண்டாமிடத்தை அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன.

(அ-3-250-266)

## கயட்டையடி வைரவரின் பொங்கல் உற்சவம்

முள்ளியவளை செங்குந்தா வீதி கயட்டையடி நரசிங்க வைரவர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் திருக்குளிர்ச்சி உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

உற்சவத்தின் இரவு நிகழ்வுகளான பண்டமெ்டுத்தல், கச்சுமெடுத்தல், தூளி பிடித்தல், வளர்ந்து நேருதல், புகழ்பூத்த மாலைக்கு வாதாடிய மைந்தன் எனும் புராண சரித்திர நாடகமும் நடைபெற்று அதிகாலை வழிவெட்டு நிகழ்வுடன் பொங்கல் திருக்குளிர்ச்சித் திருவிழா நிறைவடையும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ)

## கிளிநொச்சி மாவட்ட இளைஞர் தினம்

(பூநகரி)

வருடா வருடம் கொண்டாடப்பட்டு வரும் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் தினம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பூநகரி 4 ஆம் கட்டையில் உள்ள ஸ்ரீ விக்கிணேஸ்வரா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் பூநகரி பிரதேச செயலர் கே. எஸ். வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக பூநகரியின் சகல படைப் பிரிவைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்ட போட்டி. இளைஞர்கள் பங்கு பற்றும் இரத்ததான முகாம், சிறந்த இளைஞர்களுக்கான விருது வழங்கல், அத்துடன் இளைஞர் கழகங்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் 4 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த இளைஞர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

(அ-3-84)

## சிறுவர் தொடர்பான கலாசார விழா

சிறுவர் உரிமைகள், திறன் விருத்தி கலாசார மேம்பாடு தொடர்பான விழா சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 9 ஆம் திகதி வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெறும் என வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரி த.செல்வகுமார் தெரிவித்தார்.

போரினால், பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், பாடசாலையில் கல்வி பயிலும் சிறுவர்களின் ஆளுமையை விருத்தி செய்வதுடன் சிறுவர் உரிமைகள், வன்முறைகளில் இருந்து விடுபடல், துஷ்பிரயோகங்களில் இருந்து சிறுவர்களைப் பாதுகாத்தல் உட்பட பல்வேறு விழிப்புணர்வு ஊட்டல் நடைபெறும் எனவும் தெரிவித்தார்.

(அ-3-250)

## பாலங்களை புனரமைத்து போக்குவரத்துக்கு உதவுக

## மக்கள் கோரிக்கை

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட அக்கராயன் பிரதேசத்தை சேர்ந்த யூனியன்குளத்திற்கு செல்லும் பிரதான பாலம் மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளது.

இப்பாலத்தை திருத்தம் செய்து தருமாறு இப்பகுதி பொதுமக்களால் வேண்டுகோள் விடப்பட்ட போதிலும் பத்திரிகைகள் வாயிலாக இது வெளிக்கொண்டு வரப்பட்ட போதிலும் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் இதுவரை எவராலும் எடுக்கப்படவில்லை.

முன்பு இந்த வீதியால் போக்குவரத்து நடைபெற்றமையால் அக்கராயன் வைத்தியசாலைக்கு செல்லும் மக்களும் இப்பகுதியை அண்டி வசிக்கின்ற மக்களும் நன்மையடைந்து வந்தனர்.

இதேவேளை, இந்த உடைந்த பாலத்தின் கற்கள் முழுமையாக சேதமுற்று இங்கு பொருத்தப்பட்ட கம்பிகள் மட்டுமே மேலே தெரியக் கூடிய வாறு உள்ளன.


இதனால் துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்களும் கால் நடையாக செல்பவர்களும் இக்கம்பிகளில் இடறி விழுந்து காயங்களுக்கும் உள்ளாகின்றனர்.

இதேவேளை, யூனியன் குளத்தின் மறுபக்கமாகவுள்ள முழங்காவில், ஜெயபுரம், வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம், ஸ்கந்தபுரம், அக்கராயன் குளம் ஆகிய இடங்களுக்கு செல்லும் பிரதான வீதியின் பாலம் உடைப்பெடுத்துள்ள நிலையில் இவற்றை திருத்தம் செய்யாதுள்ளதால் இப்பாலத்தினூடாக பயணிக்கும் பொதுமக்களும் வாகனங்களும் மிகுந்த இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

குறைந்த செலவிலேயே திருத்தத்தை செய்யக்கூடிய நிலையில் உள்ள இந்தப் பாலத்தில் எவரும் அக்கறை கொள்ளவில்லை என பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (அ-3-254)




எங்களை வாழ வைத்து
உங்களை வாழ்த்துகின்றோம்



புதிதாக நியமனம் பெற்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்டம்.

எமது மாவட்டத்தின் வளர்ச்சிக்காகவும் எமது எதிர்கால வாழ்விற்கும் ஒளியேற்றிய பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களையும் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான கௌரவ முருகேசு சந்திரகுமார் அவர்களையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் திரு.வைத்திலிங்கம் தவநாதன் அவர்களையும் உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனரீதியாக பாடசாலைகளை உருவாக்கும் முறைக்கு முற்றுப்புள்ளி

## கல்வி அமைச்சர் பந்துல தெரிவிப்பு

**தமிழ், சிங்களம், முஸ்லிம் என இன் ரீதியாக பாடசாலைகளை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்தன நேற்றுமுன் தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

**இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,**

**எந்த அரசாங்கப் பாடசாலையிலும் தற்போது இன ரீதியான செயற்பாடுகள் இடம்பெறவில்லை என உறுதியாகத் தெரிவித்த அவர், எதிர்வரும் காலங்களில் இனரீதியாக பாடசாலைகள் உருவாக்கப்படுவது நிறுத்தப்படுவதுடன் சகல பாடசாலைகளிலும் சகலரும் கற்கக் கூடிய நிலை பலப்படுத்தப்படும்.**

அதேவேளை வடக்கு கிழக்கு மலையகப் பகுதிகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறைகளை தீர்க்கும் வகையில் ஆசிரியநியமனங்களுக்கு உரிய தகைமை இல்லாதவர்களை ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதாக அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வியமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட மாகாண ஆளுநர்களினது முடிவைப் பெற்றுக் கொள்ள அவர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். பாராளு மன்றத்தில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளை யில் ஐ.தே.க எம்.பி தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்வி யொன்றுக்குப் பதிலளித்த போதே கல்வியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச பாடசாலை ஆசிரியர்களின் தொழில்சார் அபிவிருத்தியை மேம்படுத்த பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள நிலையங்களில் எவ்வளவு பேர் கல்வியியலாளர்கள் சேவைக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர் என தயாசிறி ஜயசேகர எம்.பி கேள்வி எழுப்பினார்.

ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதற்குத் தகைமை இல்லாதவர்களுக்கு கல்விச் சேவையில் நியமனம் வழங்க முடியாது. இதற்காக அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கவும் முடியாத நிலையே உள்ளது. முன்பொரு சமயம் இதனை ஐக்கியதேசியக் கட்சி விமர்சனங் களுக்குள்ளாகியதையும் குறிப் பிட வேண்டும்.

எவ்வாறெனினும் விரும்பினால் ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி ஆகிய இரு தரப்பும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தால் அதன்பின் அது தொடர்பில் விசேட அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்து அதன் அங்கீகாரத்துடன் முடிவொன்றை பெற முடியும்.

இதேவேளை யுத்த காலத்தில் அந்த சந்தர்ப்பத்தை சமாளிப்பதற்காக பதில் அதிபர்களை நாம் பாடசாலைகளுக்கு நியமித்தோம். அந்தச் செயற்பாடு எதிர் பார்த்த பலனைத் தரவில்லை. அவர்கள்மேலதிக சேவையாகக் கருதி அதனை சரிவர மேற் கொள்ள வில்லை.

இதனால் எதிர்வரும் காலங்களில் பிரதி அதிபர்கள் நியமிக்கப்படமாட்டார்கள் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# ஆயுதமின்றிய ஈழப்போரை தோற்கடிக்கமுடியாது

## அமைச்சர் விமல் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆயுதமின்றி முன்னெடுக்கப்பட்டு வரும் ஈழப் போரை படையினரால் தோற்கடிக்க முடியாது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்து செய்வது தொடர்பிலான கையெழுத்து போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,


நாட்டு மக்களினால் இந்த போரை முறியடிக்க முடியும். படையினர் பல்வேறு அர்ப்பணிப்புக்களை செய்தே இந்தப் போரில் வெற்றியீட்டினர்.

ஆயுதப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும், ஈழம் தொடர்பான கருத்துக்களும் பிரசாரங்களும் இன்னும் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை.

பிரிவினைவாதிகள் தொடர்ந்தும் நாட்டுக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர். வட மாகாணசபையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி அதன் மூலம் புதிய ஈழப் போராட்டமொன்றை தொடங்க பிரிவினைவாதிகள் முயற்சிக்கின்றனர்.

தற்போதைய அரசியல் அமைப்பின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட்டால், பிரிவினைவாதிகள் தனி இராச்சியமொன்றை உருவாக்கும் முனைப்புக்களில் ஈடுபடுவார்கள் என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (அ-2)

# விடுதலைப்புலி உறுப்பினர்கள் மூவருக்கு கடூழிய சிறைத் தண்டனை



தெஹிவளையில் இடம் பெற்ற ரயில் குண்டு வெடிப்புடன் தொடர்புடைய குற்றத்தை ஒப்புக் கொண்ட (இரு சம்பவங்களுக்காக) மூன்று தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன் தினம் கடூழிய சிறைத் தண்டனை விதித்துள்ளது.

1996 ஆம் ஆண்டு கொழும்பு கோட்டையிலிருந்து அளுத்கமவுக்குச் சென்று கொண்டிருந்த புகையிரதத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 70 பயணிகள் கொல்லப்பட்டனர். மேலும் 500 பேர் வரை படுகாயமடைந்தனர். தெஹிவளை புகையிரத நிலையம் அருகில் இச் சம்பவம் இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்பான குற்றத்தை ஒப்புக் கொண்ட இருவருக்கும் ஒவ்வொரு குற்றத்திற்கு 10 வருடம் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதேநேரம், குற்றத்தை ஒப்புக் கொண்ட பெண்ணுக்கு ஐந்து வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

குண்டுவெடிப்பு தொடர்பான வழக்கு நேற்று முன் தினம் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க மேற்படி தீர்ப்பை வழங்கினார்.

> “ தெஹிவளையில் இடம்பெற்ற ரயில் குண்டு வெடிப்புடன் தொடர்புடைய குற்றத்தை ஒப்புக் கொண்ட (இரு சம்பவங்களுக்காக) மூன்று தமிழீழ விடுதலைப்புலிஉறுப்பினர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இச் சிறைத் தண்டனையை ஒரேமுறையில் அமையும் வகையில் உத்தரவிட்ட நீதிபதி, இந்தத் தண்டனையை இந்த வேளையில் இருந்தே அமுலாக்குமாறும் இவர்களுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டுள்ள தடுத்து வைக்கும் உத்தரவை அதிகாரம் இல்லாததாக ஆக்குமாறும் உத்தரவிட்டார். (அ-2)

# இலங்கை தம்பதியரின் கடத்தலுக்கு திட்டமிட்ட நபர் லண்டனில் கைது

சென்னையில் வைத்து கடத்தப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்ட இரண்டு இலங்கை– பிரித்தானியா தம்பதியரின் கடத்தல் தொடர்பில், லண்டனில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸாரினால் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்டவர்களின் வர்த்தக நிலையத்தில் பணியாற்றிய இளைஞனையே டோரஸ்ட் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாக டைம்ஸ் ஒப் இந்தியா தெரிவித்துள்ளது.

இந்தக் கடத்தல் சென்னையில் இடம்பெற்ற போதும், அது லண்டனில் வைத்தே திட்டமிடப்பட்டுள்ளதாக மெட்ரோ பொலிடன் பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் கடத்தப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டுள்ள போதும், இது தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் இடம் பெறுகின்றன.

அத்துடன், இது தொடர்பில் இந்திய அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் செயற்படுவதாகவும் பிரித்தானிய மெட்ரோ பொலிடன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# “சிலோன்” திரைப்படத்தில் நடிகர் அரவிந்த் சாமி

(கொழும்பு)

இலங்கையின் யுத்த சூழ்நிலையை பின்னணியாக வைத்து எடுக்கப்பட்டுள்ள “சிலோன்” என்ற திரைப்படத்தில், பிரபல நடிகர் அரவிந்த் சாமி நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

இயக்குநர் சந்தோஸ் சிவத்தினால் இந்தத் திரைப் படம் இயக்கப்படுகின்றது. இதில் அரவிந்த்சாமி முக்கிய பாத்திரம் ஏற்று நடிக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் இடம்பெற்ற கொண்டிருக்கும் பகுதியில் சிக்கிக் கொள்ளும் 8 சிறுவர்கள் பற்றிய கதையாக குறித்த திரைப் படம் அமைகிறது. (அ-2)

# 2 மாகாண சபைகளை இணைக்கமுடியாது

## 13ஆம் திருத்தத்தில் வருகிறது மாற்றம்

(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவர அரசாங்கம் தீமானித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் நேற்று முன்தினமிரவு சந்தித்து இந்தத் தீமானத்தை எடுத்துள்ளனர்.

இதன்படி, அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான யோசனைத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

விசேட அமைச்சரவை யோசனைத் திட்டமாக சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்து மாகாண சபைகளினதும் அனுமதியுடன் திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்ற சரத்தை நீக்கி, அதற்குப் பதிலாக பெரும்பான்மையான மாகாண சபைகளினதும் அனுமதியுடன் திருத்தங்களைச் செய்யமுடியும் என்ற திருத்தம் செய்யப்படவுள்ளது.

இரண்டு மாகாண சபைகளை ஒன்றிணைக்க முடியும் என்ற சரத்து முழுமையாக நீக்கப்படவுள்ளது.

இந்த இரண்டு திருத்தங்களுமே முதலில் மேற்கொள்ளப்படவுள்ளன.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பிலும் கட்சித் தலைவர்கள் நீண்ட விவாதம் நடத்தியுள்ளனர்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று அமைத்து அதன் ஊடாக தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் நடவடிக்கைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும் பங்கேற்காவிட்டால் என்ன செய்வது என கட்சித் தலைவர்கள் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

குறித்த கட்சிகள் பங்கேற்காவிட்டாலும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பணிகள் தொடரும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். (அ-2)

# சுற்றுலா வணிகத்தில் சூதாட்ட வர்த்தகர்

அவுஸ்திரேலியாவின் பிரபல சூதாட்ட வர்த்தகர் ஜேஸ் பார்க்கர், இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து சுற்றுலாத்துறை வணிகத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன, இதனை நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

ஜேம்ஸ் பாக்கர் இலங்கையில் 350 மில்லியன் டொலர்களை முதலீடு செய்ய விருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த முதலீட்டு தொகையில் 400 அறைகள் கொண்ட பாரிய சுற்றுலா விடுதி ஒன்றும் பல்வேறு சுற்றுலா சார்ந்த வணிக முயற்சிகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அவருக்கு இதற்காக எந்த வரிச் சலுகைகளோ, சூதாட்டத்துக்கான அனுமதியோ வழங்கப்படவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், கடந்த பெப்ரவரி மாதம் ஜேம்ஸ் பார்க்கர் இலங்கை வந்ததன் பின்னர் சூதாட்ட சட்ட மூலம் மாற்றி அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 115 சிகரெட் பெட்டிகள் விமான நிலையத்தில் சிக்கின


இலங்கைக்கு சட்டவிரோதமாக எடுத்து வரப்பட்ட 115 சிகரெட் பெட்டிகளுடன் நேற்று முன் தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இருவர் கைது செய்யப்பட்ட தாக சுங்கப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

மாலைதீவில் இருந்து வந்த யு.எல்.106 விமானத்தில் பயணித்த இருவரே இவ்வாறு சிகரெட் பெட்டிகளுடன் கைதாகியுள்ளனர். கைப்பற்றப்பட்ட சிகரெட்டுக்கள் 5 இலட்சத்து 75 ஆயி ரம் ரூபா பெறுமதியானவை எனவும் அவை அரசுடமையாக்கப் பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சந்தேக நபர்கள் இருவரும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் கம்பஹா மற்றும் கந்தானை பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். பிரதி சுங்கப் பணிப்பாளர் கே.ஏ.தர்மசேன தலைமையிலான குழு இது தொடர்பான விசாரணையை மேற் கொண்டது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “எனது கேள்விகளுக்கு சித்தர் அளித்த பதில்கள்”



## ஆன்மீகம் 26

அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

அவன் எதையும் எடுத்துச் செல்ல முடியாது. இதனால்தான் இறைவன் பட்டினத்தடிகளுக்கு காதற்ற ஊசியும் வாராது காண்கடை வழிக்கே என்று கூறி, அவர் ஞானக்கண்ணைத் திறந்து வைத்தான். ஆண்டவனால் படைக்கப்பட்டவன் ஆண்டவனையே மறந்து வாழ்ந்து இறுதியில் மாண்டவனாகிறான். அப்படி மாண்டவன் தன்னுடன் கொண்டுபோவது அவனுடைய பாவ புண்ணியங்களும் கல்வி, ஞானம் ஆகியவைகளே. ஔவைக்கு சிறுவயதிலேயே ஆண்டவன் அருள் கிடைத்துவிட்டது. (ஐயோ! நாம் ஔவையைப் பற்றி நினைத்ததை இவர் எப்படி அறிந்தார்) இறைவன் அருள் கிட்டியதால் அவளுக்கு பொருளும் கிடைத்து அந்த பொருளை வைத்து இளமையை அழித்து முதுமைக்கோலம் கொண்டு தம் லட்சிய பாதையில் தடையில்லாமல் நடந்தார். இறுதியில் கயிலாயத்திற்குச் சென்று கயிலாதிபதியைக் கண்டு அவருடன் ஒளியில் ஒன்றினார். அவரிடம் என்ன செல்வம் இருந்தது! அவர்கூட மக்களுக்காகப் பாடியவராயிற்றே! பொருளுக்கு அவர் மதிப்பளிப்பதே இல்லையே ஆயினும் அவருக்கு கிடைத்த பொருளை வைத்துத்தான் அப்படிப் பாடினார்!

அருளிருந்தால் பொருள் கிடைக்கும்! பொருளிருந்தால் எல்லாம் கிடைக்கும், அது நிரந்தரமானது! அழிவில்லாதது.



புனித மலைகளில் சாதுக்களுக்கு அன்னதானம்

அடியேன்:- அந்த பொருள் எப்படிக் கிடைக்கும்?

சித்தர்:- இது சாதாரண மனிதர்களுக்கு கிடைக்காது! தங்கத்தை எடுப்பதற்கு மனிதன் எவ்வளவு ஆழமாக தோண்டுகிறான். ஆபத்துக்களை அலட்சியம் செய்து பாடுபடுகிறான். வெட்டி எடுத்த ஒரு டன் எடையுள்ள மண்ணிலிருந்து சில அவுன்ஸ்கள் தங்கம் தானே கிடைக்கிறது. இதை ஒன்று சேர்த்துத்தானே தங்கக்கட்டிகளை உருவாக்குகிறான். ஒருவரிடமும் நிரந்தரமாகத் தங்காது. இந்த அழியக் கூடிய உலோகத்திற்காக மனிதன் இப்படிப் பாடுபடும்போது அழிவில்லாத இந்த தெய்வீக பொருளை அடைய வேண்டும் என்றால்! அதற்கு அவன் அயராது பாடுபட வேண்டும் அல்லவா? அருள் வேண்டி ஆண்டவனிடம் மண்டியிடும் மனிதனுக்கு அழியும் உடல்தானே உள்ளது. அது அழிவதற்குள் அவன் அமரத்துவம் எய்ய வேண்டுமெனில் அந்த உடல் தேவைப்படுகிறதே. ஜீவனைக் கொண்டு தானே பரமனைத் தேட முடியும்.

அந்த ஜீவன் வாழும் உடல் முக்கியமானதல்லவா? ஆனால், மனிதர்களே தம் தவறான செய்கைகளால் அற்ப ஆனந்தங்களுக்கு ஆசைப்பட்டு ஆரோக்கியத்தை அழித்துக் கொண்டு அரை குறையாகமுடிந்து போகிறார்கள். இதைத்தான் நந்தவனத்தில் ஒரு ஆண்டி நாலாறு மாத மாயக் குயவனை வேண்டி பெற்ற குடத்தைப் போட்டு உடைத்த கதையை சொல்லும் பாட்டாகும். புத்தர் ஞானம் வேண்டி உலகில் சொல்லப்பட்ட அத்தனை வகையிலும் முயன்று கொண்டு இருந்தபோது ஒருமுறை உபவாச முறையைக் கடைப்பிடித்தார்! தியானம் கலைந்து எழுந்து தாமிருந்த குகையில் நடக்க முனைந்தவர் பசிமயக்கத்தால் தடக்கிக் கீழே விழுந்தார்!

தொடரும்

# மத்தலவை இயங்கவைக்க கட்டுநாயக்காவுக்கு கட்டாய ஓய்வு...?

உலகில் எங்கும் இல்லாத விசித்திர விமானப் பயணம்!

ஏற்கனவே மத்தலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்கு வந்தால் நூதன சாலையாக மாற்றுமென அக்கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறிவரும் நிலையில் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியதுபோல மத்தலவில் சர்வதேச விமான நிலையத்தைக் கட்டியதற்கு பதிலாக அங்கு குளம் ஒன்று கட்டியிருந்தால் மஹா பராக்கிரமபாகு போன்று ராஜபக்ச பெயரும் வரலாற்றில் பதிவாகியிருக்கும் என்று மதவாத அமைப்பாக தோற்றம் பெற்றுள்ள அரசுக்கு ஆதரவான பொதுபலசேனா அமைப்பு வேறு கிண்டலடித்திருக்கின்றது.


ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வைச் சூழவுள்ள ஆலோசகர்கள் இவ்வகையான பயனற்ற திட்டங்களை அவருக்குக் கூறி மக்களின் பணத்திற்கு ஆப்பு வைக்கக் கூடாது என்று கூறியுள்ள பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஜனாதிபதியைச் சூழவுள்ள ஆலோசகர்கள் புதுமையானவர்கள். விசித்திரமான ஆலோசனைகளை வழங்கி வருகின்றார்கள். உண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு நான் ஆலோசகராக இருந்திருந்தால் நிச்சயம் மத்தலவில் விமான நிலையத்தை கட்ட அனுமதித்திருக்க மாட்டேன். மாறாக பராக்கிரம சமுத்திரம் போன்று பாரிய குளத்தை கட்டுமாறு வலியுறுத்தியிருப்பேன் எனக் கூறியிருக்கின்றார்.

இந்நிலையில் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதையாக விமான நிலைத்தையும் மிஹின் விமான சேவையையும் வைத்துக்கொண்டு மஹிந்த அரசு விழிபிதுங்கி நிற்கின்றார். வன விலங்குகள் வாழும் பகுதியில் அமைக்கப்பட்ட இந்த விமான நிலையத்தைச் சுற்றி ஏராளமான பறவைகளின் சரணாலயங்கள் இருக்கின்றன. விமான நிலையத்தில் எங்கு பார்த்தாலும் பறவைகளே நிறைந்துபோய் இருக்கின்றன. இதனால் விமானம் தரையிறங்கும்போதும் ஏறும்போதும் வெடி கொழுத்தி சத்தம் எழுப்பிப் பறவைகளை பறக்க வைத்ததன் பின்னரேயே விமானங்கள் தரையிறங்கவோ, பறக்கவோ முடிகின்றது. உலகில் எங்கும் இல்லாத விசித்திர விமானப்பயணம் இதுவென்று கூறுகின்றார்கள்.

இதற்கிடையே விமான நிலையத்துக்காக அமைக்கப்பட்டுள்ள மின்சார இணைப்பில் சிக்கி, நாளன்றுக்கு 20 தொடக்கம் 30 வரையிலான குரங்குகள் உயிரை மாய்ப்பதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. ஹம்பாந்தோட்டையில் இருந்து மத்தல விமான நிலையத்துக்காக -33 ஆயிரம் வாற்ஸ் திறனுள்ள உயர் அழுத்த மின்சார இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

செலவுகளைக் குறைப்பதற்காக இந்த இணைப்பு விலங்குகள் வாழும் சரணாலயம் வழியாக கொடுக்கப்பட்டுள்ளது. சரணாலயப் பகுதியில் 13 கிலோ மீற்றர் வரை அமைக்கப்பட்டுள்ள இந்த மின்சார இணைப்புகளில் பாயும் உயர் அழுத்த மின்சாரத்தை அறியாமல் குரங்குகள் அவற்றின் மீது ஏறித் தாவுகின்றன. இதனால் நாளொன்றுக்கு 20 தொடக்கம் 30 வரையிலான குரங்குகள் உயிரிழந்து வருகின்றன. ஒவ்வொரு முறையும் குரங்கு மின்சாரத்தினால் தாக்கப்படும் போதும் விமான நிலையத்துக்கான மின்சாரம் சில நிமிடங்களுக்கு தடைப்படுகிறது. மின்சார இணைப்பு வழங்கப்பட்டதில் இருந்து விமானநிலையத்துக்கான மின்சாரம் நாளொன்றுக்கு 20 தொடக்கம் 30 வரை தடைப்படுகிறது. இதனால் விமானநிலையத்தில் உள்ள உயர் திறன் கொண்ட ராடர் கருவி பாதிக்கப்படுகிறது. மார்ச் 18 ஆம் திகதி தொடக்கம் நாளாந்தம் அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் விமான நிலையத்துடன் மின்சார இணைப்புத் தொகுதி செயலிழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக மத்தல விமான நிலைய அதிகாரிகள், இலங்கை மின்சாரசபை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளனர். எனினும் இது தொடர்பான தகவல்களை இரகசியமாக பேணும்படி உத்தரவு பிறப்பக்கப்பட்டுள்ளதாகவும் அந்த ஆங்கில ஊடகம் கூறுகின்றது.



பறவை, விலங்குகளின் வாழ்விடங்களை அழிக்காமல் விமானங்கள் தரை இறங்க முன்னும் விமானநிலையத்திலிருந்து வெளியேற முன்னும் அபாயச் சத்தங்கள் ஊடாக பறவைகள் விலங்குகளை விரட்டுவது குறித்தும் ஆராயப்பட்டு வருவதாகவும் அது சரிவராது போனால் மத்தல விமான நிலையத்தின் சுற்றுவட்டாரத்தில் வாழும் பறவைகள், விலங்குகள் தங்குமிடங்களை அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

-இணையம்-

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆச்சாரியரின் அருள் வாக்கு



ஆதிசங்கரர் பாரதத்தைத் தன் காலால் நடந்து வலம் வந்து தன் அத்வைத்தக் கொள்கையைப் பரப்பிக் கொண்டிருந்த காலம் அது. அவர் வட இந்தியாவில் காசியை நோக்கித் தன் சீடர்களுடன் பயணிக்கையில், ஒருநாள் மாலை நேரம் அவர் ஒரு கிராமத்தை அடைந்தார். அன்றிரவு அந்தக் கிராமத்தில் தங்கிவிட்டு மறுநாள் பயணத்தைத்தொடர சங்கரர் திருவுளங்கொண்டார்.

கிராமத்தில் நுழைந்தவுடன், ஏற்கனவே சங்கரரைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த கிராமமக்கள் அனைவரும் ஒன்று திரண்டு அவரை மிகுந்த அன்புடன் உபசரித்து வரவேற்றனர். அவருடைய உபதேசங்களை மிகவும் கவனமாக பயபக்தியுடன் கேட்டனர். சங்கரருக்கும், சீடர்களுக்கும் பாலும், பழங்களும் தந்து உபசரித்தனர். இரவு முழுவதும் அவருடன் தங்கினர்.

அடுத்த நாள், சங்கரர் ஒவ்வொரு வீடாக விஜயம் செய்தார். ஒவ்வொரு வீட்டிலும் துளசிமாடம் என்ன, பூஜையறை என்ன என்று

## அம்புலிமாமா கதைகள்

காட்சி அளித்ததுடன், பக்திப் பாடல்களும், வேத கோஷங்களும் முழங்கின. ஒவ்வொரு வீட்டிலும் அவர்களுக்கு பலத்த உபசாரம் நடந்தது. கடைசியில் எல்லோரிடமும் விடை பெற்று அந்தக்கிராமத்தை விட்டு சங்கரர் தன் சீடர்களுடன் புறப்பட்டார். கிராம எல்லையைக் கடந்த பின், மீண்டும் அந்தக் கிராமத்தை நோக்கி, "இந்த கிராமத்திலுள்ள ஒவ்வொரு குடும்பமும் தேசத்தின் நான்கு மூலைகளிலும் செல்ல வேண்டும்" என்று ஆசி வழங்கிச் சென்றார்.

அவருடைய இந்த் வினோதமான ஆசியைக் கேட்டு சீடர்கள் திகைத்தனர். அவ்வளவு அன்பும், பண்பும் நிறைந்த அந்தக் குடும்பங்கள் நாலா பக்கமும் சிதறுமாறு அவர் ஏன் ஆசி வழங்கினார் புரியவில்லை.

சில நாட்களுக்குப்பின், சங்கரரும், சீடர்களும் மற்றொரு கிராமத்தை அடைந்தனர். ஆனால், இந்தக் கிராமத்து மக்கள் முந்தைய கிராமத்து மக்களைக் காட்டிலும், முற்றிலும் வேறுபட்டிருந்தனர். ஒரு மரத்தடியில் தன் சீடர்களுடன் அமர்ந்த சங்கரரை யாரும் கண்டுகொள்ளவேயில்லை. சிலர் குடித்துவிட்டு தள்ளாடிக்கொண்டே அந்த வழியே சென்றனர். சிலர் தங்களுக்குள் சண்டையும், பூசலுமாய் தாண்டிச் சென்றனர். ஒரு சிலர் சங்கரரை கேலி செய்து கொண்டே சென்றனர். கிராமத்தினர் யாரும் அவருக்குப் பச்சைத் தண்ணீர் கூட தரவில்லை. அன்றிரவை பட்டினியுடன் கழித்த சங்கரரும், சீடர்களும் மறுநாள் அந்த கிராமத்தை விட்டுப் புறப்பட்டனர்.

அந்தக் கிராமத்து எல்லையைத் தாண்டியவுடன் ஆச்சாரியார் திரும்பி நின்று கிராமத்தைப் பார்த்து, "இந்த கிராம மக்கள் என்றென்றும் ஒற்றுமையுடன் இந்த கிராமத்திலேயே இருக்கட்டும்" என்று அவர்களுக்கு ஆசி வழங்கினார். மறுபடியும், சீடர்களுக்கு குழப்பம் ஏற்பட்டது. இந்தக் கிராமத்து மக்களைப் போல் மோசமானவர்களை அவர்கள் அதுவரை கண்டதில்லை. தவித்த வாய்க்கு தண்ணீர் தராத பாவிகளுக்கு ஆசீர் வாதம் ஒரு கேடா? முந்தைய கிராமத்து மக்கள் எத்தனை



அன்பும், பாசமும் காட்டினர். அவர்களை சிதறுண்டு போகுமாறு அருள் வாக்களித்த குரு, வடிகட்டிய அயோக்கியர்களை நல்லவிதமாக ஏன் வாழ்த்தி அருள்வாக்கு வழங்கினார்? யோசித்து, யோசித்துக் குழப்பம்தான் மிஞ்சியதே தவிர, குருவின் நடவடிக்கைகள் புரியவில்லை.

அவர்களின் முகத்தை உற்று நோக்கிய சங்கரர் அவர்களுடைய மனத்தில் ஓடும் எண்ண அலைகளைப் புரிந்து கொண்டார். உடனே, அவர் இதழ்களில் புன்னகை அரும்பியது. அவர்களை நோக்கி, "சீடர்களே ! நான் வழங்கிய ஆசிகள் தங்களுக்குப் புதிராக இருக்கின்றன என்று தெரிகிறது. அதற்கான விளக்கம் இதோ!"

"முந்தைய கிராமத்தில், நான் சந்தித்த மக்கள் நம்முடன் பக்தியுடனும், பரிவுடனும் அன்புடனும் நடந்து கொண்டனர். நமக்கு இராஜ உபசாரம் செய்தனர். ஒவ்வொருவர் வீட்டிலும் பசுக்களும், துளசிமாடமுமாய் புனிதமாய் விளங்கின. அதனால்தான் நான் அந்த கிராமத்தினர் நாடெங்கும் பரவிச்செல்ல வேண்டுமென ஆசி வழங்கினேன். அதாவது மற்ற ஊர்களில் ஊருக்கு ஒரு குடும்பம் இவர்களுடையதாக இருந்தால், இந்தக் குடும்பத்தினரைப் பார்த்து மற்றக் குடும்பங்களும் பண்பட்டவர்களாக, நல்லவர்களாக மாறுவர்.

அதனால்தான் அந்தக் குடும்பங்கள் நாடெங்கும் சிதறிப் பரவவேண்டுமென ஆசிர்வதித்தேன். மரியாதை தெரியாத இந்தக்கிராமத்துப் பண்பாடற்ற மக்களை ஒற்றுமையாக இங்கேயே சேர்ந்திருக்கும்படி வாழ்த்தினேன்.

இத்தகையவர் மற்ற ஊர்களுக்குச் சென்றால் குடப்பாலில் துளி விஷம் சேர்ந்தாற்போல் மற்ற நல்லவர்களையும் மோசமாக்கிவிடுவார்கள். அதனால்தான் அவர்களை இங்கேயே இருக்கும்படி வாழ்த்தினேன்.

ஒரு நல்ல குடும்பம் புதிதாக மற்றொரு கிராமத்திற்குச் சென்றால், இருண்ட அறையில் ஏற்றி வைத்த சுடர்விளக்குபோல் எல்லோரையும் நல்லவர்களாக மாற்றுவார்கள். ஒரு ஆட்டு மந்தையில் ஒரு ஆடு பாதையிலிருந்து பிரிந்து தன் வழியே சென்றால், மற்ற ஆடுகளும் கண்மூடித்தனமாக அந்த ஆட்டைப் பின் தொடரும்.

மனிதர்களும் இதே போல் தான். ஒரு கிராமத்தில் மிக நல்லவர்களாக ஒரு குடும்பத்தினர் இருந்தாலும், மோசமானவர்களாக இருந்தாலும் அதன் பாதிப்பு கிராமம் முழுவதும் ஏற்படும்.

எல்லோரையும் தன் போல் மாறும்படி செய்யலாம். இப்போது என் ஆசிர் வாதத்தின் உட்கருத்து புரிந்தது" என்று கூறி, சீடர்களை அழைத்துக்கொண்டு காசியை நோக்கி நடந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நுளம்புகள் பெருக்கம்; கொழும்பு சட்டபீடத்திற்கு பூட்டு

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தை தற்காலிகமாக மூடுவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

டெங்கு நுளம்பு அபாயம் காரணமாகவே பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தை தற்காலிகமாக மூடவிருப்பதாக அப் பல்கலைக்கழகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த நாட்களில் பெய்த அதிக மழை காரணமாக சட்ட பீட கட்டடத் தொகுதியில் மழை நீர் தேங்கியுள்ளது.

இந்நிலையில் இப்பகுதியை கொழும்பு நகர சபையின் வைத்திய திணைக்களத்தினர் ஆய்வு செய்தனர். இதன்போது அங்கு டெங்கு நுளம்பு பெருகும் இடம் ஒன்று இனங்காணப்பட்டது.

இதனால் உடனடியாக சட்டபீடத்தை மூடுமாறு வைத்திய திணைக்களத்தினர் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

இதன்படி கடந்த திங்கட்கிழமை மாலை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடம் தற்காலிகமாக மூடப்பட்டது.

கடந்த மாதத்தில் சட்ட பீடத்தைச் சேர்ந்த 20 மாணவர்கள் டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட அதே வேளை முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவால் கடந்த மே மாதம் 5 ஆம் திகதி நடத்தப்பட்ட பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு நியமிக்கும் பரீட்சை மற்றும் வடமாகாணக் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட நேர்முகத்தேர்வு என்பவற்றின் அடிப்படையில் இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங் களுக்கு தமிழ்மொழி மூலமான ஆசிரியர்கள் 200 பேர் ஆசிரியர் நியமனத்திற்கு தகைமை பெற்றுள்ளனர் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். இதற்கமைய யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிலும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு மறுநாள் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வவுனியா நகர சபை மண்டபத்திலும் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்டவர்களது பெயர்ப் பட்டியலை வடமாகாணக் கல்வி அமைச்சின் விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் எனவும் அவர் அறிவித்துள்ளார். •(அ)

# ஹெலஉறுமய கட்சி வெட்கம் கெட்டது

## சாடுகிறது ஐ.தே.க.

மாகாணசபை அதிகாரங்கள் மற்றும் வரப்பிரசாதங்களை முழு அளவில் அனுபவித்துக் கொண்டு, அதனை இரத்து செய்யுமாறு ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரி வருவதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சி ஓர் வெட்கம் கெட்ட கட்சி என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

தேவைகளுக்கு ஏற்ற வகையில், கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்திக் கொள்ளப்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். மாட்டிறைச்சியை உட்கொண்டு மாடுகளை கொலை செய்யக் கூடாது என கோருவதனைப்போன்றே தற்போதைய ஆளும் கட்சியின் சில அமைச்சர்களின் நடவடிக்கைகள் அமைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறிய பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உறுப்பினர்கள் பல்வேறு மாகாண சபைகளில் பல்வேறு பதவிகளை வகித்து வந்ததுடன் தற்போதும் வகித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மாகாணசபை முறைமையின் மூலம் கிடைக்கப் பெறும் சகல வரப்பிரசாதங்களையும் குறித்த தரப்பினர் அனுபவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## பௌத்த பிக்குவின்

# வாய்க்கு பிளாஸ்டர் ஒட்டி சந்திரவட்டக்கல் திருட்டு

அநுராதபுரம் கெப்பற்றிக் கொல்லாவ, ஹேரத் ஹில்மிலேவ விஹாரையில் பிக்குவின் வாய்க்கு பிளாஸ்டரை ஒட்டிவிட்டு சந்திரவட்டக்கற்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியிலிருந்து மூன்று மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விஹாரைக்குள் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்த பௌத்த பிக்கு மற்றும் சிவில் பாதுகாப்பு படை வீரர் ஆகிய இருவரின் வாய்களுக்கும் பிளாஸ்டரை ஒட்டிவிட்டே பெறுமதி வாய்ந்த ஐந்து சந்திரவட்டக்கற்களையும் கொள்ளையிட்டு சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணைகளை நடத்தி வருவதாகவும் தெரிவித்தனர். (எ-11)




❖ *1508* - புனித ரோமப் பேரரசன் முதலாம் மாக்சிமிலியன் பிரியுல்லா என்ற இடத்தில் வெனிசியப் படைகளிடம் தோற்றான்.

❖ *1644* - கின் அரசமரபின் மஞ்சு படைகள் பீஜிங் நகரைக் கைப்பற்றின.

❖ *1711* - யாழ்ப்பாணத்தில் இந்து மதச் சடங்குகளுக்கு ஒல்லாந்து அரசினால் தடை விதிக்கப்பட்டது.

❖ *1752* - மொஸ்கோவின் மூன்றில் ஒரு பங்கு தீயினால் அழிந்தது. 18 ஆயிரம் வீடுகள் சேதமடைந்தன.

❖ *1761* - சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் வீனஸ் கோளின் நகர்வு பூமியின் பல இடங்களிலும் அவதானிக்கப்பட்டது.

❖ *1808* - நெப்போலியனின் சகோதரன் ஜோசப் பொனபார்ட் ஸ்பெயின் மன்னன் ஆனான்.

❖ *1832* - பாரிசில் மாணவர் எழுச்சி முறியடிக்கப்பட்டது.

❖ *1844* - கிறிஸ்தவ இளையோர் அமைப்பு (YMCA) லண்டனில் அமைக்கப்பட்டது.

❖ *1859* - குயின்ஸ்லாந்து என்ற பெயரில் புதிய குடியேற்ற நாடு நியூசவுத் வேல்ஸ் இலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

❖ *1862* - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் டென்னசியில் மெம்ஃபிஸ் நகரை கூட்டமைப்புப் படைகளிடம் இருந்து கைப்பற்றினர்.

❖ *1882* - அரபிக் கடலில் இடம்பெற்ற புயலால் மும்பையில் ஒரு இலட்சம் பேருக்கு மேல் உயிரிழந்தனர்.

❖ *1912* - அலாஸ்காவில் நொவரப்டா எரிமலை வெடித்தது.

❖ *1930* - இலங்கையில் வீரகேசரி நாளிதழ் ஆரம்பிக்கப்பட்டது.

❖ *1944* - இரண்டாம் உலகப் போர்: நோமண்டி சண்டை ஆரம்பமானது.

❖ *1971* - சோயுஸ் 11 ஏவப்பட்டது.

❖ *1974* - சுவீடனில் நாடாளுமன்ற முடியாட்சி அமைக்கப்பட்டது.

❖ *1981* - இந்தியாவில் தொடரூந்து ஒன்று பகுமதி ஆற்றில் தடம் புரண்டு வீழ்ந்ததில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகினர்.

❖ *1984* - இந்திய இராணுவத்தினர் அம்ரித்சரில் உள்ள பொற்கோயிலில் தாக்குதல் நடத்திய உயிரிழந்து 335 பேர் காயமுற்றனர்.

❖ *1993* - மங்கோலியாவில் முதலாவது நேரடியான ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது.

❖ *2004* - இந்தியாவில் தமிழ் மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

*பிறப்புகள்*

❖ *1799* - அலெக்சாண்டர் புஷ்கின், ரஷ்ய எழுத்தாளர், கவிஞர் (இ. 1837)

❖ *1893* - கருமுத்து தியாகராஜன் செட்டியார், இந்திய விடுதலை இயக்கத்தில் முக்கிய பங்கு வகித்தவர் (இ. 1974)

❖ *1901* - சுகர்னோ, இந்தோனேசியாவின் முதல் ஜனாதிபதி (இ. 1970)

❖ *1930* - சுனில் தத், இந்தியத் திரைப்பட நடிகர் (இ. 2005)

❖ *1948* - சுப்ரமண்ய ராஜூ, தமிழ் எழுத்தாளர் (இ. 1987)

❖ *1986* - பாவனா, தமிழ், மலையாளத் திரைப்பட நடிகை

*இறப்புகள்*

❖ *1947* - மு. சி. பூரணலிங்கம் பிள்ளை, தமிழறிஞர் (பி. 1866)

❖ *1968* - ரொபேர்ட் எஃப். கென்னடி, அமெரிக்க செனட்டர் (பி. 1925)

❖ *1996* - ஜோர்ஜ் ஸ்நெல், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1903)

❖ *2007* - வீ. கே. சமரநாயக்க, இலங்கையின் அறிவியலாளர் (பி. 1939)

❖ *2008* - ஜோர்ஜ் சந்திரசேகரன், இலங்கை வானொலி ஒலிபரப்பாளர் (பி. 1940)

❖ *2009* - ராஜமார்த்தாண்டன், கவிஞர், எழுத்தாளர்

### மு. சி. பூரணலிங்கம் பிள்ளை



மு. சி. பூரணலிங்கம்பிள்ளை தமிழறிஞர் ஆவார். தமிழ் மொழியின் தொன்மையையும், உயர்வையும் பிற மொழியினரும் அறியும் வண்ணம் இவர் செய்த இவர, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள "முந்நீர்ப்பள்ளம்" என்னும் ஊரில் 1866 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி பிறந்தார்.

பாடசாலைப் படிப்பை முடித்தவுடன் பரமக்குடி நீதிமன்றத்தில் எழுத்தராகப் பணியாற்றினார். பின் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் மேற்படிப்பை முடித்தார். கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன், பாளையங்கோட்டை இந்துக் கல்லூரி, சென்னை கிறிஸ்தவக் ஆகிய கல்வி நிறுவனங்களில் ஆங்கில பேராசிரியராகப் பணியாற்றினார்.

ஆங்கிலப் பேராசிரியராக இருந்த இவர், தமிழ்ப் பற்றும், தமிழ் இன உணர்வும் கொண்டு வாழ்ந்ததுடன் தமிழுக்குப் பெரும் பணியும் ஆற்றியுள்ளார்.

தமிழில் 18 நூல்களையும், ஆங்கிலத்தில் 32 நூல்களையும் மற்றும் சட்ட நூல்களையும் எழுதியுள்ளார். இவரது படைப்புகளில், சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், குழந்தை இலக்கியம், ஆய்வுக் கட்டுரைகள், மொழிபெயர்ப்பு மற்றும் சொற்பொழிவு எனப் பல வீச்சுகளைக் காண முடிகிறது.

திருக்குறள் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்து பன்னிரண்டு பக்கங்களில் ஆராய்ச்சி முன்னுரையும் எழுதினார். திருக்குறள் குறித்துத் திறனாய்வு நூல் ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

"தமிழ் இந்தியா" என்ற ஆங்கில நூலில் தமிழ் மொழியின் தொன்மையையும், தமிழரின் உயர்ந்த அறிவியல் சிந்தனைகளையும், பண்பாட்டையும், வரலாற்று ஆதாரங்களோடு சுட்டிக் காட்டியுள்ளார். முதுகலைத் தமிழ் பயிலும் மாணவர்களுக்காக "தமிழ் இலக்கிய வரலாறு" என்ற ஆங்கில நூலை எழுதினார். 1947 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலைத்தேய நாடுகளின் அரசியல் சிந்தனையும் ஈழத்தமிழர்களும்



நாடாளுமன்ற ஆட்சியில் நம்பிக்கை கொண்ட தாராளப் பொருளாதார- ஜனநாயக மேலைத்தேய வல்லரசு நாடுகள், பிரிவினையை ஆதரித்து ஈழத்தமிழர்கள் தமது உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு சாதகமாக இருப்பார்களா?

இலங்கை நிகழ்திய மனித உரிமை மீறல்கள் தேசிய சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்குமா?

ஈழத்தமிழர் தற்போது தொடர்ச்சியாக நிகழ்த்திவரும் எமது நிலம் எமக்கு வேண்டும் போராட்டமும், சுதந்திர சாசன பிரகடனம் என்னும் அனைத்துலக இராச தந்திர நகர்வும் எமக்கான விடிவை நோக்கி முன்னகர்த்துமா?

இக்கேள்விகளுக்கு மத்தியில்தான், தமிழ் இனம் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கிறது.

மனித உரிமை மீறல்கள் மீதான குற்றச்சாட்டு இலங்கை அரசு மீது உள்ளது என்பதை, உலகப் பொது ஊடகங்கள் யாவும் இன்று கூறிவருகின்றன. ஈழத்தமிழர்கள் என்ற இனம் இந்த சிறிய தீவிலே எவ்வாறு கொலை செய்யப்பட்டார்கள்; எவ்வாறு துன்புறுத்தப்பட்டுக் கொண்டிருக்றார்கள் என்பதை எல்லாம் இந்த செய்தி நிறுவனங்கள் விவரணமாக எடுத்துக் காட்டி விருதுகளும் பெற்றுச் சென்றுள்ளன.

இருந்தபோதிலும், இலங்கை அரசோ பல்வேறு மூடிய கதவுப் பேச்சுவார்த்தைகள் ஊடாகவும், பேரம் பேசல்களின் ஊடாகவும், பிரித்தானிய பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்கான நிகழ்வை நடத்தும் நாடு என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது.

**பாகிஸ்தான், சிம்பாபே, நைஜீரியா, பிஜி தீவுகள் என பல நாடுகள் ஜனநாயகத்திற்கும் மனித உரிமைக்கும் மதிப்பளிப்பதில்லை எனத் தடை செய்யப்பட்டுள்ளன. ஆனால், சில நாட்களுக்குள்ளே பல்லாயிரக்கணக்கான மக்களை கொலை செய்த நாடு, அனைத்துலக ஜனநாயக அரங்கிலே தப்பித்துக் கொள்ளக் கூடிய நிலை உள்ளது என்றால், ஈழத்தமிழர்கள் மீதான மனித உரிமை மீறல்களுக்காக தாராள ஜனநாயக நாடுகள் தலையீடு செய்து பிரிவினைக்கு ஆதரவு செய்வார்கள் என்பது எதிர்பார்க்க முடியாததாகும். ஒருவேளை பிராந்திய நிலையில் பெரும் அரசியல் மாற்றம் ஒன்று உருவாகுமிடத்து எதிர்பார்ப்புளுக்கு சாதகமான பலன் கிடைக்கலாம்.**

இந்நிலையில் அரசின் மனித உரிமை மீறல்களை, தேசிய இனங்கள் பிரிந்து செல்வதற்குரிய ஓர் அரசியல் ஆயுதமாக பயன் படுத்தக்கூடிய நிலை குறித்து எவ்வாறு உலக ஆய்வாளர்கள் பார்க்கிறார் கள் என்பது இங்கே கவனிக்கத் தக்கதாகும். மனித உரிமைகள் பொதுவாக எல்லா அரசுகளாலும் மிகவும் எச்சரிக்கையாகவே கையாளப்படுகிறது. இருந்தபோதிலும் தொண்ணூறுகளின் ஆரம்பத்திலிருந்து மனித உரிமை மீறல்கள் காரணமாக பல நாடுகள் அனைத்துலக நாடுகளின் தலையீடுகளையோ அல்லது வல்லரசுகளின் தலையீடுகளையோ சந்தித்துள்ளன என்பது வரலாற்று உண்மைகளாகும்.

தமது தேசிய இனங்களை அதீத துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கியதன் காரணமாக உளமார்ந்த முறையில் ஓர் அரசு மீது இதர அரசுகளோ அல்லது அனைத்துலக நிறுவனங்களோ தலையிடுவது பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே அமைந்துள்ளன. இதன் காரணமாக அனைத்துலக அரங்கிலே பல புதிய அரசுகளும் தோன்றி உள்ளன.

**உதாரணமாக, நேட்டோ படைகள் 1995 -இல் முன்னைய யூக்கோசிலாவிய பிராந்தியங்களான பொஸ்னிய- சேர்பிய பகுதிகளில் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு செல்லும் பொருட்டு குண்டு வீச்சுக்களை நடத்தியதையும், கொசோவாவில் அல்பானிய இஸ்லாமியர்களை இன அழிப்பிலிருந்து காப்பாற்றும் பொருட்டு 1999-ல் நேட்டோ படைகள் தலையீடு செய்ததையும், அதே ஆண்டு கிழக்கு திமோரில் இந்தோனீசிய ஆக்கிரமிப்புக்கு எதிராக அவுஸ்திரேலிய தலைமையிலான படைகள் தலையிட்டதையும் கூறலாம்.**

மனித உரிமையைப் பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு நாடுகளிலும் அனைத்துலக தலையீடு தவிர்க்க முடியாததாக இருந்தபோதிலும், மனிதாபிமானத்திற்கான தலையீட்டிலே உள்ள பிரச்சினைகளையும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை. தலையிடுவதற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க நிலை இங்கே முக்கியமானதாகும். எத்தகைய நிலையில் அனைத்துலகத் தலையீடு வேண்டும் என குறிப்பாக வரையறை செய்யப்படாத போதிலும் அதீத மனித அவலம் ஏற்படும் போததெல்லாம் அந்தந்த நாடுகளில் அனைத்துலக தலையீடு தவர்க்க முடியாததாகிறது.

இதற்கும் மேலாக யார் தலையிடுவது, யாருடைய நலன்கள் இத்தலையீட்டினால் பாதிக்கப்படக்கூடிய நிலையுள்ளது; தலையீட்டின் மூலம் ஏற்படக்கூடிய இராணுவ செலவுகளை யார் ஏற்பது; ஒரு அரசு அனைத்துலக தலையீட்டின் மூலம் தேசிய ஒருமைப்பாடு என்பதை இழக்குமிடத்து சட்டம் ஒழுங்கு சீர்குலைந்த நிலையின், பின்விளைவுகளை எதிர்கொள்வது யார்; எனப் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களுக்கு தீர்வு காணப்பட வேண்டி உள்ளன.

இந்தவகையில் தற்போதைய தெற்காசிய பிராந்திய நிலைமையை வைத்துப் பார்க்கும் போது இனப்படுகொலைகள் தொடர்பாக இலங்கை மீதான அனைத்துலக தலையீடுகளை ஈழத்தமிழர்கள் எதிர்பார்ப்பது முற்று முழுதான நம்பிக்கை தருவதாக இல்லை. ஆனபோதிலும், சுய இலாபத்தையே மையமாகக் கொண்டு இயங்கிவரும் மேலைத்தேய அரசியல் தத்துவத்தின் அடிப்படையில் நின்று பார்க்கும்பொழுது, அனைத்துலக நகர்வுகளும், அதன் போக்கும் வல்லரசுகளின் நலன்களும், இலங்கை அரசின் வெளியுறவுக் கொள்கையில் அண்மையில் ஏற்பட்டுள்ள மாற்றமும், ஈழத்தமிழர் இனப்படுகொலையினை அனைத்துலக வல்லரசுகள் ஒரு கருப்பொளாகப் பார்க்கும் நிலை ஏற்படுமென ஈழத்தமிழர் தரப்பு- ஆய்வாளர்கள் கருதுவது தெரிகிறது.

இலங்கை தனது வெளியுறவு கொள்கையில் பல தடவைகள் வாக்குறுதி இராசதந்திரத்தைப் பயன்படுத்தி வந்துள்ளதாக அண்மையில் மேலைத்தேய வல்லரசு ஒன்றின் இராசதந்திரி குறிப்பிட்டது கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். திரை மறைவு பேச்சுக்களின் போது இலங்கை பல ஆயிரக்கணக்கான [illegible] தேசியப் பிரச்சினை [illegible] சந்தர்ப்பங்களிலிருந்து நழுவும் தந்திரங்களையும் கைக்கொண்டுவந்திருந்தபோதிலும், நடைமுறையில் எந்தவிதமான முன்னேற்றத்தையும் காணாத நிலையை பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்களினது அறிக்கைகள் ஊடாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இங்கே இலங்கை அரசு எந்த நிலையிலும் தனது ஒட்டுமொத்த வெளியுறவு நிலையை சமயோசித திரிபுபடுத்தி தப்பித்துக் கொள்ளக்கூடிய தன்மையைக் கொண்டுள்ளது என்பதுடன் கொழும்பின் அரசியல் தலைமைக்கும் அதன் அதிகாரத்திற்கும் கடந்த ப ல ஆண்டுகளாக எந்த வகையிலும் தளம்பல் ஏற்படாத நிலை இருந்து வந்துள்ளமையும் கவனிக்கத்தக்கதாகும்.

கொழும்பு அதிகாரமையம் எத்தனையோ ஆண்டுகள் ஈழத்தமிழர்களது விடுதலைப் போராட்டத்தை சந்தித்து வந்தது; பாரிய இராணுவத் தோல்விகளைச் சந்தித்தது; அரசியல் தலைவர்கள் படுகொலை செய் செய்யப்பட்டுள்ளனர்; பொருளாதார நெருக்கடிகள் பல ஆண்டுகளாக இருந்துவருகின்றன. ஆனால், ஒரு பொழுதும் அதிகார மையத்தில் தளம்பல் ஏற்பட்டது கிடையாது. எழுபதுகள் எண்பதுகளில் ஆபிரிக்க நாடுகளில் அவ்வப்போது ஏற்பட்ட இராணுவப் புரட்சிகள் போலவோ அல்லது சோசலிஷ ஆட்சி மாற்றமோ ஏற்பட்டது கிடையாது.

இலங்கை தன்னை ஒரு நாடாளுமன்ற ஜனநாயக நாடாக எப்பொழுதும் காட்டிக் கொள்வதிலே தவறுவதில்லை. மேலைத்தேய நாடாளுமன்ற ஆட்சிகளில் அரசியல், சட்டத்துறையும் வைபவ ரீதியான நாடாளுமன்ற சாஸ்த்திரப்படிகளும், இதர அரசியல் சமய நிறுவனங்களும் ஒரு நாடாளுமன்ற ஆட்சியை காவல் காத்து வருவதுடன் அதிகார மையத்தின் அங்கங்களாக நேரடியாகவோ மறைமுகமாகவோ செயற்பட்டு வருகின்றன.

இதன் மூலம் அரசியல் அதிகார கட்டமைப்பு நிரந்தர நிலைகொண்ட தோற்றம் பெற்றதாக அமைகிறது.

இலங்கையிலும் இத்தகைய தோற்றப்பாடுகள் அமைந்துள்ளதால் மேலைத்தேய அரசுகள் இலங்கையின் நாடாளுமன்ற ஆட்சிக்கு முன்னுரிமை அளிக்கின்றன.

இதனால், இனப்படுகொலைகள் இடம் பெற்றபோதிலும் மேலைத்தேயத்தை ஒத்த பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற கட்சி, ஆட்சி செய்யும் நாடாளுமன்ற ஜனநாயகமாக இலங்கை தன்னைத்தானே கூறிக் கொள்வதால், அனைத்துலக தலையீடுகளை மிகக்கடினமானவையாகவே மேலைத்தேயம் பார்க்கிறது. அனைத்துலக ஜனநாயக விழுமியங்களை தனது கேடயமாகப் பயன் படுத்தி பௌத்த சிங்கள அதிகார மையத்தை கட்டிக்காப்பதில் இலங்கை தனது சுதந்திரத் [illegible] காலத்திலிருந்தே வெற்றி [illegible]ந்துள்ளதை வரலாற்று ஆசிரியர்கள் பல கட்டுரைகளில் ஆதாரங்களுடன் காட்டியுள்ளனர்.

அனைத்துலக விழுமியங்களை ஒரு அரசு தனது கேடயமாகப் பயன்படுத்த வேண்டுமாயின் தற்காலத்திலே ஜனநாயக பண்பாடுகளைக் கொண்ட நாடாகத் தன்னை காட்டிக்கொள்வது முக்கியமானதாக கருதப்படுகிறது.

இங்கே அரசு என்று குறிப்பிடும் பொழுது மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கமோ அல்லது அரசியல் கட்சிகளோஅல்ல. இதில் அரசு என்பது ஒட்டுமொத்த சிங்கள, பௌத்த மேலாதிக்க வாதத்தை மன விருப்பமாகக் கொண்ட இலங்கை என்ற நிறுவனமே அரசாகக் கருதப்படுகிறது. இந்நிறுவனத்தில் அரசியல்வாதிகள், அரசாங்க சேவையாளர்கள், துறவிகள், அரச பொதுப்பணியாளர்கள், அரசாங்கத்தை தெரிவு செய்த பொது மக்கள் அனைவரும் சிங்கள பௌத்த பொறிமுறையை ஏற்று சிரம்மேல் வைத்து கால் பணிந்து செயலாற்றும் மனோநிலை கொண்டவர்கள் என்பதை மறந்துவிடலாகாது.

**அவ்வாறாயின் இந்தக் கேடயத்தினை ஊடறுத்துச் செல்ல முடியாதா? என்ற கேள்வி ஒன்று தனி ஈழத்தை நோக்கி பயணிக்கும் மக்கள் மத்தியில் உள்ளது.**

**இன்று எமது நிலம் எமக்கு வேண்டும்** என்ற ஒரு போராட்டத்தை, பல்வேறு பயமுறுத்தல்களுக்கும் மத்தியில் அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள் என பல்வேறு பகுதியினரும் ஒன்றிணைந்து உள்நாட்டிலே போராடி வருகின்றனர். அனைத்துலக புலம்பெயர் மட்டத்தில் நாடுகடந்த தமிழீழ அரசினால் சுதந்திர பிரகடன சாசனம் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், அனத்துலக அளவில் முள்ளிவாய்க்கால் பேரணிகள் மிகவும் உணர்வபூர்வமாக ஒரு தேசியத்தின் ஒருங்கிணைந்த நினைவு நாளாக நடாத்தப்பட்டுள்ளது. இவை அனைத்தையும் தாண்டி அனைத்துலகம் தமிழீழ விடுதலை என்பதை எத்தகைய கண்கொண்டு பார்க்கிறது என்பது முக்கியமானதாகும்.

இங்கே தமிழீழ மக்களது கோரிக்கையை இன்னமும் இலங்கையின் உள்ளகப் பிரச்சினையாக அனைத்துலகம் ஏன் பார்க்கிறது என்பது முக்கியமாகிறது.

இந்நிலையை புரிந்துகொள்வதற்கு ஈழத்தமிழர்களது போராட்டத்தை அண்மையில் அனைத்துலக் தலையீடுகள் மூலம் சுதந்திரம் பெற்ற புதிய நாடுகளின் போராட்டங்களுடன் ஒப்பீட்டு முறையில் நோக்க வேண்டியுள்ளது. ஒப்பீட்டு அரசியல், கோட்பாட்டு வளர்ச்சியின் மையப்பொருளாகும்.

இந்த ஒப்பீடு மேலைத்தேய தாராள ஜனநாயக நாடுகளின் பார்வையூடாக செல்லுமிடத்து, மனித உரிமை மீறல்கள் ஊடாக இன அழிப்பு இடம் பெறும் பொழுது இதர நாடுகள் தலையிடும் சந்தர்ப்பம் எவ்வாறு ஏற்படலாம் என்பது புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

லோ. பரமசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்தி பொருட்களை தீர்வையின்றி சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய அரசு முயற்சி

## சீனாவுக்கு விரைகிறது வர்த்தக்குழு

“ சீனச் சந்தைக்கு இலங்கை உற்பத்திப் பொருட்களை தீர்வையின்றி ஏற்றுமதி செய் வதற்கு அந்நாட்டிடம் அனுமதி பெறும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இரத்தினக்கற்கள், ஆபரணங்கள், வாசனைப் பொருட்கள், தேயிலை போன்ற பொருட்க ளுக்கே தீர்வையின்றி சீன சந்தையைத் திறந்து விடுமாறு அரசாங்கம் அந்நாட்டிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சுதந்திர வர்த்தக உடன்பாடுக்கு அமைய இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக சமனின்மையைக் குறைக்க சீனா இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இந்த நடைமுறைகளை விரைவுபடுத்த இரு நாடுகளுக்கு இடையிலும் கூட்டுக்குழு ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

கடந்த 1952 ஆம் ஆண்டில் இருந்து இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவு தொடர்ந்து வருகின்றது. இரு நாடுகளுக்கும் இடையில் பன்முனை ஒத்துழைப்பை விரிவுபடுத்த உறுதியான அடித்தளம் போடப்பட்டுள்ளது.

மொறட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக வர்த்தகப் பாடசாலை ஒன்றை நிறுவவும் சீனா இணக்கம்தெரிவித்துள்ளது.



இலங்கைக்கு சீன வர்த்தக குழு ஒன்று விரைவில் விஜயம் செய்வதற்கான ஏற்பாடுகளை சீனாவுக்கான இலங்கைத் தூதரகமும் ஏற்றுமதி அபிவி ருத்திச் சபையும் மேற்கொள்ளவுள் ளன என்றும் கூறியுள்ளார். (அ-2)

# மகள் மீது பாலியல் துன்புறுத்தல்; தந்தைக்கு 60 ஆண்டுகள் சிறை!

மகளை பாலியல் ரீதியாக துன்புறுத்திய தந்தைக்கு 60 ஆண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிறுமியை பலவந்தமான முறையில் பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக சிறுமியின் தந்தை மீது வழக்குத் தொடரப்பட்டிருந்து. கேகாலை பிரதேசத்தில் குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குற்றச்செயலில் ஈடுபட்ட நபருக்கு அறுபது ஆண்டு கால சிறைத் தண்டனையும் 30 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

அபராத பணத்தை செலுத்தத் தவறினால் மேலும் 15 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்படும் என கேகாலை உயர்நீதிமன்ற நீதவான் மேனகா விஜேசுந்தர அறிவித்துள்ளார். (அ-2)

# 50 கோடி ரூபா சொத்து அரசுடமையாக்கப்பட்டது

(கொழும்பு)

கோல்டன் கீ நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் சிசிலி கொத்தலாவலவின் 50 கோடி ரூபா பெறுமதியான சொத்து அரசுடமையாக்கப் பட்டுள்ளது.

வைப்பாளர்களுக்குபணம்செலுத்தும் நோக்கில் இந்தச் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் பம்பலப்பிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள காணியொன்றே இவ்வாறு அரசுடமையாக்கப்பட்டுள்ளது.

கோல்டன் கீ நிறுவனத்தை மூடியதால் அதில் பணத்தை வைப்புச் செய்தவர்கள் எதிர்நோக்கிய நட்டத்தை ஈடு செய்ய குறித்த சொத்துக்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

செலிங்கோ குழும நிறுவனத்தின் உரிமையாளர் லலித் கொத்தலாவலவின் மனைவியான சிசிலி கொத்தலாவல தற்போது லண்டனில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அவருக்கு பிரித்தானிய பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது. தற்போது சிசிலி கொத்தலாவல இன்டர்போல் பொலிஸாரினால் தேடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# தனியார் பேருந்து குறைபாடுகள் தொடர்பில் துரித விசாரணை

தனியார் பேருந்துகள் குறித்து தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் 1955 அவசர இலக்கத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகளை துரிதமாக விசாரணை செய்து சம்பந்தப்பட்ட சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் பேருந்து உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி நேற்று முன்தினம் 200 இற்கும் அதிகமான பொதுமக்களின் முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டன. இதன் போது தனியார் பேருந்து சேவையில் காணப்படும் குறைபாடுகள் குறித்தும் சுட்டிக்காட்டப் பட்டதோடு அவற்றுக்கு தீர்வு காண்பது குறித் தும் யோசனைகள் முன் வைக்கப்பட்டன.

பயணிகளின் முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்ட போதும் சில தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு நிர்வாகக் கட்டணம் செலுத்த உத்தரவிடப்பட்டது. சில சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு கட்டாய தண்டனைப் பயிற்சி வழங்கவும் தீர்மானிப்பட்டதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கூறியது.

பயணிகளிடம் கூடுதல் கட்டணம் அறவிட்டமை, பயணிகளை மோசமாக நடத்தியமை, கவனயீனமாக வாகனம் ஓட்டியமை, குளிரூட்டி உரிய படி செயற்படாமை, அதிக சத்தத்துடன் பாடல்களை ஒலிக்க விட்டமை உட்பட பல முறைப்பாடுகள் முன் வைக்கப்பட்டிருந்தன. (அ-2)




ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தின் பாடத்திட்டத்தை உள்ளடக்கிய கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. இக்கண்காட்சியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சேவைக்கால சித்திரக்கலை ஆசிரிய ஆலோசகர் திருமதி ம. இளமுருகன் நாடாவெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும் விருந்தினர்கள் கண்காட்சியை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் செய்யாதீர்கள்

## அமைச்சர் வாசு கோரிக்கை

(கொழும்பு)

அரசியல் அமைப்பில் மாற்றம் செய்யாது வடக்கு தேர்தல் நடத்தப்படவேண்டுமென தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.



கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், வடமாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு எதிராக பிரயோகிக் கப்படும் அழுத்தங்களை சமாளிக்க முழு அளவில் முயற்சி எடுக்க வேண் டும்.

13 ஆவது திருத்தச்சட்டத்தின் சில சரத்துக்களை மாற்றியமைக்க சிலர் முயற்சிக்கின்றனர்.

நாடு என்ற ரீதியில் ஐக்கியமாக செயற்பட அரசியலமைப்பு வழி வகை செய்துள்ளது.

மாகாணசபைகளின் ஊடாக தெற்கு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் வடக்கு மக்களுக்கும் வழங்கப்பட வேண்டு மென அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வடக்கு மாகாணசபைத் தேர்தலால் ஏனைய மாகாணங்களுக்கும் நன்மை

வடமாகாணங்களில் காணப்படும் தீர்க்கப்படாத பல பிரச்சினைகளை தீர்த்துவைக்குமெனெ ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

வடக்கில் பலர் இன்னமும் மீள் குடியேற்றம் செய்யப்படாது இடம் பெயர்ந்தே வாழ்கின்றனர்.

பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான சூழ்நிலையில் அம்மக்கள் வாழ்க்கை நடத்துகின்றனர்.

குறிப்பாக வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களில் பலர் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படவி ல்லை.

வடக்கில் தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் இவ்வாறான பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இந் நிலையில் இவர்களோடு தொடர்பான விடயமாக ஏனைய மாவட்டங்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படலாம் என்று குறித்து ஊடகம் தெரிவித்துள்ளது.

நிதி கையாள்கை மற்றும் காணிப் பிரச்சினைகள் தொடர்பான அதிகாரப் பரவலாக்கல் சார்ந்த விடயங்களில் இந்த தேர்தல் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# போலி கடனட்டைகளை வைத்திருந்த மூவர் விளக்கமறியலில் வைப்பு

(கொழும்பு)

போலி கடனட்டைகளுடன் கைதான வடபகுதி சந்தேக நபர்களை விளக்கமறியலில்வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

15 போலி கடனட்டைகளை வைத்திருந்ததாக கூறப்படும் வடபகுதியைச் சேர்ந்த மூன்று சந்தேக நபர்களை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு பிறிஸ்டல் வீதியில் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மற்றும் வல்வெட்டித்துறை பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி சந்தேக நபர்கள் பின்னர் இரகசிய பொலிஸாரிடம் மேலதிக விசார ணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டனர்.

சந்தேக நபர்கள் மேற்படி போலி கடனட்டைகளைப் பயன்படுத்தி மோசடி செய்த பணம் பயங்கரவாத இயக்கங்களுக்கு அனுப்பப்பட்டதா? என தாம் ஆராய்ந்து வருவதாகவும் இரகசிய பொலிசார் நீதிமன்றத்தில் மேலும் தெரிவித்தனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்விகளை வெற்றி கொள்வது நடைமுறையில் சாத்தியப்படுமா?

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி

அறிமுகம்

தோல்விகளால் மனிதர்கள் துவண்டு போவதாக சொல்லப்படுகிறது. இது ஆழமாக சிந்திக்காது கைமாற்றப்ப டுகின்ற சமூக கருத்தாகவே இருந்து வருகின்றது.

தோல்விகளால் மனம் தளர்தல் என்பது பலவீனமான மனிதர்களுக்குரிய சுலபமான உளநிலையாகவே காணப்படுகின்றது.

தோல்விகளை ஒருதடவை நிதானமாக பகுப்பாய்வு செய்கின்ற எந்தவொரு மனிதனும் மறுதடவை தோல் வியை துணிவுடன் எதிர்கொள்கிறான்.

தோல்வி தொடர்பான மனித இயல்புகளை மாற்ற முனைந்தால் என்ன? இளம் தலைமுறையினருக்கு அத்தகைய வாழ்வியல் கண்ணோட்ட த்தை அல்லது உளவியல் பயிற் சியை வழங்கினால் என்ன?

பாடசாலைகளில் ஆசிரியர்கள் எப்போதாவது தோல்வி பற்றிய கலந்துரையாடல்களை ம்ாணவர்களுடன் நடத்துவதுண்டா?

வெற்றியுடன் நெருக்கமாக இணைந்துள்ள அதன் மறு பக்கமே தோல்வியாகும். இதனால் வெற்றி கிடைப் பதுபோல் தோல்வி வருவதற்கும் வாய்ப்புக்கள் நிறைய உள்ளன என்பதை இளம் தலைமுறையினருடன் கல ந்துரையாடி தோல்விகளை எதிர்கொள்ளும் மனத் துணி வையும் அவற்றை வெற்றி கொள்ளும் வழிமுறைகள் பற்றிய தெளிந்த சிந்தனைகளையும் வளர்க்க வேண்டும். தோல்வி பற்றிப் பேசாது விடுவதால் என்ன நிகழ்ந்து விடுகின்றது? தோல்விகள் வராமல் போய் விடுகின்றனவா? தோல்விகளை வெற்றி கொள்வதற்கான திறன்கள் தாமாக வந்து விடுமா?

வெற்றிகள் பற்றிப் பேசுவது போலவே தோல்விகள் பற்றிய பல உண்மைகளும் பேசும் பொருளாக பாடசாலைகளில் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். இது பற்றிய சில அவ்தானங்கள் பற்றி இங்கு கலந்துரையாடுவோம்.

### தோல்வி- பேராற்றலை தூண்டி விடுவது

தோல்வி வருகின்ற போது ஒரு மனிதனின் உள்ளே புதைந்து கிடக்கும் பல இயல்புகளும் உணர்வுகளும் புத்துயிர் பெற்று மேலெழுந்து வருகின்றன.

முனைப்பு மிக்க வலு கூர்மையடைவதற்கான தேவைகளையும் பின்னிலைகளையும் சில வலுவான தோல்விகளே உருவாக்கி வந்துள்ளன. உள்ளடங்கிய ஆற்றல்கள் உச்சமட்டத்திற்கு உயிர் பெறுவதற்கான தூண்டுதல்களை நல்ல தோல்விகள் உருவாக்கியுள்ளன.

பலர் முன்னிலையில் ஒரு மாணவன் கேலி செய்யப்படும் போது தான் தோற்றுவிடக் கூடாது என்ற சுய முனைப்பு அவனுள் முளைவிடுகின்றது. அப்போது அவனது அறிவும் உணர்வும் துடிப்பும் இணைந்து துடிப்பாக பதில் சொல்லும் துணிவை அவனுக்குள் உயிர்த்தெழச் செய்கிறது. பின்பு தனிமையில் அவன் யோசிக்கும் போது அத்தகைய தோற்கும் நிலையில் இருந்து தான் விடுபடுவது பற்றிய எண்ணம் , திட்டம் , தேவை, துணிவு என்பன வளர்கின்றன.

அப்போது ஒரு புத்தகத்தைப் புதுக்கிய பதிப்பாக மறுதடவை வெளியிடுவதுபோல் புதிய தோற்றம் பெறுகிறான்.

வரலாற்றில் சிறிய தோல்விகளால் ஏற்பட்ட ஏமாற்றங்கள் பெரிய வெற்றிகளை தமதாக்கும் இயல்பாற்றலை வளர்த்து விட்டுள்ளன.

புதிதாக முனையாதவர்களும் புதிய வழியில் பயணிக்க எண்ணாதவர்களும் தமது ஆற்றல் எல்லைகளை அப்பால் நகர்த்த விரும்பாதவர்களும், தோல்விகளை எதிர்கொண்டிருக்க மாட்டார்கள்.

காய்க்காத மரங்கள் கல்லெறிக் குட்படுவதில்லையே. இடர் நேர்வுகளை எதிர்கொள்ளத் தயாராகும் போது காணும் முதல் வெற்றி என்பதே தோல்விகளுக்கு முகம்கொடுப்பதுதான்.

நம்பிக்கைகள் தேய்ந்து தனி மரமாக நின்ற மனிதர்கள் தோல்விகளால் ஓட ஓட துரத்தப்பட்டவர்கள் தான்பின்பு சாதனைச் சிகரங்கள் பலவற்றைத் தொட்டிருக்கின்றனர். சமூகங்களின் தோல்விகள் பல மாமனிதர்களைப் பிரசவித்துள்ளன.

பலரின் உள்ளே புதையுண்டிருக்கும் அசுர சக்தியை சில கூர்மையான தோல்விகளே இனங்காட்டியுள்ளன.

பல, படுதோல்விகளுக்கு பின்னர் ஒருவனுக்கு கிடைக்கின்ற வெற்றி அதிக மதிப்புடையது. வியாபார



கல்வித் தரிசனம்

உலகில் உச்சம் தொட்ட பல முன்னோடிகள் வெற்றியின் இரகசியங்கள் பலவற்றைத் தாம் கண்ட தோல்விகளின் அன்னையே தந்ததாக கூறுகின்றனர்.

எத்தனை தடவை நீ தோல்வியினால் கீழே வீழ்ந்து விடுகிறாய் என்பது முக்கியமல்ல.

ஆனால், அவ்வாறு விழுந்த பின்பு ஒவ்வொரு தடவையும் தோல்வியில் இருந்து எவ்வாறு துள்ளி எழுந்தாய் என்பதே முக்கியமானது.

இக்கூற்று பல உண்மைகளை வலியுறுத்துகின்றது. அவை ,

❖ எழுந்து நிற்க வேண்டிய தேவை அவனுக்கு முன்னால் வந்து நிற்கின்றது.

❖ எழுந்து நிற்கும் போது வலுவுடன் நிற்க வேண்டும் என்ற விழிப்புணர்வை உருவாக்குகின்றது.

❖ எழுந்து நிற்கும் போது அதிகூடிய ஊக்க உணர்வுடன் எழ வேண்டும்.

❖ துள்ளி எழும்புவது என்ற உணர்வு மற்றும் எண்ணம், ஆழ் மனதில் இருந்தால் தோல்விகள் தாமாக தோற்றுப் போய்விடும்.

எளிதாக கிடைக்கும் வெற்றிகள் மனிதர்களை சாதனைக் கோடு வரை நகர்த்தியதில்லை என்கின்றனர் பல வணிகத்துறை தலைவர்கள்.

எளிதாக கிடைக்கும் வெற்றிகள் ஏதோ சில தவறுகளைத் துணையாக உள்ளடக்கியே காணப்படும் என்று பலர் நம்புகின்றனர்.

பாடசாலைப் பருவத்தில் பெற்றோரும் ஆசிரியரும் பிள்ளைகளுக்கு தோல்வி தொடர்பாக பின்வரும் அணுகுமுறைகளைக் கற்றுத் தருவது அவசியமாகும்.

வெற்றியை நோக்கி தொடர்ந்து போராடுவதில் நம்பிக்கை கொள்ளச் செய்தல்

❖ தடைகளை தகர்ப்பதற்குரிய மனோதைரியத்தையும் தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ள ஊக்குவித்தல்.

❖ தோல்வி எந்த வடிவத்தில் வந்தாலும் துணிந்து எதிர்கொள்ளுதல் வேண்டும் என்பதை நம்பச் செய்தல்

❖ வெற்றிக்காக சிரமங்களை எதிர்கொள்வதற்கு உள்மனதில் மகிழ்ச்சி கலந்த முனைப்பை வளர்த்தல்

❖ சிரமமான கருமங்களைத் தொடர்ந்து மேற்கொள்ளும் போது அதிக சக்தியும் அதிக திறமையும் ஏற்படும் என்பதை உணர்த்துதல்.

❖ தோல்விக்கெதிரான மூர்க்கத்தனமான போராட்டம் வெற்றி தரும் போது ,அதி உயர்ந்த உவகை கிடைக்கும் என்பதை வலியுறுத்தல்.

பாடசாலைப் பருவத்தில் மாணவன் ஒருவன் தான் ஆசைப்பட்ட பலவற்றைப் பெற முடியாது, தோல்வியும் மன உளைச்சலும் விரக்தியும் பெற்றிருக்கக் கூடும். அதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன.

ஆனால், எப்போது அதற்கு எதிராக தான் போராடி மேலெழ வேண்டுமென்று எண்ணுகிறானோ அன்றிலிருந்து வியத்தகு புதிய மனிதனாக அவன் மாற்றப்படுகிறான். எண்ணம், திட்டம், செயல், இலக்கு, துணிவு, நடத்தை எல்லாவற்றிலும் தெளிவான பார்வை அவனிடம் உருவாக ஆரம்பித்து விடும். பின்பு தோல்விக்கெதிராக வாழ்வது என்பதே அவனது கவர்ச்சிகரமான இலட்சியமாகிவிடும்.

இடைவிடாத உளவியல் தூண்டுதல் அவனை ஊக்கமுள்ள மனிதனாக மாற்றிவிடும். தொடர்ந்து வலிமையுள்ள மனிதனாக ஒருவனை மாற்றும் உள்ளார்ந்த ஆற்றல் தோல்விகளுக்கு உண்டு என்பதை பெற்றோரும் ஆசிரியர்களும் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கல்வியால் ஏற்படும் தெளிவும் துணிவும் தோல்விகளை எதிர்கொள்ளும் மிகப் பெரிய பலத்தை தருகின்றன. இதனை அறிவுப்பலம் என்று நம்புதல் வேண்டும். அமெரிக்க ஜனாதிபதியாக இரு ந்த ஆபிரகாம் லிங்கன் சில சமயம் ஒரு மாளிகையில் பிறந்து பெரிய கல்லூரிக்கு சென்றிருந்தால் அவர் சில சமயம் பெரிய நிறுவனம் ஒன் றில் அதிகாரியாக வந்திருக்கலாம். அவர் ஜனாதி பதியாக வராமலேயே போயிருக்கலாம்.

ஓரிசன் கவெற் மாடன் (2006) லிங்கன் பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

எதிர்மறையான துயரமான நிலைகளுடன் அவர் செய்த வீராவேசமான போராட்டம்தான், அவருக்குள் ஒளிந்திருந்த மாமனிதனை வெளியே கொண்டு வந்தது

நோக்கங்கள் தான் மனிதர்களின் முயற்சியின் கடினத்தன்மையையும் முயற்சியின் அளவையும் தீர்மானிக்கின்றன. தோல்விகளை எதிர்கொள்ளும்போதுதான் முயற்சிகள் நேரான போக்கில் வலிமையடைகின்றன. பொதிந்துள்ள திறமைகளில் 75 சதவீதத்தை தோல்விகளின் தீவிரம் மனிதர்களிலிருந்து வெளியே பிடுங்கி எடுத்துவிடுகிறது. ஆற்றலை வலிமையான செயலாக மாற்றிவிடும் பேராற்றல் தோல்விகளிலிருந்துதான் பிறப்பதாக போராட்டங்களில் ஈடுபட்டு வெற்றி பெற்ற சோசலிஷத் தலைவர்கள் பலரும் தெளிவுபடுத்தியுள்ளனர்.

16



பேராசிரியர் மா.சின்னத்தம்பி

### தோல்வியின் பின் கற்றுக்கொள்வதென்ன?

மிகப்பெரிய இழப்பு ஒன்று நம்மை நேருக்கு நேர் நின்று அச்சுறுத்தும் வரை நமது ஆற்றலின் சேமிப்புத் தொகுதி எவ்வளவு என்பதை நாம் உணர்வதேயில்லை.

சிலர் சோம்பலில் சக்கரவர்த்திகளாக இருப்பார்கள் அவர்களுக்கு சில கூர்மையான தோல்விகள் வந்து இழப்புகள் ஏற்பட்டு எதிர்கால வாய்ப்புக்கள் பலவும் தேய்ந்து, மகிழ்ச்சியும் அதிக தொலைவுக்கு நகர்ந்தால் மாத்திரமே அவர்களது உள்வைரம் மெல்ல அசையத் தொடங்கும்.

நல்ல மனிதன் என்று ஒருவனை உண்மையாக மதிப்பிடவேண்டுமானால், ஒரு பெரிய தோல்வியின் பின் அவன் எவ்வாறு துலங்குகிறான் என்பதையே அளவீடாகக் கொள்ளவேண்டும். தோல்விகள் ஏற்பட்ட பின் ஒரு மனிதனில் எத்தகைய சிந்தனைகள் ஏற்படுகின்றன. எத்தகைய முரண்பட்ட செயல்களை அவன் வெளிப்படுத்துகிறான் என்பவை மிகவும் முக்கியமானவை.

தோல்வியின் பின் ஒருவனது மன உறுதியில் எத்தகைய மாறுதல் ஏற்பட்டதென்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தோல்விகளால் மனவுறுதி பலமடையவேண்டும். மனவுறுதியை வலிமைப்படுத்தும் பேராற்றல் பெரிய தோல்விகளிலிருந்துதான் பலராலும் பெறப்பட்டுள்ளது. தோல்விகளால் ஊக்கமிழக்காமல் இருப்பது எவ்வாறு என்பதற்கான வழிகாட்டல்கள், ஊக்கங்கள், கலந்துரையாடல்கள், பயிற்சிகள் பாடசாலைகளில் வழங்கப்படுதல் வேண்டும்.

எதிரிகளும் எதிர்ப்புகளும் உங்களைக்கண்டு அச்சம்கொள்ளும்வகையில் அதியுயர்ந்த மனவுறுதியுடன் எழுந்து நிற்கவேண்டும் என்பதை மாணவர்களுக்கு வகுப்புக்களில் தெளிவுபடுத்த வேண்டும். பிரார்த்தனை மண்டபங்களில் இவை பற்றி அதிபர்களும் ஆசிரியர்களும் அடிக்கடி உரையாற்றவேண்டும்.

தோல்லிகளை எதிர்கொள்ளுதல் என்பது பேசு பொருளாக வகுப்பறைகளில் பரவவேண்டும்.

சிறுவர் பூங்காக்களில் சிறுவர்கள் முதலில் மேலிருந்து கீழே சறுக்கி வருவதற்குப் பயப்படுவார்கள்; அஞ்சி நடுங்குவார்கள்; சில சமயம் அழுவார்கள். ஆனால், பெற்றோர் அதனைக் கண்டுகொள்ளாமல் ஒதுங்கிச் சென்றுவிட்டால் முதலில் கீழே விழுந்தபோது சுற்றுமுற்றும் பார்ப்பார்கள். ஒருவரும் தாம் விழுந்ததை பார்க்கவி ல்லையெனில் திரும்பத் திரும்ப முயற்சிப்பார்கள். படிப்படியாக அவர்களுக்கு மிகவும் குதூகலம் தரும் விளையாட்டாக அது மாறிவிடும். மீண்டும் எழுந்து நிற்றல்; மீளவும் முயற்சி செய்தல்; அதில் நிபுணத்துவம் பெறுதல்; அதில் பிரிக்கமுடியாத ஈடுபாடும் வல்லமையும் பெற்றவர்களாக வளர்ச்சி பெறுதல் என்ற தத்து வத்தை மாணவர்களுக்கு உணர் த்தவேண்டும்.


தோல்வியால் துவண்டு போகிறவர்கள், தலையை நிமிர்த்தி புதிய வாய்ப்புக்களை- மாற்றுவழிமுறைகளைத் தேடமாட்டார்கள். தோல்விகளுக்குள்ளேயே தொலைந்துபோய் விடுவார்கள். இதற்கு மாறாக தோல்வியை ஒரு பழநிலையாக அனுபவமாக கருதும் துணிகர மனநிலை கொண்டவர்கள், தோல்வியின் பின்பும் புதிய வாய்ப்புக்களை புதிய திசைகளில், புதிய நபர்களிடம் புதிய செயல்களில் தேடத்தொடங்குவர். முன்பைவிட அதிக மன ஊக்கத்துடன் இடையறாது தேடு வார்கள். அவர்கள் நிச்சயமாக வெற்றியின் சிகரங்கள் பலவற்றைத் தொட்டு நிமிர்ந்து நிற்பார்கள். வாழ்வில் சாதனையாளர்களாக புகழ்பெறு வார்கள்.

துணிவை இழக்காதவர்களாக மாணவர்கள் வளர்க்கப்படும் போது தோல்விகளை ஒரு மாறுதலாகவும் அனுபவமாகவும் நோக்குவர்.


சமநிலை என்பதை- நிதானத்தை இழக்காதிருப்பதற்கு மாணவர்கள் கற்றுக்கொள்ளும் போது தோல்விகளை மிதித்துக்கொண்டு மேலே மேலே ஏறிக்கொண்டே வருவார்கள்.

இவைபற்றியெல்லாம் பெற்றோரும் ஆசிரியர்களும் பிள்ளைகளுடன் விசுவாசத்துடன் பேசுங்கள்; தோல்விகள் அவர்களிடம் தோற்றுப் போய்விடும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





இலங்கைக்கு ஐந்து நாட்கள் பயணமாக நேற்றுமுன்தினம் கொழும்பு வருகை தந்த இந்தியாவின் முன்னாள் மத்திய அமைச்சரும் பாரதீய ஜனதா கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவிசங்கர் பிரசாத் உள்ளிட்ட 6 பேர் கொண்ட குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டனர். இந்தக் குழுவினர் யாழ்.ரில்ஹோ விருந்தினர் விடுதியில் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடியதோடு, யாழ். அரியாலை நாவலடிப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வீடுகளையும் பார்வையிட்டனர். அத்தோடு, அப்பகுதி மக்களுடனும் சந்திப்பை மேற்கொண்டிருந்தனர். இலங்கை பண்டாரநாயக்க சர்வதேச கழகத்தின் அமைப்பின்பேரில் இந்தியக் குழுவினர் இலங்கை வருகை தந்திருந்தனர்.

(படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

## விடுதலைப் புலிகளால் கொழும்பில் மறைத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரம் கிலோ குண்டு

### அதிர்ச்சியில் படையினர்

(கொழும்பு)

**கொழும்பு நகரப் பகுதியில் விடுதலைப்புலிகளால் கொண்டு வரப்பட்ட தலா 500 கிலோ எடையுள்ள இரண்டு பாரிய குண்டுகளும், பெருமளவு ஆயுதங்களும் இன்னமும் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவலையடுத்து, பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் பாரிய தேடுதல் வேட்டையினை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

குறித்த தகவலை ஆங்கில ஊடகமொன்று வெளியிட்டுள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் வழங்கிய தகவலையடுத்தே இந்த ஆயுதங்கள் பற்றிய விபரம் தெரியவந்துள்ளது.

விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த குறித்த நபர் வெலிக்கடைச் சிறை அதிகாரியிடம் எழுத்து மூலம் தெரிவித்திருந்தார்.

அவரது கடிதத்தில், தலா 500 கிலோ எடை கொண்ட இரண்டு குண்டுகள், ஏழு ரி-56 துப்பாக்கிகள், ஒன்பது தன்னியக்க கைத்துப்பாக்கிகள், மூன்று இலகு இயந்திரத் துப்பாக்கிகள், ரி-56 துப்பாக்கிகளுக்கான 3 ஆயிரத்து 500 ரவைகள், 10 மில்லியன் ரூபா பெறுமதியான சொக்லேற் பொதி, 8 மில்லியன் ரூபா பணம் என்பனவே மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் மீது அத்தனகல மற்றும் கம்பஹா நீதிமன்றங்களில் நான்கு வழக்குகள் நிலுவையில் உள்ளதாக வும் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து, அவர் நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதனையடுத்து, மறைத்து வைக்கப்பட்டுள்ள குண்டுகளைக் கண்டுபிடிப்பதற்கு வசதியாக அவரை மூன்று நாட்கள் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்திடம் அனுமதிகோரினர்.

இதற்கமைய குண்டுகள் மறைத்து வைக்கப்பட்டுள்ள இடத்தைக் கண்டறிய மூன்று நாட்கள் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரிடம் அவரை ஒப்படைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அவரை சிறை அதிகாரிகளின் பாதுகாப்புடன் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் அழைத்துச் செல்ல நீதிவான் உத்தரவிட்டுள்ளார். இதையடுத்து, கொழும்பை அண்மித்த பகுதியில் மறைத்து வைக்கப்பட்டுள்ள இந்த பாரிய ஆயுதக் குவியலைக் கண்டுபிடிக்க பொலிஸார் தேடுதல் வேட்டையை ஆரம்பித்துள்ளனர். (அ-2)

## 750 அதிபர், ஆசிரியர்களுக்கு கஷ்ட, அதி கஷ்ட கொடுப்பனவு

(மல்லாவி)

முல்லை. கல்வி வலயத்தில் செயற்படும் 59 பாடசாலைகளில் 46 பாடசாலைகள் கஷ்டப் பிரதேசம் மற்றும் அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளாகத் தெரிவாகியுள்ளதாகவும், இதன் மூலம் 750 இற்கு மேற்பட்ட அதிபர், ஆசிரியர்களுக்கு கடந்த முதலாம் திகதியில் இருந்து மேற்படி பிரதேசங்களுக்குரிய கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும் முல்லை. வலயக் கல்விப் பணிப்பாளர் மாணிக்கவாசகர் ராஜகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,


முல்லை. கல்வி வலயத்தின் கீழ் 63 பாடசாலைகள் உள்ளபோதும் மக்கள் மீள் குடியேற்றத்தின் பின் 59 பாடசாலைகள் இயங்க தொடங்கி உள்ள நிலையிலேயே 46 பாடசாலைகள் கஷ்டப் பிரதேச மற்றும் அதிகஷ்டப் பிரதேசமாக தெரிவாகியுள்ளன.

இதன் மூலம் வெளி மாவட்டங்களில் இருந்து கடமைக்கு வரும் அதிபர், ஆசிரியர்கள் உட்பட 750 இற்கு மேற்பட்டவர்கள் பயனடையவுள்ளனர்.

கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களுக்கு ஆயிரத்து 500 ரூபா ஊக்குவிப்பு படியும் அதிகஷ்டப் பிரதேசத்தில் கடமையாற்றுபவர்களுக்கு 2ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவுகள் முன்னர் யுத்தம் நடைபெற்ற காலங்களில் வழங்கப்பட்டிருந்தநிலையில், பின் நிறுத்தப்பட்டு தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும், தெரிவித்துள்ளார். (அ-3-15)


## மரண அறிவித்தல்



### கலாபூஷணம் லயன் ஏ.வி.ஆனந்தன்

குளமங்கால் மல்லாகத்தினைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல சிற்பக்கலைஞராகிய லயன் அகஸ்ரின் வேலானந்தம் ஆனந்தம் அவர்கள் 03.06.2013 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் குளமங்காலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அகஸ்ரின் கிறகோரியா தம்பதிகளின் அன்பு மகனும் தேவதாசன், பெர்ணபொத் காலஞ்சென்றவர்களான ஞானசோதி, எமில்ஜேம்ஸ் ஆகியோர்களின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் புகழுடல் குளமங்காலில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று06.06.2013 காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு 6 , 7 ஆம் திகதிகளில் காங்கேசன்துறை வீதியிலுள்ள அவரது துர்க்காபுரம் சிற்பாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும். பின்பு 08.06.2013 (சனி) மதியம் 1 மணியளவில் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள திருமறைக் கலா மன்றத்தில் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டு மீண்டும் மாலை 4 மணிக்கு குள மங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மல்லாகம் 0776082335 (2942) தகவல் : குடும்பத்தினர்


## மாவனல்ல பிரதேச சபையின் தவிசாளருக்கு மரண தண்டனை

(மாவனல்ல)

சாரதி ஒருவரைப் படுகொலை செய்த குற்றவாளியான மாவனல்ல பிரதேச சபைத் தலைவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மாவனல்ல பிரதேச சபைத் தலைவர் கே.ஜீ.பியதிஸ்ஸ என்பவருக்கே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2003.03.12 அன்று கே.ஜீ. பிரியந்த பத்மகுமார என்ற சாரதி ஒருவரைப் படுகொலை செய்ததாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இந் நிலையில் குற்றவாளிக்கு, மாவனல்ல உயர் நீதிமன்ற நீதவான் மேனகா விஜேசுந்தர மரண தண்டனை வழங்கி தீர்ப்பு வழங்கியுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற வேளையில் அவர் பிரதேச சபைத் தலைவராக கடமையாற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நக்சலைட்டுக்களை எதிர்ப்பதற்கு மாநில அரசுகள் இணைய வேண்டும்

## பிரதமர் மன்மோகன்சிங் அழைப்பு

(புதுடில்லி)

**நக்சலைட்டுக்கள் தாக்குதல் உள்ளிட்ட எவ்வகையிலான பயங்கரவாதத்தையும் மத்திய அரசு, மாநில அரசுகளின் உதவியின்றி தடுக்க முடியாது. எனவே, மாநில அரசுகள் மத்திய அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும் என பிரதமர் மன்மோகன் சிங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

உள்நாட்டு பாதுகாப்பு, நக்சலைட்டுக்களில் தாக்குதல், தேசிய பயங்கரவாத தடுப்பு மையம் உள்ளிட்டவைகள் குறித்து விவாதிக்கும் பொருட்டு மாநில முதல்வர்கள் கூட்டம் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் ஆரம்பமாகியது.

இம் மாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றுகையில்,

நக்சலைட்டுக்களின் செயற்பாடுகளை இரும்புக்கரம் கொண்டு மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கு மாநில அரசுகளின் ஒத்துழைப்பு முழுமையாக தேவை.

மாநிலங்களின் உதவியில்லாமல் நக்சலைட்டுக்கள் தாக்குதல் உள்ளிட்ட எந்த வகையிலான பயங்கரவாதத்தையும் மத்திய அரசால் தடுக்க முடியாது. எனவே, இவ்விவகாரத்தில், மாநில அரசுகள் மத்திய அரசுடன் இணைந்து



செயற்பட வேண்டும்.

சட்டீஸ்கரில் நடைபெற்ற நக்சலைட்டுக்கள் தாக்குதல், ஜனநாயகத்திற்கு விரோதமான நடவடிக்கை அவர்களின் செயல்களை இனி ஒருபோதும் பொறுத்துக் கொள்ள இயலாது. நக்சலைட்டுகள் தாக்குதல்களை ஒடுக்கும் வண்ணம், மத்திய அரசு 2 அம்ச திட்டத்தை விரைவில் செயற்படுத்தவுள்ளது.

ஜனநாயகத்தில் நக்சலைட்டுக்களின் தாக்குதல்களுக்கு இனியும் இடமில்லை. 2012ஆம் ஆண்டை ஒப்பிடுகையில், ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில், பாதுகாப்பு நிலை மேம்படுத்தப்பட்டுள்ளது. ஜனநாயகத்திற்கு எதிராக போர் தொடுக்கும் எந்த ஒரு அமைப்பினரிடமும் பேச்சுவார்த்தை நடத்த மத்திய அரசு எப்போதுமே தயாராக உள்ளது.

நகர்ப்புறங்களில், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக கட்டமைப்பு ஏற்பாடுகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது என பிரதமர் கூறினார். (அ-2)

# ஆப்கானில் இருந்து செஞ்சிலுவை சங்க ஊழியர்கள் வெளியேற முடிபு

(காபூல்)

தீவிரவாதிகள் வெடிகுண்டு தாக்குதல் நடத்தியமையால் ஆப்கானிஸ்தானில் இருந்து சர்வதேச செஞ்சிலுவை சங்க ஊழியர்கள் வெளியேற முடிவு செய்துள்ளனர்.

**வெடிகுண்டு தாக்குதல்**

ஆப்கானிஸ்தான் நாட்டில் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் பல்வேறு சமுதாய நலத்திட்ட பணிகளை செய்து வருகிறது. இந்நிலையில் ஆண்டுதோறும் இதற்காக 450 கோடி ரூபா நிதி ஒதுக்கப்படுகிறது. அத்துடன் சுமார் ஆயிரம் ஊழியர்கள் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு ஜலாலாபாத் நகரிலுள்ள செஞ்சிலுவை சங்க அலுவலகத்தில் திடீர் வெடிகுண்டு தாக்குதல் நடைபெற்றது. இந்த தாக்குதலில் ஈடுபட்ட தற்கொலைப்படை தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டு வெறியாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் அலுவலக காவலாளி ஒருவர் பலியானார். மேலும் அலுவலகத்தில் இருந்த சர்வதேச ஊழியர் ஒருவர் உட்பட 3 பேர் படுகாயம் அடைந்தனர். 7 ஊழியர்கள் காயங்கள் ஏதுமின்றி மீட்கப்பட்டார்கள்.

**வெளியேற முடிவு**

இந்த தாக்குதலை அடுத்து செஞ்சிலுவைப் பணிகளை ஊழியர்கள் தற்காலிகமாக நிறுத்தி வைத்தனர். பலர் விடுமுறையில் சென்று விட்டார்கள்.

எனவே, இது குறித்து விவாதிக்க சர்வதேச செஞ்சிலுவை சங்க அவசர கூட்டம் நடைபெற்றது. அதில் பாதுகாப்பு கருதி செஞ்சிலுவை சங்க பணிகளில் ஈடுபடும் அனைத்து வெளிநாட்டு ஊழியர்களையும் மீளப் பெறுவது என்று முடிவு செய்யப்பட்டது. இந்தத் தகவலை காபூலில் உள்ள செஞ்சிலுவைச் சங்க செய்தித்தொடர்பாளர் ராபின் வாயூடோ நேற்று முன்தினம் வெளியிட்டார். இதனால் அங்கு பணியாற்றும் வெளிநாட்டு ஊழியர்கள் விரைவில் நாட்டை விட்டு வெளியேறுவார்கள்.

**தலிபான்கள் மறுப்பு**

செஞ்சிலுவை சங்க அலுவலகத்தில் தாங்கள் தாக்குதலை நடத்தவில்லை என தலிபான்கள் அமைப்பு மறுப்புத் தெரிவித்துள்ளது. மக்களுக்கு சிறப்பான சேவையாற்றி வரும் எவர் மீதும் நாங்கள் தாக்குதலை தொடுக்க மாட்டோம் என கூறியுள்ளனர். ஆனால் தலிபான்களே இந்தத் தாக்குதலை நடத்தியதாக நேட்டோவின் உளவு பிரிவு குற்றம்சாட்டியுள்ளது. (அ-2)

# கச்சதீவை மீட்க வேண்டும்; தமிழக முதல்வர் 'ஜெ'



(புதுடில்லி)

தமிழக மீனவர்களின் நலனைக் காக்க கச்சத்தீவை மீட்பதே ஒரே வழி என்று தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் சார்பில் பங்கேற்ற அமைச்சர் முனுசாமி தனது உரையில் குறிப்பிட்டார்.

புதுடில்லியில் நேற்று நடைபெற்ற முதல்வர்கள் மாநாட்டில், தமிழக முதல்வர் ஜெயலலிதா சார்பில், அமைச்சர் முனுசாமி பங்கேற்று உரையாற்றினார்.

அவரது உரையில்,

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுக்க மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக மீனவர்களை பாதுகாக்க, கச்சத்தீவை மீட்பது ஒரேவழி என ஜெயலலிதா வலியுறுத்தியிருந்தார். (அ-2)

### ஈரான் மீதான தடையிலிருந்து

# இலங்கைக்கான விலக்களிப்பு காலத்தை நீடித்தது அமெரிக்கா

ஈரான் மீதான தடையிலிருந்து இலங்கைக்கான விலக்களிப்பு காலத்தை அமெரிக்கா நீடித்துள்ளது.

ஈரானுக்கு அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈரானுடன் கொடுக்கல்-வாங்கல்களை மேற்கொள்ளும் நாடுகளுக்கு எந்தவிதமான சலுகைகளையும் வழங்குவதில்லை என அமெரிக்கா அறிவித்திருந்தது.


இந்நிலையில் சில நாடுகளுக்கு அமெரிக்கா விலக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



அந்த வகையில் இலங்கை, இந்தியா, சீனா ஆகிய சில நாடுகளுக்கு அமெரிக்கா இந்த சலுகையை வழங்கியுள்ளது.

இதன்படி ஈரானிடமிருந்து எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு விலக்களிக்கப்பட்ட காலம் மேலும் ஆறு மாத காலத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# சிறைக்குள் கைபேசியை கடத்திச் சென்ற பூனை



ரஷ்யாவிலுள்ள சிறை ஒன்றுக்குள் கையடக்கத் தொலைபேசியைக் கடத்திச் சென்ற பூனை பிடிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் கோமி மாகாணத்தில் உள்ள ஸ்கைடிவ்கார் அருகே உள்ள சிறைக்கு பூனை ஒன்று அடிக்கடி சென்று வந்துள்ளது.

இதனால் சிறை காவலர்கள் அதன் மீது சந்தேகப்பட்டு அதனைப் பிடித்து பார்த்தபோதே அதன் வயிற்றுப் பகுதியில் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் சார்ஜர்கள் இருந்தமை தெரிய வந்தது.

இதையடுத்து பொலிஸார் குறித்த பூனையை பிடித்தனர். சிறைக்குள் மேலும் என்னென்ன பொருட்கள் கடத்தி வரப்பட்டன என்று பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

முன்னதாக கடந்த ஜனவரி மாதம் பிரேசில் நாட்டு சிறை ஒன்றுக்குள் சென்ற பூனையின் உடம்பில் கையடக்கத் தொலைபேசிகள், பற்றரிகள், பிளேடுகள் உள்ளிட்டவை இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அமெரிக்க கூட்டமைப்பின் வருடாந்த மாநாடு


(கௌதமாலா)

அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலர் ஜோன் கெர்ரி தனது முதல் இலத்தீன் அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

ஆன்டிகுவா நாட்டில் 35 நாடுகள் பங்கேற்கும் அமெரிக்க கூட்டமைப்பின் வருடாந்த மாநாடு மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் பங்கேற்பதற்காகவே அவர் தனது குழுவினருடன் நேற்று முன்தினம் மாலை தனது பயணத்தை ஆரம்பித்தார்.

மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறவிருக்கும் மாநாட்டில் அவர் அதிகாரத்துவத்தின் முக்கிய மாற்றங்கள் குறித்த இந்த அமைப்பின் முக்கிய நோக்கங்களான மனித உரிமை, ஜனநாயகம், பொருளாதார வளர்ச்சி போன்றவற்றைக் குறித்த கலந்தாலோசனைக



ளிலும் பங்கேற்கவுள்ளார்.

எனவே, போதைப்பொருள் தடுப்பு குறித்தும் ஜோன் கெர்ரி விவாதிப்பார் என்று அவருடன் சென்றுள்ள அதிகாரிகள் குழு தெரிவித்தது. மேலும் சீரழிந்துள்ள வெனிசுலா நாட்டுடனான உறவுமுறைகளை மேம்படுத்துவது குறித்தும் மனித உரிமைக் குழுவிற்கான அமெரிக்க உறுப்பினர் தேர்வு குறித்தும் அவர் சக உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார் எனத் தெரிகின்றது. (அ-2)



ஐ.நாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் கூடியோ வெஸ்டர்வெல் (இடது), ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூனைச் சந்தித்து கைலாகு கொடுப்பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

போலி ஒருநாளும் உண்மையாகாது. வேடம் கலைந்தால் அதனுண்மை தெரிந்துவிடும்

*-சத்ய சாய்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இந்து ஆலயங்கள் மீது தாக்குதல் தேவலோகத்தில் அவசர மாநாடு

இந்து ஆலயங்கள் தாக்கப்பட்டமைக்கு புத்த பிரான் கடும் கண்டனத்தைத் தெரிவித்தோடு, இன்றைய சர்வமத மாநாட்டில் முக்கியமான தீர்மானம் ஒன்றை கொண்டு வருவதற்கு இந்தச் சபை அனுமதி தரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

மாநாட்டுக்குத் தலைவராக இருந்த விநாயகர், தங்களின் தீர்மானம் என்ன? என்று வினவினார்.

**புத்தர் :** சமயங்கள் மனிதர்களை வழிப்படுத்துவதற்கானவை. சமயத்தலைவர்கள் மக்களுக்கு ஒழுக்கமான வாழ்வியலை எடுத்துக் கூறி அவர்களை வழிப்படுத்த வேண்டும்.

ஆனால் இலங்கைத் தீவில் சில சமயங்களைத் சேர்ந்த மதகுருமார்கள் அரசியலில் ஈடுபடுகின்றனர். மதத் தலைவர்கள் அரசியலில் ஈடுபடுவது முற்றாக விலக்கப்படவேண்டும்.

ஆன்மீகத்தை போதிக்க வேண்டியவர்கள் அரசியலில் ஈடுபடுவதை முற்றாகத் தடுக்க வேண்டும் என சர்வ மதக் கடவுளர்களின் இம் மாநாடு ஏகமனதாக தீர்மானிக்கவேண்டும் எனக்கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

கௌதம புத்தபிரான் மேற்படி தீர்மானத்தை மொழிந்த போது மாநாட்டில் பலத்த கரகோஷம் எழுந்தது.

இதனிடையே குறுக்கிட்ட மாநாட்டுத் தலைவர் விநாயகர் புத்தபிரானைப்பார்த்து, உங்களின் தீர்மானத்தை அஸ்கிரிய, மல்வத்த பீடங்கள் ஏற்றுக் கொள்ளுமா? என்று வினவ,

**புத்தர் :** தீர்மானத்தை ஏற்காதவர்களை நான் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

எனது பெயரால் காவி தரித்தவர்கள் எனது போதனையை மட்டுமே மக்களுக்கு எடுத்தியம்ப வேண்டும்.

மதத்தலைவர்கள் அரசியலில் ஈடுபடும் போது ஆன்மீகத்தின் பெறுமானமும்-அதன் மீதான மக்களின் நம்பிக்கைகளும் பலம் இழந்து போகின்றன.

எனவே சமயகுருமார்கள், சமயத்தலைவர்கள் ஆன்மீக வழியில் மக்களை வழிநடத்த போதிக்க வேண்டும்.

தேவையாயின் அரசியல் தலைவர்களுக்கு, அரசியலில் ஈடுபடுவர்களுக்கு இறைநம்பிக்கை, நேர்மை, நீதி, உண்மை, விசுவாசம், பாவபுண்ணியம் என்ற கருத்தியல் பற்றி எடுத்தியம்பி அவர்களையும் நல் வழிப்படுத்தலாம்.

அதைவிடுத்து வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் தீக்குளிப்போம் என வெருட்டல் விடுவது எல்லாம் சமயத்திற்கு இழுக்கைத் தேடித் தரும் என்று விளக்கம் அளிக்க,

கௌதம புத்தபிரானின் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. புத்தபிரானைத் தொடர்ந்து யேசு பிரான் எழுந்தார்.

**யேசு பிரான்:** இலங்கையில் இந்து ஆலயங்கள் சேதம் ஆக்கப்படுவது ஆழ்ந்த கவலைக்கும் வேதனைக்கும் உரியது.

இச்செயலை வன்மையாக கண்டிக்கின்றோம். இந்தக் கண்டனத்தை வத்திக்கானும் விடுக்க வேண்டும் என்பது என் விருப்பம். அதேநேரம் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்கின்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இது வரை இந்து மதத் தலைமைகளைச் சந்திக்கவில்லை.

இத்தகையதொரு சந்திப்பிற்கான ஏற்பாடுகளையும் உரியவர்கள் செய்து கொடுக்கவில்லை. இதன் காரணமாக இந்து ஆலயங்களுக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் சர்வதேச ரீதியில் பதிவாகாமல் போனமை வேதனைக்குரியது.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், குறிப்பிட்ட சமயப் பிரதிநிதிகளை சந்திப்பது கூட பல்வகை சந்தேகங்களை ஏற்படுத்தக் கூடியது. இவ்வாறு யேசுபிரான் கூற, மாநாட்டில் சலசலப்பு ஏற்பட்டது. அச்சலசலப்புக்களின் மத்தியில் யேசுபிரான் தொடர்ந்து உரையாற்றினார். (தொடரும்)

# கப்பம் கோரிய நபர் கட்டுநாயக்காவில் கைது

தமிழ் வர்த்தகரிடம் கோடி ரூபாய் கொள்ளையடித்ததாக கூறப்படும் பிரதான சந்தேக நபரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதாக கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

நீதிமன்றத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட பிடியாணையின் பிரகாரமே குறித்த சந்தேக நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாகவும் கொள்ளை இடம்பெற்ற தினமே குறித்த நபர் நாட்டை விட்டு தப்பியோடி விட்டதாகவும் அந்த பிரிவினர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். மேற்படி வழக்கு கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதவானிடம் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூவர் உட்பட ஆறு பேர் நீதிமன்றத்தினால் அண்மையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களையும் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் மேற்படி வழக்கையும் அன்றைய தினத்திற்கே ஒத்திவைத்தார்.

வெள்ளவத்தையில் வெளிநாட்டு நாணயமாற்று நிலையத்தை நடத்துகின்ற நபர் ஒருவர் கொழும்பு கம்பனி வீதியிலுள்ள சம்பத் வங்கியிலிருந்து கோடி ரூபாய் வெளிநாட்டுப் பணத்தை பெப்ரவரி 12 ஆம் திகதி எடுத்துக் கொண்டு சென்றபோதே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மதிப்பீட்டாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

மதிப்பீட்டுத் திணைக்களத்தின் இலங்கை மதிப்பீட்டுச் சேவை வகுப்பு 3 தரம் II இன் உதவி மாவட்ட மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி ஜுலை 8 ஆம் திகதி 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகமொன்றில் சொத்து பரா மரிப்பு மதிப்பீட்டுக்கலை தொடர்பாக விஞ்ஞான பட்டதாரியாக இருக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை ஜுலை 8 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு ''பிரதான மதிப்பீட்டாளர், மதிப்பீட்டு நிலையம் இல 784, மருதானைவீதி, கொழும்பு -10 ''என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பதோடு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''உதவி மாவட்ட மதிப்பீட்டாளர் பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சை'' என தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட வேண்டும்.

அத்தோடு, பரீட்சைக் கட்டணமாக 700 ரூபாயை செலுத்தி, விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், வருமான தலைப்புக்கு 2003. 02.31 இல் பற்று வைக்கும் விதத்தில் ஏதாவதொரு மாவட்ட /பிரதேச செயலகத்தில் காசாக செலுத்தி பற்றுச் சீட்டை அதற்குரிய இடத்தில் ஒட்ட வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை நாளை வெள்ளிக்கிழமை வெளியாகவுள்ள வர்த்தமானியிலோ அல்லது வலம்புரி அலுவலகத்திலோ பார்வையிடலாம் (அ)

## சத்திய தரிசனம்




மக்கள் மந்திரங்களை கற்றுக்கொள்ள குருமார்களைத் தேடிச் செல்கின்றனர். சிலர் புனித ஞானிகளிடம் சென்று தாயத்துக்கள், யந்திரங்கள் (தீய சக்திகளை விரட்டும் மந்திர சக்தியுள்ள செப்புத் தகடுகள்) போன்றவற்றைப் பெற்றுக் கொள்கின்றனர். ஆனால், இவைகள் யாவும் பயனற்ற வீண் முயற்சிகளே. ஒருவன் தன் உடலை தந்திரமாகவும் தன் மூச்சை மந்திரமாகவும் தன் இதயத்தை யந்திரமாகவும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இவைகளை தனக்கு வெளியில் தேடவேண்டிய அவசியம் இல்லை. உங்கள் இதயத்தில் எழும் வார்த்தைகள் இனிமையாக இருந்தால் உனது மூச்சு ரிக்வேதமாகிறது. வீணான பேச்சுக்களைக்கேட்காமல் இனிமையான சொற்களுக்கே செவி சாய்த்தால் நீங்கள் கேட்பதெல்லாம் சாமகானமாக மாறுகிறது. இனிமையான செயல்களைச் செய்யும் போது நீங்கள் அனுதினமும் வேதத்தின் அதிதேவதையை திருப்தி செய்விக்கின்ற இந்தப் புனித வேதபுருஷ யக்ஞத்தை (வேதத்துவத்தை வெளிப்படுத்தும் சடங்கு) ஆற்றிக் கொண்டிருக்கின்றீர்கள் என்பது பொருள். வேதங்கள், சுயநலம் மிக்க ஆசைகளை மனிதன் துறக்கும் பொழுது மட்டுமே அவனுக்கு அமைதி கிட்டும் என அறிவிக்கின்றன. செல்வங்களைச் சேர்ப்பவர்களையும் தங்களுடைய புற அளவிலான வசதிகளுக்கு மேலும் வாய்ப்புக்களை சேர்ப்பவர்களையும் வேதங்கள் கண்டிக்கின்றன. கொடுப்பவனே பெறுகிறான். உண்மையில் அவன் அளிப்பதனை விடவும் அதிகம் பெறுகிறான்.

## சித்த மருத்துவ மாநாடும் கண்காட்சியும்

மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தால் சித்த மருத்துவ மாநாடும் கண்காட்சியும் எதிர்வரும் 10,11,12 ஆம் திகதிகளில் நவக்கிரி அரச மூலிகைத் தோட்டத்தில் காலை 9மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக சுதேச வைத்தியத்துறை அமைச்சர் சாலிந்த திஸநாயக்க, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திஅமைச்சர் கே. என் .டக்ளஸ் தேவானந்தா,வடமாகாண ஆளுநர் ஜி. ஏ.சந்திரசிறி ஆகியோரும்,சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ர.விஜயலட்சுமி, சுதேச வைத்தியத்துறை அமைச்சின்செயலாளர் லலித் கன்னங்கரா, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சு.அருமைநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



### எட்டு விதமான மானசீக புஷ்பங்கள்

பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கத்தை வாசம் மிகுந்த மலர்களைக் கொண்டு வணங்குவதுபோல இருதயத்திலுள்ள லிங்கத்தை வணங்குவதற்கு எட்டுவித மானசீக புஷ்பங்கள் சொல்லப்பட்டுள்ளன.

✦ உடல், வாக்கு, மனம் எனப்படும் முக்கரணங்களாலும் யாருக்கும் எந்தவித ஹிம்சையும் செய்யக்கூடாது. அஹிம்சை எனப்படும் அதுவே முதல் புஷ்பமாகும்.

✦ கண், காது, வாய், மூக்கு, மனம் என்னும் பஞ்சேந்திரியங்களையும் அடக்கி ஒருநிலைப்படுத்தவேண்டும். இந்திரிய ஜபம் என்பது இரண்டாவது புஷ்பமாகும்.

✦ தேகத்துக்கோ மனதுக்கோ துன்பம் நேருமானால் மனம் கலங்கக்கூடாது. தைரியமாக அவற்றை ஏற்கவேண்டும். தைரியம் என்பது மூன்றாவது புஷ்பம்.

✦ ஒருவர் எவ்வித தீங்கு இழைத்தாலும் அதைப்பொறுமையோடு சகித்துக்கொள்ளவேண்டும். அதைப் பொருட்படுத்தக்கூடாது. பொறுமை எனப்படுவது நான்காவது புஷ்பம்.

✦ தேகம், மனம், வாக்கு இம்மூன்றின் விடயத்திலும் எப்போதும் சுத்தமாக இருக்கவேண்டும். அவைகளின் ஈடுபாடுகளில் களங்கமோ, அசுத்தமோ கூடாது. ஸௌசம் எனப்படும் சுத்தியே ஐந்தாவது புஷ்பம்.

✦ கோபம் ஏற்படக்கூடிய சமயம் வந்தாலும் பிறர் உன்னைக் கோபம் கொள்ளுமாறு தூண்டினாலும் அதற்கு இடமளித்துவிடக்கூடாது. கோபத்தை அறவே ஒழிக்கவேண்டும். அத்ரோஹம் எனப்படும் இது ஆறாவது புஷ்பம்.

✦ அதர்மமான காரியத்தைச் செய்வதில் மனம் கூசவேண்டும். எண்ணத்திலும் பேச்சிலும் அதர்மமான காரியங்களில் ஈடுபட மனம் கூசி அதைச் செய்யாமல் தடுக்கவேண்டும். வெட்கப்படக்கூடிய இத்தன்மையையடைவதே ஹ்ரீ என்னும் ஏழாவது புஷ்பமாகச் சொல்லப்பட்டுள்ளது.

✦ மனதிலே எப்போதும் சத்தியத்தையே நினைக்கவேண்டும். பேச்சிலும் சத்தியத்தையே கடைப்பிடிக்க வேண்டும். சத்தியம் எனப்படும் இது எட்டாவது புஷ்பமாகும்.

*நன்றி: ஞானச்சுடர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலை மறைக்க முயற்சி

## - பாரதீய ஜனதா கட்சி குற்றச்சாட்டு

பரபரப்பான ஐ.பி.எல். சூதாட்டத்தை முன்னிறுத்துவதன் மூலம் தனது ஏனைய தேசிய ஊழலை மறைக்க காங்கிரஸ் முயற்சி செய்வதாக பாரதீய ஜனதா பொதுச் செயலாளர் ராஜீவ் பிரதாப் ரூடி குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஏற்கனவே, அம்பலமான 2ஜி அலைவரிசை ஊழல், நிலக்கரி ஒதுக்கீட்டு ஊழல், கொமன்வெல்த் ஊழல், ரெயில்வே முறைகேடு என பல ஊழல்களால் மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு ஆட்டம் கண்டுள்ள நிலையில், அந்த ஊழல் வரிசையில் தற்போது தனியார் அமைப்பான ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சூதாட்ட சர்ச்சையும் சேர்ந்து கொண்டது. கிரிக்கெட் ரசிகர்களுக்கு பலத்த அதிர்ச்சியைக் கொடுத்துள்ள இந்த ஐபிஎல் சூதாட்டம் குறித்து, பாரதீய ஜனதா பொதுச செயலாளர் ராஜீவ் பிரதாப் ரூடி தெரிவிக்கையில்,

"ஐ.பி.எல். சூதாட்டம் என்பது தனி ஒருவர் அல்லது தனி ஒரு அமைப்பின் ஊழலாகவே நான் கருதுகிறேன். அப்படியிருக்க, இந்த விவகாரம் குறித்து ஆராயப்படும் என்று அரசு கூறுகிறது. இந்த ஐ.பி.எல். ஊழலை முன்னிறுத்தி, காங்கிரஸ் தலைமையிலான அரசு, தான் ஈடுபட்டுள்ள வானளாவிய தேசிய ஊழலை மறைக்க முயற்சி செய்கிறது. அரசின் ஊழலானது கிரிக்கெட் ஊழலுக்கு இணையானதாக இருக்க முடியுமா என்று எனக்கு தோன்றவில்லை. தனியாருக்கு சொந்தமான இந்த ஐ.பி.எல். கிரிக்கெட் மூலம் மோசடி நடந்திருக்கிறது.

இதனால் கிரிக்கெட்டையோ அல்லது விளையாட்டை விரும்புவோரையோ ஏமாற்ற முடியாது. அரசு இதுகுறித்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என ராஜீவ் பிரதாப் தெரிவித்துள்ளார்.

## தொடர்கிறது இந்தியாவின்

# வெற்றிப் பயணம்




மினி உலகக் கிண்ண போட்டியின் முதல் பயிற்சி ஆட்டத்தில் இலங்கையை வீழ்த்திய இந்திய அணி இரண்டாவது ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணியை 243 ஓட்டங்களால் வீழ்த்தி அபார வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி தடுமாற்றத்துடன் ஆரம்பித்து, உற்சாகத்துடன் முடித்தது.

ஆரம்ப வீரர் முரளி விஜய் ஒரு ஓட்டத்துடன் வெளியேறினார். ஷிகார் தவான்(17), கோலி (9), ரோகித் சர்மா(10) போன்ற முன்னணி வீரர்களும் நிலைக்கவில்லை. ரெய்னா ஓட்டம் எதுவும் எடுக்காமல் பெவிலியன் திரும்பினார். 55 ஓட்டங்களில் 5 விக்கெட்டுகளை இழந்து இந்திய அணி தடுமாறியபோது, தினேஷ் கார்த்திக்கும், அணித் தலைவர் டோனியும் இணைந்து அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களை பதம் பார்க்க இந்திய அணியின் ஓட்டம் கிடுகிடுவென உயரத்தொடங்கியது.

77 பந்துகளை எதிர்கொண்ட டோனி, 6 பவுண்டரி, 4 சிக்சர்களுடன் 91 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தினேஷ் கார்த்திக் 140 பந்துகளில் 17 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 146 ஓட்டங்கள் எடுத்து'கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார. முடிவில் இந்திய அணி 50 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 308 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்கு 309 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி பயணித்த அவுஸ திரேலியா துடுப்பாட்ட வீரர்களுக்கு, இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளர் உமேஷ் யாதவ் சிம்ம சொப்பனமாக விளங்கினார். முன்வரிசை விக்கெட்டுகளை அவர் அடுத்தடுத்து கைப்பற்றி அசத்தினார். இதே போல் மற்றொரு வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மாவின் பந்துகளையும் எதிர்கொள்ள முடியாமல் அவுஸ்திரேலிய வீரர்கள், ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் விரைவில் ஆட்டமிழந்தனர்.

இதனிடையே விக்கெட் வீழ்ச்சியை கட்டுப்படுத்த வோக்ஸ் நிதானமான ஆடினார். ஆனால் மறுமுனையில் ஆடிய வீரர்கள் வந்த வேகத்தில் பெவிலியன் திரும்பியதால் அவரது முயற்சி பலிக்கவில்லை. இறுதியில் வோக்ஸ் 23 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அவுஸ்திரேலியா அணி 23.3 ஓவர்களில் 65 ஓட்டங்களுடன் சுருண்டது.

இப்போட்டியில் இந்திய அணி சார்பாக உமேஷ் யாதவ் 5 விக்கெட்டுகளையும் இஷாந்த் சர்மா 3 விக்கெட்டுகளையும் அஸ்வின் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் உரிமையாளரான ராஜ்குந்தராவும் அவரின் காதல் மனைவி ஷில்பா ஷெட்டியும்.....

## இன்று ஆரம்பமாகிறது

# மினி உலகக் கிண்ணம்

மினி உலககிண்ணம் என்று அழைக்கப்படும் ஐ.சி.சி. சம்பியனஸ் கிண்ணக் கிரிக்கெட் 1998 ஆம் ஆண்டு பங்களாதேசில் அறிமுகமானது. இதன் முதற் போட்டியில் தென்னாபிரிக்கா அணி மேற்கிந்தியத் தீவை வீழ்த்தி சம்பியன் கிண் ணத்தை சுவீகரித்தது. அதைதொடர்ந்து 2 ஆண் டுக்கு ஒரு முறை சம்பியன்ஸ் கிண்ணப் போட்டி நடைபெற்று வருகிறது.

7ஆவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணப் போட்டி இங்கிலாந்தில் இன்று (வியாழக்கிழமை) ஆரம்பமாகிறது. எதிர்வரும் 23ஆம் திகதி வரை நடைபெறும் இந்தப்போட்டியில் 8 நாடுகள் பங்கேற்கின்றன. அவை இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. இரண்டு பிரிவிலும் உள்ள அணிகள் வருமாறு:

**"ஏ" பிரிவு**: அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இலங்கை, நியூசி லாந்து.

**"பி"பிரிவு:** இந்தியா, தெனனா பிரிக்கா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவு.

இந்தப்போட்டி "லீக்" மற்றும் "நொக அவுட்" முறையில் நடைபெறுகிறது. ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள ஏனைய அணிகளுடன் தலா ஒருமுறை மோதவேண்டும். "லீக்" முடிவில் புள்ளிகள் அடிப்படையில் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணி கள் அரை இறுதிக்கு தகுதிபெறும்.

.17ஆம் திகதியுடன் "லீக்" ஆட்டம் முடிவுற்று 19 மற்றும் 20ஆம் திகதிகளில் அரை இறுதியும் இறுதிப் போட்டி ஜூன் 23ஆம் திகதியும் நடைபெறும்.

இன்று நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் "பி" பிரிவில் இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதுகின்றன.

## பங்களாதேஷிலும் சூதாட்டம்

இந்தியாவில் ஐ.பி.எல். சூதாட்டம் தொடர்பாக 3 வீரர்கள், ஏராளமான தரகர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்பட்ட பரபரப்பு அடங்குவதற்குள், பங்களாதேஷ பிரீமியர் லீக் போட்டியிலும் சூதாட்டம் நடந்ததாக புகார் எழுந்துள்ளது.

இரண்டாவது சீசன் போட்டியின் போது, பெப்ரவரி 2ஆம் திகதி டாக்கா கிளாடியேட்டர்ஸ்- சிட்டகாங் கிங்ஸ் அணிகள் விளையாடின. இப்போட்டியில் கிளாடியேட்டர்ஸ் நட்சத்திர வீரரும், தேசிய அணியின் முன்னாள் அணித் தலைவரு மான அஷ்ரபுல், எதிரணி தோல்வியடைவதற்காக 12800 டொலர்கள் பணம் கொடுத்ததாகவும், அவர் கொடுத்த காசோலை பணம் இல்லாமல் திரும்பி வந்ததாகவும் செய்திகள் வெளியாகின.

இதன் அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.), ஊழல தடுப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவு விசாரணை நடத்தியது. விசாரணையில், சூதாட்டத்தில் சம்பந் தப்பட்டதை அஷ்ரபுல் ஒப்புக்கொண டுள்ளார். இதனால் அவரை அனைத்து பிரிவு கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் இடைநிறுத்துவதாக பங்களாதேஷ் கிரிக்கெட்சபை அறிவித்துள்ளது.

## வருந்துகிறார் அஷ்ரபுல்

போட்டி நிர்ணயத்தில் ஈடுபட்ட தான குற்றச்சாட்டை பங்களாதேஷ் அணியின் துடுப்பாட்ட வீரர் மொஹ மட் அஷ்ரபுல் ஏற்றுக்கொண்டுள்ளார்.

தனது தவறுகளுக்காக முழு நாட்டிடமும், தனது ரசிகர்களிடமும், நண்பர்களிடமும் மன்னிப்பைக் கோரியிருப்பதாகவும் தனது செய்கைக்காக வருந்த மடைவதாகவும் தனக்காகப் பிரார்த்தனை செய்யுமாறு வேண்டுவதாக அவர் தெரிவித்தார்.

## ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி உரிமையாளரிடம் விசாரணை

ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் உரிமையாளர்களில் ஒருவரும், நடிகை ஷில்பா ஷெட்டியின் கணவருமான ராஜ்குந்தராவிடம் நேற்று காலை டில்லி பொலிசார் விசாரணை நடத்தினார்கள். சுமார் 2 மணி நேரங்களுக்கு மேல் நடைபெற்ற விசாரணையில் ராஜஸ்தான் ரோயல்ஸ் வீரர்கள் 3 பேரும் சூதாட்ட தரகர்களுடன் தொடர்பு, சூதாட்டத்தில் ஈடுபட்டது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

# பதவி விலகினார்

சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பின் தலைவரான ரிம் மே தனது பதவியிலிருந்து விலகியுள்ளரார். சர்வதேசக் கிரிக்கெட் சபை கிரிக்கெட்டை முகாமை செய்யும் விதம் தொடர்பாக அதிருப்தி அடைந்த நிலையிலேயே அவர் பதவி விலகியுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற சர்வதேசக் கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் செயற்குழுவின் வீரர்களுக்கான பிரதிநிதிக்கான தேர்தலில் லக்ஷ்மன் சிவராமகிருஷ்ணனின் சர்ச்சைக்குரிய விதத்தில் தோற்கடிக்கப்பட்ட ரிம் மே, அதன் காரணமாக அதிருப்தியடைந்துள்ளார்.

தான் தோற்கடிக்கப்பட்டமை குறித்து வருத்தம் கிடையாது எனக் குறிப்பிட்ட ரிம் மே, ஆனால் அந்தக் குறித்த தேர்தல் இடம்பெற்ற முறை அதிருப்தியை ஏற்படுத்தியதாகவும், நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திய தாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய காலங்களில் ஊழலும், தவறான நடவடிக்கைகளும், மைதானத்திற்கு வெளியேயான நடவடிக்கைகளுமே தலைப்புச் செய்திகளை ஆக்கிரமிப்பதாகத் தெரிவித்தார் ரிம் மே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'வன்னிப் பெரும் போர்'

# கிளி.-முல்லை. நட்புக்கிண்ண கிரிக்கெட் நாளை ஆரம்பம்

வன்னியின் பெரும் போர் என அழைக்கப்படும் கிளி.-முல்லை. நட்புக்கிண்ணத்திற்கான மாபெரும் கிரிக்கெட் போட்டி நாளை வெள்ளிக்கிழமை நாளை மறுதினம் சனிக்கிழமை ஆகிய தினங்களில் நடை பெறவுள்ளது.

கிளிநொச்சி மகா வித்தியாலய கிரிக்கெட் அணியும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும் மோதும் இப் போட்டியானது இம்முறை 3ஆவது போட்டியாக அமைகிறது.

ஏற்கெனவே முதன்முறையாக 2007-ம் ஆண்டு விளையாடப்பட்ட இப் போட்டியானது 2008-ம் ஆண்டும் இடம் பெற்று அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இடப் பெயர்வுகள், அழிவுகள் காரணமாக 2009, 2010, 2011, 2012-ஆம் ஆண்டுகளில் நடத்த முடியாத நிலையில் தற்போது இரு பாடசாலை அணிகளும தம்மை தயார் படுத்திக் கொண்ட நிலையில் போரின் பின்னரான முதலாவது போட்டியாகவும் இப்போட்டி அமைகின்றது. இதனால் இப போட்டிபலராலும் வரவேற்கப்படுவதுடன் கிறிக்கெட் ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்பிற்கு உள்ளாகியுள்ளது.


வன்னிப் பெரு நிலப்பரப்பு என கொள்ளப்படும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கிய பிரதேசங்களில் முதன் முதலில் நடைபெற்ற இரு பாடசாலை அணிகளுக்கிடையிலான மாபெரும் கிரிக்கெட் போட்டியாக இப் போட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது அதன் பின்னர் இதனை முன்மாதிரியாகக் கொண்டு சில பாடசாலைகள் இவ்வாறான போட்டிகளை விளையாடியும் உள்ளன.


2007-ம் ஆண்டு முதலாவது போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியின் பலமான ஆதிக்கம் காணப்பட்ட போதும் இடையில் ஏற்பட்ட மழையினால் ஏற்பட்ட தாமதம் அவர்களின் வெற்றி வாய்ப்பினை தடுத்து போட்டியை சமநிலைக்கு கொண்டு சென்றது.

2008-ம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி சிறப்பான வெற்றியை பெற்ற நிலையில் இரு அணிகளுக்கும் இப்போட்டி முக்கியத்துவமானதாக திகழ்கின்றது. வெற்றியை தக்க வைத்து வெற்றிப் பயணத்தைத் தொடர புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும் பதிலடி கொடுத்து வெற்றிச் சமநிலையை கொண்டுவர கிளிநொச்சி மகா வித்தியாலய அணியும் பலப்பரீட்சையில் குதிக்கவுள்ளன நாளை 7-ம் திகதி வெள்ளிக் கிழமை 12 மணிக்கு தொடக்க விழா நிகழ்வுகளை அடுத்து 1.00 மணிக்கு இப்போட்டி ஆரம்பமாகி மறுநாள் காலை 9 மணிக்கு தொடங்கும் இப் போட்டியானது அன்றைய தினம் மாலை 5 மணி வரை நடைபெற்று பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து இரண்டு பாடசாலைகளினதும் பழைய மாணவர்களுக்கிடையிலான 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட போட்டி எதிர்வரும் 9-ம் திகதி நடைபெறவுள்ளது.

இப் போட்டிகள் இரண்டும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.





## தேர்தலுக்...

எதிர்ப்பு தெரிவித்து கையெழுத்து வேட்டை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த கையெழுத்து வேட்டை, தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர்களினால் நேற்று வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரிவினை வாதங்களுடன் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துதல் புதிய தமிழ் ஈழம் நடவடிக்கையில் சிக்கிக்கொள்ளுதலே என்ற தொனிப்பொருளில் மக்கள் மத்தியில் துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டு கையெழுத்துக்கள் பெறப்பட்டுள்ளன. (செ-11)

## சர்வதேச சமூகம்...

பெற்றுவிட்டால், சட்டத்தை மீறி எம்மால் எதையும் செய்ய முடியாது எனக் கூறி பொது நலவாய அமைப்பிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்கான வழிமுறை குறித்தும் அரசு ஆராய்ந்துவருகின்றது.

குறிப்பாக, இன்று 13 தொடர்பில் ராஜபக்ஷ குடும்பத்துக்குள்ளேயே மோதல் மூண்டுள்ளது. அண்ணன் 13 பிளஸ் எனக் கூறினால், தம்பி 13 மைனஸ் எனக் கூறுகின்றார். மற்றுமொரு சகோதரர் இதுவிடயத்தில் இரட்டைவேடம் போடுகின்றார்.

அதேவேளை, இனவாதக் கும்பலின் கோரிக்கைக்கமைய அரசமைப்பிலிருந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமானால், இந்த நாடு நிச்சயம் இரண்டாகப் பிளவுபடும்.

அதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. அப்போது சர்வதேசம்கூட தமிழா பக்கமே நிற்கும் என்பதை ராஜபக்ஷ அரசு உணரவேண்டும்.

தமிழ்மக்களின்பிரச்சினைகளுக்கு 13வது திருத்தச் சட்டம் முழுத் தீர்வாகாது. தீர்வை நோக்கிச் செல்வதற்கான ஒரு படிக்கல்லாகவே அது அமைந்துள்ளது என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும் என்று ஐக்கிய சோசலிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார். (செ-11)

## அதிகாரங்களை பறி...

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

அரசாங்கம் கொண்டுவர தீர்மானித்துள்ள புதிய சட்டமூலத்தின் பிரகாரம் இனிமேல் எதிர்காலத்தில் மாகாணசபைகளின் எந்த ஒரு அதிகாரத்தையும் மீளப் பெற்றுக்கொள்ளும் சட்டமூலங்கள் இன்று இருப்பதைப் போல மாகாணசபைகளின் ஒப்புதலை பெற வேண்டிய அவசியம் கிடையாது என்ற நிலைமையும், அவை நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்றால் போதும் என்ற நிலைமையும், உருவாகின்றது.

அதேபோல் இரண்டு மாகாணசபைகள் சுய விருப்பத்தின் மூலம் ஒரே மாகாண சபையாக இணைந்து கொள்ளவும் முடியாது. இதற்கான சரத்தும் நாளைய (இன்றைய) அமைச் சரவை யோசனையில் உள்ளது.

திவிநெகும சட்டமூலம் கொண்டுவரப்பட்டபோது அது வட மாகாணசபையின் ஒப்புதலை பெறவேண்டும் என்றும், அந்த ஒப்புதலை ஆளுநா தர முடியாது என்றும் நாம் நீதி மன்றம் சென்றோம். நமது கோரிக்கையின் நியாயத்தை ஏற்றுக்கொண்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. இறுதியில் அந்த தீர்ப்பே பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு ஆபத்தாகவும் முடிந்தது.

இப்போது இந்த அரசாங்கம் இந்த சட்டத்தை கொண்டு வந்து விட்டு, வட மாகாண சபை தேர்தலை நடத்தி விட்டு, பொதுநலவாய மாநாட்டையும் நடத்திவிட்டு, அதன் பின்னர் நாடாளுமன்றத்தின் மூலம் மாகாணசபைகளுக்கு இருக்கின்ற பொலிஸ், காணி அதிகாரங்களை பறிக்க திட்டம் தீட்டியுள்ளது. உண்மையில் இந்த அரசாங்கம் மட்டும் அல்ல, இந்தியா, அமெரிக்க அரசாங்கங்களும் தமிழ் மக்களை நம்ப வைத்து ஏமாற்றிவிட்டன என்பது இன்று தெளிவாகின்றது.

அமைச்சரவைக்கு நாளை (இன்று) கொண்டுவரப்படும் இந்த யோசனை, பிறகு சட்ட மூலமாக நாடாளுமன்றம் கொண்டுவரப்படும். அதன் போது, அரசாங்கத்தின் இந்த நயவஞ்சக போக்கை எதிர்த்து அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் அல்லாத தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சி வரிசையில் உள்ள ஐக்கிய தேசிய கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளும் வாக்களிக்க வேண்டும். தமிழ தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினாகள் அனைவரும் நாடாளுமன்றம் சென்று தமது முழுமையான எதிர்ப்பை பதிவு செய்ய வேண்டும் என்று மனோ கணேசன். (செ-11)

## நியூசிலாந்...

துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள நியூஸிலாந்து வெளிவிவகார அமைச்சர் மறே மக்கேலிக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு உறுதியளித்துள்ளார்.

மேலும், இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் சிவில் யுத்தத்தை தொடர்ந்து இடம்பெற்றுள்ள நல்லிணக்க முன்னேற்பாடுகள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்து கொண்டார் என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (செ-11)

## வடக்குத் தேர்தல்...

பின் போது வடக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்து ஊடகவியலாளாகளினால் கேள்வி எழுப்பப்பட்டது இதற்கு பதிலளிக்கும்போதே அவர் மேற் கண்ட வாறு தெரிவித்தார்

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் நேற்று (நேற்று முன்தினம்) கூட்டம் ஒன்று இடம்பெற்றது. இதில் பலவிடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக நாடாளுமன்றத தெரிவிற்குழு தொடர்பில் அதிகளவில் பேசப்பட்டது எனத் தெரிவித்தார்.

அத்தோடு வடக்கு மாகாண சபைத்தேர்தலில் ஐக்கிய மக்கள்சுதந்திர கூட்டமைப்பில் போட்டியிடுவதா அல்லது ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியில் தனித்து போட்டியிடுவதா என்பது குறித்து இதுவரை எந்த முடிபும் எடுக்கப்படவில்லை ஆனால் கட்டாயம் தேர்தலில் போட்டியிடுவோம் எவ்வாறான தடைகள் வநதாலும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தேர்தல் நடைபெறும் எனவும் முதலமைச்சர் நானதான் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய நாடாளுமன்ற...

உறுப்பினருமான ரவிசங்கர் பிரசாத் உள்ளிட்ட 6 பேர் கொண்ட குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர். இதன்போது யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியல் யாழ்.சிவில் சமூகப் பிரதிநிதிகளைச்சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில யாழ். சிவில் சமூகப்பிரதிநிதிகள் சார்பில் நல்லை ஆதின குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய ஞான தேசிகர் சுவாமிகள் உள்ளிட்ட மதத தலைவர்கள யாழ்மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், புத்தி ஜீவிகள், மீனவர் சங்கப்பிரதி நிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்தச்சந்திப்பில் சிவில் சமூகப்பிரதிநிதிகளினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களாவன,

13ஆவது திருத்த சட்டத்தை நீக்க எடுக்கப்படும் முயற்சிகள். தமிழர்களின் காணிகள்இராணுவத் தேவைக்காக சுவீகரிக்கப்படுதல், தமிழர் தாயகப் பகுதிகளில் புத்த விகாரைகள் அமைக்கப்படுவதும் புத்தர் சிலைகள் வைக்கப்படுவதும் இனம் தெரியாத நபர்களினால் இந்து ஆலயங்கள் திட்டமிட்டு சேதமாக்கப்படுவது உள்ளிட்ட பலவிடயங்கள் சுட்டிகாட்டப்பட்டதோடு இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழையும் இந்திய இழுவைப படகுகளினால் வடபகுதி மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் என்பனவும் எடுத்து கூறப்பட்டது.

இதேவேளை இந்தச்சந்திப்பு தொடர்பான செய்திகளைச் சேகரிக்க ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுககப்பட்டது. இருப்பினும் ஒரு சில நிமிடங்கள் புகைப்படம் எடுக்க மட்டும் அனுமதிக் கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)


உலகில் எந்த மூலையிலும்
உங்களுக்காக ஒரு தொழில்
வழிகாட்டலும் உடனடி வாய்ப்புக்களும்
08-06-2013 சனிக்கிழமை காலை 9.00மணி
@ சிகரம் விரிவுரை மண்டபம்
பிரவேசம் இலவசம்
முற்பதிவுகளுக்கு 0773 616 798
சிகரம் 153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (DAMROவுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11
மி.அ.:edusikaram@gmail.com web:www.sikaram.lk
(c-3520)



மணல் மண் வேண்டுமா ?
* கட்டடவேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?
* இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?
* உங்கள் இடத்துக்கே கொண்டு வருகின்றோம்.
4 1/2 டிரக்டர் 20,500/=
தொடர்பு:- ராம்
072 637 8546
(C-3515)



ELTC Studies (Pvt)Ltd
FAST TRACK SPOKEN ENGLISH
ஆரம்பம் 5.6.2013
சிறுவர்களுக்கான இலவச ஆங்கில கற்கை நெறி
5 வயது தொடக்கம் 10 வயது வரையான சிறுவர்களுக்காக
U.K Qualified ... Mr K.Kethees ...
077 074 3131
(c-3523)


# பிரகீத்...

மல் போயிருந்தார்.

பிரகீத் எக்னெலிகொட பிரானஸில் வாழ்ந்து வருவதாக ஆளும கட்சி நாடாளுமன்ற உறுபபினர் அருந்திக்க பொனாண்டோ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனை நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதம நீதியரசர் மொஹான்பீரிசும்எக்னெலிகொட வெளி நாடொன்றில் வாழ்ந்து வருவதாக ஐக்கிய நாடுகள்அமைப்பில தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# உகண்டா ஜனாதிபதி...

சுசில் பிறேம் ஜெயந்த, நியோமல் பெரேரா, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, விமான நிலைய மற்றும் விமான சேவைகள் அதிகாரசபையின் தலைவர் பிரசன்ன விக்கிரமசூரிய ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

முக்கியமான நாடுகளின் அரசியல் தலைவர்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வரும் போதே, அந நாட்டின் தலைவர் விமான நிலையத்துக்குச் சென்று வரவேற்பது வழக்கம்.

ஆனால்தனிப்பட்ட பயணத்தை மேற்கொள்ளும் போதோ, விமானப் பயணத்தின் நடுவில் ஒரு நாட்டில் குறிப்பிட்டமணித்தியாலம் தங்கும் போதோ, நாட்டின் ஜனாதிபதிகள் சென்று வெளிநாட்டுத் தலைவர்களைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருப்பதில்லை.


இந் நிலையில் இலங்கையைக்கடந்து செல்லும் போது விமான நிலையத் தில் ஒரு மணித்தியாலம் தங்கியிருந்த உகண்டா ஜனாதிபதியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விமான நிலையத்தில் வைத்துச் சந்தித்து விருந்தளித்தமை குறித்து கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உகண்டாவுக்கு விஜயம் செய்து கடந்த மாதம் 17 ஆம் திகதியே கொழும்பு திரும்பியிருந்த நிலையில், இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளமை அரசியல் வட்டாரங்களில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை உகண்டா ஜனாதிபதி யொவேரி முசெவேனி கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

இந்நிலையில் உலகின் முக்கியமான ஒரு நாடாக உகண்டா இல்லாத நிலையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்நாட்டுக்குக் கொடுத்த முக்கியத்துவம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் கொண்டு வரப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தை உகண்டா எதிர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


பொருளியற் கல்லூரியின்
கண்ணீர் அஞ்சலி

திரு.நா.மதிகரன் (மதன்)
24.05.2013 அன்று விபத்திற்குள்ளாகி 04.06.2013 அன்று மரணமான எங்கள் அன்புக்குரிய மதன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
இயக்குநர், ஆசிரியர்கள், பணியாளர்கள்.
பொருளியற் கல்லூரி, யாழ்.நகர் - இணுவில்.
(சி-3516) BARATHY சித்தன்கேணி



அங்கே...
கனடாவில்
விரைந்து வாருங்கள் விரைவாக 40 தினங்களில் கனடா செல்லலாம்
◆ மென்பனி தூவும் இயற்கை A/C
◆ விரும்பிய துறையில் படிப்பு உழைப்பு
◆ உங்களுக்கே இங்கே சமூக அங்கீகாரம்
முக்கிய குறிப்பு:
யாழ்ப்பாணத்திலேயே பல்வேறு துறைகளில் கல்வியைத் தொடரக் கூடிய வாய்ப்பும், தொழில்வாய்ப்பும் நிறையவே உண்டு
[இந்த அடிக்குறிப்பு கௌரவ இயக்குநர் சபைக் கட்டளைப்படி இங்கே பிரசுரமாகிறது]
திசைகாட்டி பிறைவெற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 221 9016, 021 568 9090
(எல்லா நாள்களும் காலை 8 மணி – இரவு 8 வரை திறந்திருக்கும்)
(c-3525)



உடனடி வேலைவாய்ப்பு
சர்வதேச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திற்கு O/L or A/L பயின்ற யாழ்., கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா பிரதேச (18–28 வயது) ஆண், பெண் இருபாலாருக்குமான பதவி வெற்றிடங்கள்
* அனுபவம் தேவையில்லை
* தேவையாயின் பயிற்சியுடன் நிரந்தர தொழில்வாய்ப்பு
* பயிற்சியின் போது 12,000-35,000 கொடுப்பனவுகள்
* பின் 35,000 - 70,000
அழைக்க:
077 999 4807, 077 6969 459, 021 499 3166
(2756)



தேவை கணனித் தரவு இயக்குநர்
யாழ்.நகரிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு மேற்படி பதவிக்கு A/L சித்தியடைந்து 45 வயதிற்குட்பட்ட பெண்கள் தேவை
உள்ளகப் பட்டதாரிகளாயின் கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும்
2 வருடங்கள் கட்டாயமாகப் பணியாற்றல் வேண்டும்
தொடர்புக்கு:- 078 528 5342
(c-3525)



BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
Evening & Weekend Classes for Employees also available..
Batch1 : 10-06-2013
Batch2 : 15-06-2013
Batch3 : 17-06-2013
Batch4 : 22-06-2013
(c-3518)



நாங்கள் யாழ் குடாநாட்டில் சிறந்த சேவையுடன் கால்பதித்துள்ளோம்
வெளிநாடுகளுக்கான துரித தபால், பொதிகள் சேவை
✔ 220 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கான DHL மூலமான சிறந்த சேவையினை பெற்றுக்கொள்ளமுடியும்.
✔ சகல நாடுகளுக்குமான கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும். கட்டணங்கள் 1750 ரூபா மட்டுமே.
✔ 11 Kg இல் இருந்து சகல நாடுகளுக்குமான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன
✔ 11 kg இற்கு மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம். Uk 690.00, France 790.00, Germany 790.00, Canada 890.00
✔ உங்கள் இல்லங்களில் இருந்தவண்ணமே சகல நாடுகளுக்குமான பொதிகள் பொறுப்பேற்கப்பட்டு குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும். (pickup service)
✔ உங்கள் உறவுகளின் கைகளில் 3-5 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும்.
✔ குடாநாட்டில் இன்றிலிருந்து DHL உடன் இணைந்திருங்கள். சிறந்த சேவையினை பெற்று மகிழ்ந்திட

Golden Line Global Express
International Courier & Cargo Service
# 40, Racca Road, Jaffna
Tel: 0770166746 / 0212229119
(C-3524)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org